Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

வாரப் பதிப்பு THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஸூ சித்திரை மீ 26-ம் உ | ஞாயிற்றுக்கிழமை | (08 - 04 - 1990) | ஹிஜ்ரி 1410 | றம்ழான் 11 | ஓசை 49

## "பிரபாகரனிடம் மனிதநேய கண்டு பூரித்துப்போனேன்" - சுவிஸ்

தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை சுமார் இரண்டரை வாழ்க்கைக்குப் பிறகு சந்தித்த சுவிஸ் நாட்டுப் பத்திரிகையாள ஸ்ரெஸ்சிங்கர் பின்வருமாறு கூறுகிறார்.

பிரபாகரனை நான் ஒரு போராளியாகத்தான் கேள்வியுற்றே... முடைய நடவடிக்கையையும் பல வருட காலம் அவதானித்தேன். அவர் உலகிற் சிறந்த கெரில்லாப் போராளி என்றும் எனக்குத் தெரியும். இத்தகைய ஒருவர் கடந்த இரண்டரை வருட கால இந்திய இராணுவத்துக்கு எதிரான போராட்டத்துக்குப் பிறகு போர்க்குணமுடையவராகவும், மூர்க்கத்தனமானவராகவும், மென்மையும், நகைச்சுவையுடைய பண்புகள் இல்லாத ஒரு... (4-ஆம் பக்கம் பார்க்க)

## "மனம் சோரா மக்கள் ஆதரவு எமக்கு மலை போலுள்ளது" சுபன்

(மன்னார்)

**மக்கள் ஆதரவு மலைபோன்று இருக்கின்றது. அது இருக்கும் வரை எமது போராட்டத்தை எந்த சக்தியாலும் அழிக்க முடியாது என விடுதலைப் புலிகளின் மன்னார் பிராந்தியத் தளபதி சுபன் தெரிவித்தார்.**

மேலும் அவர் கருத்து வெளியிடுகையில்:



சடந்த காலங்களில் எமது ஆயுதப் போராட்டத்திற்கு எவ்வாறு எமது மக்கள் ஆதரவு அளித்தனரோ, ஜனநாயக நீரோட்டத்தில் கலந்திருக்கும் இவ்வேளையிலும் அதே போன்று ஆதரவை மேலும் மேலும் தந்து கொண்டே இருக்கின்றனர்.

எமது மக்கள் எமது போராளிகளைப் போன்றே இழப்புக்களை சண்டு மனம் சோராது இலட்சியத்தில் உறுதியுடனேயே இருக்கின்றனர்.

மக்கள் நடாத்துகின்ற சாத்வீசப்போராட்டங்கள் யாவும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தையும் எமது இயக்கத்தையும் சர்வதேச அங்கீகாரம் பெறச் செய்யும் என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கை.

நாம் ஆள்வதற்காக ஆயுதம் ஏந்தவில்லை. எமது எதிர்கால சந்ததி நிம்மதியாக, தலை நிமிர்ந்து வாழ்வதற்காகவே நாம் ஆயுத போராட்டம் நடத்துகின்றோம்.

ஸ்ரீலங்கா அரசு எமது நியாயமான கோரிக்கையை ஏற்றுக் கொண்டு எமக்கு பதில் சொல்ல வேண்டும். ஸ்ரீலங்கா அரசானது எம்மையும், எமது மக்களையும் ஏமாற்ற நினைக்குமாயின், எமது மக்களை பாதுகாக்க எம்மால் முடிந்த வரை உறுதியான நடவடிக்கையை மேற்கொள்ள தயாராக இருக்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

## மினிபஸ் தடம் புரண்டது 12 பேர் காயம்!

(யாழ்ப்பாணம்)

மினிபஸ் தடம் புரண்டதால் பன்னிரெண்டுபேர் காயமடைந்தனர். காரைநகர் - யாழ்ப்பாணம் சேவையில் இருந்த மினிபஸ் நேற்றுக் காலை 9-00 மணியளவில் கல்லுண்டாய் வீதியில் வயிரவர் கோவிலுக்கு அண்மையில் தடம்புரண்டது. இதில் காயம் அடைந்தவர்கள் யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

## கிணற்றுக்குள் எடுக்கப்பட்ட தபால்கள்பற்றி புலனாய்வு

(வவுனியா)

வவுனியா பிரதம தபால் நிலையத்திற்கு அருகான மயில் உள்ள கிணற்றில், பிரிக்கப் பட்ட நிலையிலிருந்து மீட்கப் பட்ட வெளிநாட்டுத் தபால்கள் சம்பந்தமாக தபால் புலனாய்வுப் பரிசோதகர் ஒருவரினால் விசாரணை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

மன்னார் மாவட்டத்திற்குரிய இத்தபால்கள் சிலவாரங்களுக்கு முன்னர் மேற்டடி கிணற்றுக்குள் இருந்து பிரிக்சப்பட்ட நிலையில் மீட்கப் பட்டவை குறிப்பிடத்தக்கது.

இதே சமயம், வவுனியா பிர (4ஆம் பக்கம் பார்க்க)

## அலுமினியப் பாத்திரம் வவுனியாக் கச்சேரியில் தேக்கம்

(வவுனியா)

கடந்தவருடம் இந்திய அரசால், வவுனியா மாவட்டத் ... காக வழங்கப்பட்ட அலுமினியப்பாத்திரங்கள் சரியான முறையில் மக்களுக்கு வழங்...

# துரோகமோ ஏமாற்றோ நாங்கள் செய்யவில்லை

## நியூயோர்க் ரைம்சிற்குப் பிரபா பேட்டி



(யாழ்ப்பாணம்)

**"நாம் எவரையும் ஏமாற்றவோ, துரோகம் செய்யவோ இல்லை. இதேவேளை எம்மை ஏமாற்றினால் அல்லது துரோகம் இழைத்தால் நாம் எதிர்ப்போம். ஆனால் எம்மை நம்பினால் நாமும் நம்பிக்கையாக நடந்து கொள்வோம்" என்று பிரேமதாசாவுடனான உங்கள் பேச்சுவார்த்தைகள் ஒரு தந்திரோபாயம் எனப் பலர் கருதுகிறார்கள் எனப் பத்திரிகையாளர் அநிதாப் பிரதாப் கேட்ட கேள்வி ஒன்றிற்கு தலைவர் பிரபாகரன் பதிலளித்தார்.**

மேலும் பத்திரிசையாளர் கேட்ட கேள்விகளுக்குத் தலைவர் பிரபாகரன் அளித்த பதில்களின் விபரம் வருமாறு,

கேள்வி:
இந்தியாவை நீங்கள் எதற்காக எதிர்த்தீர்கள்?

பதில்:
தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஸ்ரீ லங்காவில் தாம் தலையிட்டதாக இந்தியா கோருகிறது. உண்மையில் இந்தியா தனது நலன்களைப் பாதுகாக்கவே இங்கு வந்தது. எமது பிரச்சினைகளைப் புரிந்துணர்ந்து, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற எண்ணம் இந்தியாவுக்கு எப்பொழுதும் இருந்ததில்லை இந்தியா வேண்டுமென்றே ஸ்ரீ லங்காவின் இனப் பிரச்சினையைப் பெரிதாக்கியது. ஸ்ரீ லங்காவை நிலை குலையச் செய்து (புலிகளுட்பட சகல போராளிகளுக்கும் பயிற்சியும், ஆயுதமும் வழங்கியது) ஸ்ரீ லங்காவைத் தனது செல்வாக்குக்குள் கொண்டு வரப்பிரயத்தனம் செய்தது.

தமிழர்களைப் பாதுகாக்கப் போவதாகச் சொல்லிக் கொண்டு இந்தியா இங்குவந்த முறையும், பிற்பாடு எமது மக்களுக்கு எதிராக யுத்தம் ஒன்றைத்தொடங்கியதும் மன்னிக்க முடியாத குற்றங்கள் ஆகும். சாதாரண மக்கள் இழப்புகளுக்குள்ளானதால் யுத்தத்தை நிறுத்தும்படி, யுத்தம் ஆரம்பித்து மூன்று நாட்களுக்குப்பிறகு நான் இந்தியா (4ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் இந்திய மீனவர்; புலிகள் திருப்பி அனுப்புவர்

(யாழ்ப்பாணம்)

தமிழ் நாட்டிலிருந்து நேற்றும் யாழ். மாவட்டத்தில், காரைநகர்ப் பகுதிக்குக் சடல் எல்லையைத் ... புலிகளால் அழைத்துச் செல்லப்பட்டு, ஆலோசனை கூறிக் கொண்டிருந்த சமயம் மேலும் சில மீனவர் இலங்கைக் ... கைது செய்த இலங்கைக் கடற்படையினர், விடுதலைப் புலிகளால் அழைத்துச் செல்லப்பட்ட மீனவர்களையும் ...

## வெட்டுண்ட நிலையில்

மன்னார் மாவட்டத்திற் குரிய இத்தபால்கள் சிலவாரங் களுக்கு முன்னர் மேற்படி கிணற்றுக்குள் இருந்து பிரிக்

(வவுனியா)

கடந்தவருடம் இந்திய அர சால், வவுனியா மாவட்டத் தில் உள்ள அகதி மக்களுக்

காக வழங்கப்பட்ட அலுமினி யப்பாத்திரங்கள் சரியான முறையில் மக்களுக்கு வழங் கப்படாமல் வவுனியா கச்சேரி யில் வைக்கப்பட்டுள்ளது.

சுமார் நூறு சாக்குகளில் கட்டப்பட்ட அலுமினியப் பாத்திரங்கள் கச்சேரியில் உள்ள அறை ஒன்றிற்குள் வைக்கப்பட்டிருப்பதைதிறந்த ஜன்னல்கள் வழியாகப் பார்க் கக் கூடியதாக இருக்கிறது.

இப்பாத்திரங்கள் தகுந்த முறையில் மக்களுக்கு வழங் கப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)

றும் யாழ். மாவட்டத்தில், காரைநகர்ப் பகுதிக்குக் சடல் எல்லையைத் தாண்டி வந்த எழுபத்தைந்துக்கும் மேற் பட்ட மீனவர்கள் விடுதலைப்

கொண்டிருந்த சமயம் மேலும் சில மீனவர் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்திய மீனவர் சிலரைக்

புலிகளால் அழைத்துச் செல் லப்பட்ட மீனவர்களையும் தங்களிடம் ஒப்படைக்கு மாறும், தாம் இந்தியத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வெட்டுண்ட நிலையில் ஆணின் சடலம்

(மாங்குளம்)

நேற்று முன்தினம் கிளிநொச் சிக்கும் மாங்குளத்திற்கு இடையிலே உள்ள பகுதியில் முப்பத்தைந்து வயதுடைய ஆணின் சடலம் கண்டுபிடிக் கப்பட்டது. இச் சடலமானது பல்வேறு கூறுகளாக வெட்டப் பட்ட நிலையில் இருந்தது. இச் சடலம் மாங்குள ஆஸ்பத் திரியில் ஒப்படைக்கப்பட்டுள் ளது.

# கடைகளின் பெயர்ப் பலகைகள் அடுத்த மாதம் தமிழில்!

(யாழ்ப்பாணம்)

நேற்று மாலை யாழ். மத் திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற வர்த்தகர்கள் சங்கப் பொதுக்கூட்டத்தில், வர்த்தகர்கள் நிலையங்களில் இன்றிலிருந்து தமிழிற்கு முன் னுரிமை கொடுத்து, எமது வர்த்தக ஸ்தாபனங்களின் பெயர்ப் பலகைகளைத் தமிழில் பொறிப்போம் என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த ஆஞ்ச னேயர், டொமினிக் ஆகி யோர் முன்மொழிந்த தீர்மா னங்கள், அனைத்து வர்த்த கர்களாலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வர்த்தகர்கள் எல்லோரும் தமது ஸ்தாபனங்களின் பெயர்ப் பலகைகளை தமி ழிற்கு மாற்றுவதற்கு ஒரு மாத காலக்கெடு கேட்டதன் பொருட்டு, அதுவும் விடு

(4ஆம் பக்கம் பார்க்க)

# அரசு - விடுதலைப் புலிகள் நாளை மீண்டும் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவம் இலங் கையிலிருந்து வெளியேறிய பின் விடுதலைப் புலிகள் மக் கள் முன்னணித் தலைவர்க ளும்ஜனாதிபதிஆர்.பிரேமதா சாவும் நாளை திங்கட் கிழமை முதல் தடவையாகச் சந்தித் துப் பேசவிருக்கின்றனர்.

நேற்று ஏழாந் திகதி நடை பெறுவதாக இருந்த இப்பேச் சுவார்த்தைகள் ஒத்தி வைக் கப்பட்ட செய்தி நேற்று ஈழநாதம் பத்திரிகையில் முதல் பக்கத்தில் வெளிவந்தி ருந்தது.

நாளை திங்கட்கிழமை இரவு கொழும்பில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் விடுத லைப் புலிகள் மக்கள் முன்ன ணித் தலைவர் கோ. மகேந்தி ரராசா (மாத்தயா) பொதுச் செயலாளர் யோகரெத்தினம் யோகி,அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்கின் றனர்.

## மக்களின் கேள்விகளுக்கு 'மாத்தயா' பதிலளிக்கிறார்



☐ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா (மாத்தயா) ஈழநாதம் வாசகர்களின் 10 கேள்வி களுக்கு வாராவாரம் ஞாயிறு மலரில் பதிலளிக்கவுள்ளார்.

☐ வாசகர்கள் தங்களது ஆக்கபூர்வமான கேள்விகளை அனுப்பி வைக்குமாறு கேட் டுக்கொள்கின்றோம்.

ஆசிரியர்

## நூல் வெளியீடு

மறைந்த தேசாபிமானி திரு. திருஞானசேகரம் அவர் களின் புதியதோர் உலகம் செய்வோம்''எனும் கவிதைத் தொகுதி இன்று மாலை 2 மணியளவில் புத்தூர் மாவீரர் மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படும். இதில் பல பிர முகர்கள் தமது கருத்துரை களை வழங்குவார்கள். இவ் வைபவத்தை விடுதலைப் புலி கள் மாணவர் இயக்கம் ஏற்பாடு செய்துள்ளது.

# கல்மடுவில் புதிய இராணுவ முகாம்; விமானத்தள விஸ்தரிப்பு

(அம்பாறை)

கல்முனையிலிருந்து அம் பாறைக்குச் செல்லும் பாதை யில் கல்மடு என்ற இடத்தில் இலங்கை இராணுவம் புதி தாக ஒரு முகாம் திறந்து கொண்டிருப்பதாக அங் கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. மட்டக் களப்பு, அம்பாறை மாவட் டங்களில் பழைய முகாம்கள் மூடப்பட்ட பின்னர் கல்மடு வில் இப்பொழுது புதிதாக ஒரு முகாம் திறக்கப்படுகிறது.

### விமான நிலைய விஸ்தரிப்பு

இதே சமயம் மட்டக் களப்பு மாவட்டத்தில் வலை யிறவு விமான நிலையத்தைச் சுற்றி விமானப்படையினர் முட்கம்பி வேலி அடைத்துக் கொண்டிருப்பதாகவும் செய் திகள் தெரிவிக்கின்றன. மக் கள் குடியிருக்கும் வீடுகள், பாடசாலைகள் ஆகியவை களை உள்ளடக்கியே இந்த வேலி அடைக்கப்படுகிற தாம்.

# "ராஜீவைத் தாக்கியதைப் பற்றி எனக்கு கவலை இல்லை"

ஜூலை 30,1987இல் ராஜீவ் காந்தியை துப்பாக்கிப் பிடி யால் தாக்கிய இலங்கைக் கடற்படை மாலுமியாகிய விஜெயமுனி விஜித்தா றோகண டிசில்வா இன்று சுதந்திரமாகத் தனது கிராம மான பூஸாவில் நடமாடுகி றார். ஜனாதிபதியால் மன் னிப்பு வழங்கி சென்ற வாரம் விடுதலை செய்யப்பட்ட 700

(4ஆம் பக்கம் பார்க்க)

# மூவாயிரம் தமிழ் ராணுவத்தை றோ இன்னும் வளர்த்து வருகிறது

## அன்ரன் பாலசிங்கம்

(யாழ்ப்பாணம்)

மூவாயிரம் தமிழ்த் தேசிய இராணுவத்தினர் இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளனர். றோ இப்பொழுதும் அவர்களுக்கு உதவிகள் வழங்கி வருகின்றது நிதி உதவியும் இருப்பிட வச திகளையும் றோ அவர்களுக்கு கொடுத்து வருகிறது பாண் டிச்சேரியில் தமிழ்த் தேசிய இராணுவத்துக்கு வீடும் வாங் கிக் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு எதிராக எமக் குப் பாதுகாப்புத் தேவை எமக்குப் பாதுகாப்பை தமிழ் தேசிய இராணுவத்தைத் தெரியாத ஸ்ரீலங்கா இராணு வத்தால் வழங்கமுடியாது.

இவ்வாறு விடுதலைப்புலிக ளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று ஈழநாதத்துக்கு அளித்த விசேஷ பேட்டியில் தெரிவித் தார்.

அவர் தொடர்ந்து கருத் து தெரிவிக்கையில், இந்திய இராணுவம் கடந்த 24ஆம் திகதியன்று வெளியேறியது டன் தாம் பல இடங்களுக்கும் விஜயம் செய்து,வாழ்க்கையை வழமைக்குத் திரும்புவதற் தாக பாதுகாப்புப் படைகளு டன் கலந்துரையாடி, நாட் டில் சமாதானத்தை நிலை நாட்டுவதற்காக வழிவகை களை மேற்கொண்டதால் அரசாங்க ஸ்தாபனங்கள் வங் கிகள், பொலிஸ், பள்ளிக் கூடங்கள் ஆகியன செயற்படு

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஏப்பிரல் 12, 13, 14இல் கிளிநொச்சியில்எழுச்சிவிழா

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கலாசாரப் பிரி வின் கிளிநொச்சி மாவட்ட கலை,கலாசாரஅவைஅன்னை பூபதி நினைவாக நடாத்தும் மாபெரும் எழுச்சி விழா இம் மாதம் 12, 13, 14 ஆம் திகதி களில் கிளிநொச்சி மருதடி மைதானத்தில் தினமும் மாலை 7 மணிக்கு நடைபெற

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விருப்பசேவைக்கு

(நியூவீனஸ்) யாழ். நகரில் சிறந்த வீடியோ, ஓடியோ றெக்கோடிங்கிற்கும், ரி வி. அன்ரனா இணைப்பிற்கும் மற்றும் சகலவிதமான ரி. வி. டெக், றேடியோக்கள், மணிக்கூடுகள், எலக்றோனிக் சாதனங்கள் உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ள நாடவேண்டிய இடம்: NEW VENUS No: 60 Stanley Road, Jaffna.
B/538

நீரிழிவு வியாதிகளுக்கு உகந்த தனிக் கோதுமை அரிசியில் தயாரிக்கப்பட்ட ஆட்டாமா கோதுமை அரிசிக் குறுனல் கோதுமை அரிசி, றவ்வை எங்களிடமும் பிரதான கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். M. G. M. No-777 K. K. S. Road, JAFFNA
B/67

### கல்வி

G.C.E.(O.L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும் 23 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்குக் குறைந்த காலத்தில் வீடுகளிற் சென்று கற்பிக்கப்படும். எனது வீட்டிலும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

15.4 90 இலிருந்து காலை 6.00-7.00க்கு அல்லது மாலை 2.30-3.30 இற்குள் நேரடியாகச் சந்திக்கவும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி.
R/89

### தேவை

யாழ்நகரில் அமைந்துள்ள திருமணசேவை - ஏஜென்சி நிறுவனத்திற்கு கீழ்க்காணும் இடங்களிலிருந்து பிரதிநிதிகள் இலிகிதர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள் தேவை. எவரும் விண்ணப்பிக்கலாம். தகுதிவாய்ந்தவர்கட்கு முன்னுரிமை வழங்கப்படும்.

1. கிளிநொச்சி 2. குருநகர் 3. நெல்லியடி 4. சாவகச்சேரி 5. வேலணை 6. முல்லைத்தீவு முடிவு திகதி 18.4 90 விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: முகாமையாளர் இல. 79 யாழ் வீதி, வவுனியா.
R/94

---

அன்பர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

பிரபல மொத்த, சில்லறை, பலசரக்கு வியாபார ஸ்தாபனம்

## கே. பொன்னுத்துரை அன் கோ

பெரிய கடை
மன்னார்

(B-548)

---

## அலுமினிய தொழிற்சாலை
## தொழில் நுட்பவியலாளர்

மேற்படி பதவிக்கு அலுமினியத் தொழில் நுட்பத் துறையில் தகைமையும், அனுபவமும் பெற்றவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வி, மற்றும் தராதர, அனுபவ விபரங்களுடன் 15-4-1990 க்கோ அதற்கு முன்பாகவோ கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்படி தகுதியுள்ளவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விளம்பர இலக்கம் : 006

C/o ஈழநாதம்
வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

(B/595)

---

## அன்னை பூபதி
## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அந்நியரின் ஆளுகையில்
அவதியுற்றிருந்த மண்ணின்
- அவலந் தீர்க்க
அன்னை தொடுத்ததொரு
அறப்போரின் ஆளுமையால்
- அவதியுற்றோர்
பின்னாளில் போயொழிந்தார்
..டிவெள்ளி பூத்ததொரு

---

## இறுதி அறிவித்தல்

வெளிவாரிப் பட்டப் பாடநெறிகளான கலைமாணி (B.A.) விஞ்ஞானமாணி (புள்ளிவிபரவியல்) (B.Sc.) தொடர விரும்பும் மாணவர்கள் 9.4.90க்கு முன்னர் தங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள். எக்காரணம் கொண்டும் பின்னர் அனுமதி வழங்கப்படமாட்டாது.

உதவிப்பதிவாளர்

## பட்டப்படிப்புகள் கல்லூரி

148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(R/83)

---

## Data Processing and Computer Programing in BASIC LANGUAGES

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**9 April 1990**

| | | |
|---|---|---|
| Basic Languages | - | 9-00 a. m. |
| Lotus 1, 2, 3 | - | 10-30 a. m. |
| Word Processing | - | 1-30 p. m. |

Contact

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, ST. PETERS LANE,
HOSPITAL ROAD,
JAFFNA.

(B/599)

---

## அக்குபங்சர் வகுப்புகள்

பயிற்சி வகுப்புக்கள் யாவும் 1.5-90 இல்


# ரூபவாஹினியில் முதன்முதலாக தொடர் தமிழ் ரெலிறாமா

## வர்த்தகர்களிடம் உதவி கோரிக்கை

(கொழும்பு)

ரூபவாஹினியில் முதன் முதலாக நீண்ட தொடர் தமிழ் டெலிடிராமா ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

'மலையோரம் வீசும்காற்று' என்ற 12அங்கங்களைக் கொண்ட மலையக மண்வாசனையைத் தழுவிய இந்த நாடகத்தை மலையக எழுத்தாளர் கே. கோவிந்தராஜ் எழுதி பி. விக்கினேஸ்வரன் நெறிப்படுத்தியுள்ளார்.

ரூபவாஹினியில் வாரத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சிங்கள தொலைக்காட்சி நாடகங்கள் ஒளிபரப்புகின்றன. இவை தனியார் வர்த்தக உபயகாரர்களின் உதவியுடனேயே தயாரிக்கப்பட்டு ஒளிபரப்பாகின்றன.

இந்த நாடகத்தை ரூபவாஹினியே தயாரித்துள்ளது.

இந்த நாடகத்தை ஒளிபரப்ப ரூபவாஹினி தனியார், முதலாளிகளின் உதவியை நாடியுள்ள .

உதவி வழங்கப்படும் உபயகாரர்களின் நிலையைப் பொறுத்தே ரூபவாஹினியில் தமிழ் டெலி டிராமாக்களின் எதிர்காலம் அமையலாம் எனக் கூறப்படுகிறது.

தமிழ் வர்த்தக நிறுவனங்களும் பொதுவாக சிங்கள நாடகங்களுக்கே தமிழர்கள் உட்பட பெரும்பாலான ரசிகர்கள் பார்ப்பதால் விளம்பர உதவி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


### யாழ்நகரில் இன்றைய சினிமா

**வின்சர் - யாழ்**
10.30, 2.30, 6.30
சிவகுமார்-சுஜாதா நடித்த
**அன்னக்கிளி**
(புதியபிரதி)

101 வது நாளாக!!
**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
**மனோகரா - (யாழ்)**
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, ரூபினி, நடித்த
**மனிதன்**
(கலர்)

**ராஜா (யாழ்)**
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
102 நாள் வெற்றிநடை போடுகிறது
**ராஜாதி ராஜா**
(கலர்)

---

## இலங்கை வங்கி

நிவாரணக் கொடுப்பனவு ரூ. 1000/-
உற்பத்தித் திறன் கொடுப்பனவு ரூ. 4000/-

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சகல கிராம சேவகர் பிரிவுகளிலும் மேற்படி கொடுப்பனவுகளை பெற அனுமதி பெற்றிருந்தும் இதுவரை அதற்கான பணத்தைப் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கான கொடுப்பனவுகள் 09.04 1990 திங்கட்கிழமை இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளை மூலமாக வழங்குவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர்
யாழ்ப்பாண மாவட்டம்,
(B/734)

---

## அன்னை பூபதிக்கு ஆயிரமாம்

சேவை

எம்மிடம் சகல சமயத்தையும் சேர்ந்த உள்நாட்டு வெளிநாட்டு மணமக்கள் உண்டு. நீங்கள் நேரடியாகவோ அல்லது கடித மூலமாகவோ தொடர்பு கொள்ளவும். மணப்பந்தல் இல. 79 யாழ் வீதி வவுனியா. R/95



- புனித மண்ணில்
பூபதித்தாய் விதையான
- ஈழமண்ணில்
புதிய யுகம் பூத்திடும் பார் விரைவிலேயே!

**கந்தர்மடம் வாழ் மக்கள்**

(B/714)



பயிற்சி வகுப்புகள் யாவும் 1-5-90 இல்
ஆரம்பமாகின்றன.

1. அக்குபங்சர் பயிற்சி. M Ac. F. (ஆங்கிலமொழிமூலம்)
(சர்வதேச பல்கலைக் கழகப் பரீட்சை)
போதனாசிரியர்: Dr. V. S. K. சிவலோகநாதன்
2. அக்குபங்சர் பயிற்சி M. Ac. A. (தமிழ்மொழி மூலம்)
(இலங்கை அக்குபங்சர் சங்கப் பரீட்சை)
போதனாசிரியர்: Dr. V. P சுந்தரராஜன்

பிரதம பரீட்சையாளர்: Dr. அன்ரன் ஜெயசூரியா அவர்கள் வைத்தியர்களும் வைத்திய மாணவர்களும் மேற்படி பரீட்சைக்கு தோற்றும் வகையில் வகுப்புகள் நடைபெறும் மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் தொகையாதலினால் பதிவுக்கு முந்துங்கள்.

விபரங்கட்கு:

**சாயி மெடிக்கல்**
**அக்கடமி**
இல. 10, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (R/85)



அன்னை பூபதிக்கு ஆயிரமாம்
அஞ்சலிகள்



**SEASONS**
DEALERS IN TEXTILES
11, Modern Market
CHAVAKACHCHERI.
(B/ 519)




தியாக வேள்வியில் ஆகுதியாகிய அன்னை

## பூபதி கணபதிப்பிள்ளைக்கு

# எங்கள் அஞ்சலிகள்!



ஆண்ட தமிழினத்தின்
ஆணவத்தை அறியாது
பூண்ட மறக்கோலப்
புலிகளினை உணராது
நீண்ட படையணியாய்
நெஞ்சுயர்த்தி வந்தவர்கள்
ஈண்டு அவர் செய்த
இன்னல்களைக் கண்டெழுந்து
தமிழீழமதைக் காக்குமொரு
தன்மானப் போர்தொடுத்து
தனையழித்த எங்கள்
தாயே பூபதியே!
உன்னையெங்கள்
உள்ளத்தினுள் இருத்தி
அஞ்சலிகள் செலுத்துகின்றோம்!



**பருத்தித்துறை மீனவர் சங்கம்**
(R/87)



அனைவருக்கும் தமிழ் — சிங்கள
புதுவருட வாழ்த்துக்கள்!

**திருப்பதி ஸ்ரோர்ஸ்**
பெரியகடை,
**மன்னார்.**
(B/545)



**ஈழநாதம்**
**மக்கள் தினசரியின்**

சாவகச்சேரி
**விற்பனையாளர்கள்**

பரம்ஸ் புத்தக நிலையம், சாவகச்சேரி
அம்பாள் பார்மசி, சாவகச்சேரி
ஐயாத்துரை அன் சன்ஸ், சாவகச்சேரி
மங்களா மல்ரி சொப், சாவகச்சேரி
உங்கள் பிரதியை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

# மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுக்களை ஈராக்கின் எச்சரிக்கை பாதிக்கலாம்



யாசிர் அரபாத்

பிரிட்டிஷ் பிரதமர் மாகிரட் தட்சருக்கு கன்சர்வேடிவ் அரசுக்கு தீவிரவாதிகளால் அண்மைக்காலமாக பிரச்சினைகள் எழுந்துள்ளன. பிரிட்டிஷ் கத்தோலிக்க தீவிரவாதிகள் (ஐரிஸ் கெரில்லாக்கள்) சம உரிமைகோரி கடந்த காலங்களில் போராட்டங்களை நடாத்தி வருகின்றனர்.

1984இல் திருமதி மாகிரட் தாட்சர் பேசவிருந்த வைபவம் நடைபெறும் இடத்துக்கு அருகில் குண்டு வெடிப்பு இடம் பெற்றது. அதில் அவர் மயிரிழையில் தப்பியதாக பிரிட்டிஷ் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு சில வன்முறைகள் நடைபெற்றன

தற்போது பிரிட்டனில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமனுடன் பேச்சு நடத்திய போதும் தீவிரவாத நடவடிக்கைகள் குறித்து திருமதி தட்சர் கவலை தெரிவித்துள்ளார்

இந்தியாவில் நடப்பவை போலவே பிரிட்டனிலும் நடைபெறுவதாக அவர் வட அயர்லாந்து பிரச்சினையை சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகில் எந்தவொரு நாடும் தீவிரவாதிகளை ஆதரிக்கவோ புகலிடம் அளிக்கவோ கூடாது என்றும் திருமதி தட்சர் அங்கு கூறியுள்ளார்.

சில தினங்களுக்கு முன்பு புதிய வரிச்சட்டத்தை எதிர்த்து இடம்பெற்ற வன்முறைகளுக்கும் தீவிரவாதிகளே காரணம் எனவும் அவர் சாடியுள்ளார். இங்குள்ள சிறைச்சாலை உடைக்கப்பட்டதற்கும் தீவிரவாத நடவடிக்கைகளே காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் சீக்கிய தீவிரவாதிகள் சிலர் பிரிட்டனில் இருப்பதாக பல தடவைகள் இந்தியா கூறி வந்ததும் திருமதி தாட்சருக்கு தெரியும். அவர்களை திருப்பி அனுப்புமாறும் இந்தியா கேட்டுள்ளது அதேசமயம் தென்னாபிரிக்காவில் தீவிரவாத நடவடிக்கைகளை தடுக்க பிரிட்டன் தென்னாபிரிகாவுக்கு உதவிகள் செய்து வருவதை பல நாடுகள் கண்டித்துள்ளன. பிரிட்டன் அதனைப்பற்றி பேசுவதேயில்லை.

அண்மையில் பிரிட்டனில் இடம்பெற்ற இடைத்தேர்தல் ஒன்றிலும் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு படுதோல்வி ஏற்பட்டுள்ளது. கன்சர்வேட்டிவ் கட்சிக்கு ஆதரவு குறைந்து வருவதையே இது காட்டுகிறது.

1992இல் நடைபெறவுள்ள பிரிட்டிஷ் பொதுத் தேர்தலை திருமதி தட்சர் முன் கூட்டியே நடாத்த விருப்பதாக பிரிட்டிஷ் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. எந்த அரசு மாறினாலும் பிரிட்டனில் தீவிரவாத நடவடிக்கைகள் மாற முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.



மார்கிரட் தட்சர்

## மத்திய கிழக்கு நிலைமை

மத்திய கிழக்கில் தற்போது ஓரளவு அமைதி ஏற்படுவதற்கு பேச்சுக்களும் நடைபெறுகின்றன. பலஸ்தீனிய இஸ்ரேல் பிரச்சினைகள் ஒருபுறமிருக்க தற்போது ஈராக்கும்-இஸ்ரேலும் ஒன்றையொன்று எதிர்த்து பேசி வருகின்றன.

1981இல் இஸ்ரேலிய யுத்த விமானங்கள் ஈராக்கின் அணு உலை மீது தாக்குதல் நடத்தியது. தற்போது அரபு நாடுகளில் இராணுவ நடவடிக்கைகளை கண்காணிக்க ஒபெக்-2 என்ற செய்மதியை விண்வெளிக்கு இஸ்ரேல் அனுப்பியுள்ளது. இதே போல 1938 இலும் இஸ்ரேல் செய்மதியொன்றை விண்ணுக்கு அனுப்பியது குறிப்பிடத்தக்கது.

இந்த செய்மதியின் உதவியுடன் இஸ்ரேலுக்கு எதிரான அரபு நாடுகளின் நடவடிக்கைகளை கண்டு கொள்ள முடியும் எனவும் இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இஸ்ரேல் மீது இரசாயன ஆயுதங்கள் மூலம் தாக்குதல் நடாத்தி அதனைத் தகர்த்துவி வோம் என ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் இஸ்ரேலை எச்சரித்துள்ளார்.

அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல் நாடுகளின் உளவுப் பகுதியின் கடந்த ஏழு வருடங்களாக அணுக்குண்டு தயாரிக்கும் யூரேனியத்தை தமக்கு விற்பனை செய்ய முயல்வதாகவும் இப்போது ஈராக் கூறுகிறது.

ஈராக் ஜனாதிபதியின் இந்த எச்சரிக்கையை ஜோர்தான், சிரியா போன்ற அரபு நாடுகள் ஆதரித்துள்ளன.

அணுக்குண்டுகள் தேவையில்லை என்றும் இரசாயன ஆயுதங்களே போதும் எனவும் ஈராக் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஈராக்கின் இந்த அறிவிப்பை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் கண்டித்துள்ளார். மத்திய கிழக்கில் ஈராக்கின் இந்த அறிக்கை மேலும் அமைதியைச் சீர்குலைக்கும் எனவும் திரு. புஷ் கூறியுள்ளார்.

ஈராக்கிற்கு அணுவாயுதக் கருவிகளை கொள்வனவு செய்ய முயன்ற ஈராக் பிரஜை ஒருவர் நாடு கடத்தப்பட்டார். இதனை ஈராக் மறுத்துள்ளது.

இஸ்ரேலும் ஈராக்கும் ஒன்றையொன்று தாக்கினால் பெரும் அழிவுகள் ஏற்படுவது மட்டுமன்றி மத்திய கிழக்கு சமாதானப்பேச்சு முயற்சிகளும் தடைப்பட்டுவிடும்.

இஸ்ரேல் அண்மையில் சோவியத்யூனியனுடன் புதிய உறவுகளை ஏற்படுத்தியுள்ளன. ஈராக், இஸ்ரேல் பிரச்சினை குறித்து எகிப்தும், சோவியத்யூனியனும் மௌனமாகவே உள்ளன.



ஜோர்ஜ் புஷ்

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி காட்டார் பிரான்ஸில் வைத்து பலஸ்தீனிய விடுதலை முன்னணித் தலைவர் யாசீர் அரபாத்துடன் மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.

1978 இல் இஸ்ரேலும், எகிப்தும் செய்துகொண்ட கேம்ப்டேவிட் ஒப்பந்தத்துக்கு காரணமானவரும் திரு. காட்டரே. ஆனால் அந்த நேரம் யாசீர் அரபாத்தை புறக்கணித்தே இது கைச்சாத்திடப்பட்டது.

## உலக அரசியல் நோக்கு

## தென்னிலங்கை அரசியல் ஒரு நோக்கு

# தமிழ் அமைச்சர்களால்



டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் வெளிநாடுகளில் கலந்து கொள்ளும் வைபவங்களில் இனிமேல் அந்த நாட்டில் உள்ள தூதுவர்கள் பங்குபற்றுவார்கள். இது நல்லதொரு திட்டமே. அமைச்சர் தொண்டமான் நகமாக எல்லாம். பிக்களும் கொழும்பில் இருப்பதைத் தவிர்த்து, அந்

இவ்வாறே என்று காரணம் சொல்லலாம். அதாவது தரப்படுத்தலால் பல தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல முடியவில்லை. இதற்காகவே புதிய கல்வி, உயர் கல்வி அமைச்சராக, ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகப் பட்டதாரியான லலித் அத்துலத் முதலியை ஜனாதிபதி

கொண்டு வந்தார். இவ்வாறாக ஒரு திட்டமில்லாமல் இவை ஒவ்வொரு அமைச்சர்களால் கொண்டுவரப்பட்டன.

திரு. அத்துலத்முதலி தேசிய பந்தோபஸ்த்து அமைச்சராக இருந்த போது தெற்கில் ஜே.வி.பி. யின் நடவடிக்கைகளை அறிந்தவர் வடக்கு கிழக்கின் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு முகம் கொடுத்தவர். பல பாடசாலைகள் அழிக்கப்பட்டன. இராணுவ முகாம்களாக்கப்பட்டன என்பது அவருக்குத் தெரியும். தற்போது நிலைமை வழமைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதால் இவற்றைத் திருத்தியும், கட்டியும் வடக்கு கிழக்கு பகுதி கல்வியில் அபிவிருத்தியடைய அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.



சந்திரிகா குமாரணதுங்க

வற்றை நிறுவினார். இதனை இன்று தமிழ் மக்கள் மறக்க மாட்டார்கள். ஜீ. ஜீ. க்கு கிடைத்த அமைச்சு கைத்தொழில் சம்பந்தமானதால். அவர் இந்த மூன்று தொழிற்

னர். அதில் அபிவிருத்தியும் காணப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகள் பாராளுமன்றக் கூட்டத் தொடரை பகிஷ்கரித்துள்ளன. ஆனால் சர்வகட்சி மகாநாட்டில் பங்கு பற்றியுள்ளன. நாட்டில் ஜனாதிபதி பிரேமதாஸ எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு தரவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதால் ஏதாவது குறைகள் கூறி எதிர்க்கட்சி என்ற தரத்தைக் காட்டுகின்றனர்.

இந்தியப் படைகள் தமிழர்களை அழிக்கின்றனர் என்று ஒரு நேரம் சொன்னவர்கள் இன்று வடக்கு-கிழக்கில் அமைதியில்லை என்று பல்வேறு கருத்துக்களை வெளியிடுகின்றனர்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தாய். மகள், மகன் மூவரால் பிரச்சினை. ஐக்கிய தேசியக் கட்சி குடும்பாதிக்கத்தை விரும்பாதது போல சுதந்திரக்கட்சிக்குள்ளும் குடும்பாதிக்கம் ஏற்படக்கூடாது என அவர்கள் விரும்புகின்றனர். திரு- அனுரா பண்டாரநாயக்கா அரசியலில் அண்மைக் காலங்களில் நடந்து கொண்ட விதங்களால் அவரைச் சற்று விலக்கவே கட்சி விரும்புகிறது. திருமதி சந்திரிகா (ஸ்ரீமாவோவின் மகள்) நாடு திரும்பியுள்ளார். அவருக்குத் தற்போது ஆதரவு பெருகி வருகிறது. சுதந்திரக்கட்சிக்குள் பிளவு வருமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.


**மக்கள் வங்கி அடைவு நகைகள் வழங்கல்**

**முல்லைத்தீவு, மன்னார் மாவட்டம்**

**முல்லைத்தீவு கிளை**

இக்கிளைக்குரிய நகைகளின் ஒரு பகுதி கடந்தவாரம் மாங்குளம் மக்கள் வங்கியில் வைத்து வழங்கப்பட்டன. மிகுதி அடைவு நகைகள் யாவும் இம்மாதம் 10ஆம்

# தமிழ்ப்பகுதிகளில் அபிவிருத்தி ஏற்படும்?



பிரேமதாசா

பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்துப் பேசிய ஜனாதிபதி பிரேமதாஸா நாட்டில் வறுமையை ஒழிப்பது, சகலருக்கும் வீடு, வேலை வாய்ப்பு என்பனவற்றை முக்கியமாக தமது உரையில் குறிப்பிட்டுள்ளார். ஊழல் மோசடிகள் தவிர்க்கப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். நமது நாட்டில் அவைதான் இன்று எங்கும் தலைதூக்கியுள்ளது. இதனை நடைமுறைப்படுத்தினால் நாட்டில் எல்லாமே சரியாகவும், பிரச்சினைகளின்றியும் நடைபெறும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் கண்டபடி வெளிநாடுகளுக்குச் செல்வதைக் கட்

இருப்பதைத் தவிர்த்து, அந்தந்தத் தொகுதிகளுக்குச் சென்று, மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறியுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் உண்மைதான். எம்.பிக்களைத் தேடி தொகுதி மக்கள் கடந்த காலங்களில் கொழும்புக்கு அலைந்து திரிந்தார்கள்.

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அண்மையில் அமைச்சர்களும் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். எல்லாரும் பதவி ஏற்றதும், அது செய்வேன்; இது செய்வேன் என்று வீராப்புப் பேசுவதை விட்டு செயலில் காட்டவேண்டும். சில அமைச்சர்களை அதே பதவியில் ஜனாதிபதி விட்டுள்ளார். அது அவர்களது திறமையினாலே. இந்த நாட்டில் இளைஞர்கள தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடக் காரணம் என்ன என்பதற்கு ஆணைக்குழு நியமிக்கப்பட்டது கல்விப் பிரச்சினையே முக்கியமானது என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1971 ஜே.வி பி. கிளர்ச்சியும் இதனால் தான் ஏற்பட்டது. தமிழ்த் தீவிரவாத நடவடிக்கைகளும்

துலத் முதலியை ஜனாதிபதி நியமித்துள்ளார். மகாபொல திட்டத்தைக் கொண்டு வந்தவரும் அவரே.

அவர் பதவியேற்றதும் பாடசாலைகளில் பிள்ளைகள் அனுமதிக்கப்படும்போது அரசியல் தலையீடோ? வேறு எந்தத் தலையீடோ இருக்கக் கூடாது எனக் கூறியுள்ளார். அத்துடன் மகாபொல வைபவத்தில் பேசும்போது, பல்கலைக் கழக அனுமதி சகலருக்கும் கிடைக்கும்படியாகக் கல்வித்திட்டம் மாற்றப்படும் என்றும் கூறியுள்ளார். இது வரவேற்கத்தக்கது. பல கல்வியமைச்சர்கள் வந்து ஒவ்வொரு திட்டங்களைக் கொண்டு வந்து மாணவர்களையும், ஆசிரியர்களையும் குழப்பியுள்ளனர். திரு. கன்னங்கரா இலவசக் கல்வியைக் கொண்டு வந்தார். ஜனாப் பதியுதீன் மஹ்முத் சுயபாஷையில் உயர்கல்வியைக் கொண்டு வந்தார், இதனால் ஆங்கில அறிவு மாணவர்களிடம் குறைந்தது, அத்துடன் என். சீ. ஜி. ஈ. என்ற பரீட்சையையும கொண்டு வந்தார். திரு. ரணில் விக்கிரமசிங்கா 'ஒப்படையை'

வேண்டும்.

திரு. அத்துலத் முதலியின் கல்வி அமைச்சுக்கு உதவியாக வவுனியா எம் . பி . திருமதி. மனோகரி புலேந்திரன் நியமிக்கப் பட்டுள்ளார். தமிழ்ப் பகுதிகளில் அண்மைக் காலங்களில் கல்வித்துறை எப்படிப் பாதிக்கப்பட்டது , ஆசிரியர் பற்றாக்குறை, மாணவர்களுக்குப் பல வசதியீனங்கள் போன்ற பல பிரச்சினைகளை அவர் அறிந்தவர். எனவே அவர் இச் சந்தர்ப்பத்தில் தமிழ் முஸ்லிம் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு சிறந்த பணியாற்ற வேண்டும் எனத் தமிழ் முஸ்லிம் மக்கள் விரும்புகிறார்கள்.

இலங்கையில் எத்தனையோ தமிழ் அமைச்சர்கள் இருந்துள்ளனர் . அவர்களில் ஒரு சிலரே தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்திக்கு உழைத்தவர்கள் என்று சொல்லலாம், உதாரணமாக திரு ஜீ.ஜீ. பொன்னம்பலம் கைத்தொழில் அமைச்சராக இருந்த போதே காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, வாழைச்சேனைக் கடதாசித் தொழிற்சாலை என்பன

அவர் இந்த மூன்று தொழிற்சாலைகளையும் எமது பகுதிகளில் நிறுவினார்.

அதே போல வவுனியா எம் பி.திருமதி. மனோகரி புலேந்திரனும் தமது கல்வி இராஜாங்க அமைச்சர் பதவியால் வன்னிப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளின் குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என வன்னிப் பகுதி மக்கள் விரும்புகிறார்கள்.

திரு . பொன்னம்பலத்துக்கும், திருமதி . புலேந்திரனுக்கும் கிடைத்த அமைச்சுக்கள் போல வேறு ஒரு தமிழருக்கும் கிடைக்கவில்லையென்றேகூறலாம்.

திரு.தொண்டமானும் கிராமிய தொழிற்துறை அமைச்சரான பிறகு கிளிநொச்சியில் பால் தொழிற் சாலையை நிறுவி அதனால் விவசாயிகளுக்கு மாடுகளை வளர்த்து பாலை உற்பத்தி செய்து விற்க வழிவகுத்தார். ஆனால் துரதிஷ்டவசமாக வன்முறைகளால் தமிழ்ப் பகுதிகளில் அதனைச் செயற்படுத்த முடியவில்லை ஆனால் மலையகத் தமிழர்கள் இந்த தொழிலில் இன்னும் ஈடுபட்டு வருகின்ற


திகதி முதல் முல்லைத்தீவு ஜெசி தியேட்டர் கட்டடத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி பண கரும பீடத்தினூடாக வழங்கப்படும். வழங்கும் திகதி பற்றிய மேலதிக விபரங்களை முல்லைத்தீவு மக்கள் வங்கி முகாமையாளருடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளவும்.

**மாங்குளம் கிளை**

இக்கிளைக்குரிய நகைகள் இம்மாதம் 17ஆம் திகதி மட்டில் மாங்குளம் வந்துசேரும் என எதிர்பார்க்கப் படுகிறது. நகைகள் வந்து சேர்ந்ததும் நகைகள் மீளளிப்பு ஆரம்பமாகும்.

வழங்கும் திகதி பற்றிய மேலதிக விபரங்களுக்கு மாங்குளம் மக்கள் வங்கி முகாமையாளருடன் இம் மாதம் 17ஆம் திகதிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளவும்.

**மன்னார் கிளை**

இக்கிளையில் 26 08 83 வரை அடைவு வைத்து 21.09.89 வரை மீளப் பெறுவதற்காக பணம் கட்டியவர்களுக்குரிய நகைகள் இப்மாதம் 10ஆம் திகதியளவில் மன்னார் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2ஆம் கட்டமாக 26 08 83ன் பின்னர் அடைவு வைத்த நகைகள் மன்னாருக்கு கொண்டுவரப்படும்.

முதல் கட்ட நகைக்குரியவர்கள் இம்மாதம் 10ஆம் திகதியின் பின்னர் மன்னார் கிளை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு வழங்கும் திகதிபற்றிய மேலதிக விபரங்களை அறிந்து கொள்ளவும்.

- பிரதேசமுகாமையாளர்

**மக்கள் வங்கி**
**பிரதேசத்தலைமையகம்**
**யாழ்ப்பாணம்.**

(B/736)



**அனைவருக்கும் தமிழ், சிங்கள புத்தாண்டுவாழ்த்துக்கள் உரித்தாகுக!**

அழகிற்கு அழகு செய்யும் அழகிய தங்கப்பவுண் நகைகளுக்கு

**சோபனா ஜுவெல்லறி**

116 V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

B/516

ஈழநாதம்

## தோழிலாளிகள் முதலாளிகள் உறவை வலுப்படுத்த சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரிமண்டபத்தில் நேற்று நடைபெற்ற வர்த்தகர்களுடனான கூட்டத்தில் வர்த்தகர்களின் ஒற்றுமையைவலுப்படுத்தும் நோக்குடனும் தொழிலாளிகள் முதலாளிகள் ஒற்றுமையை உறுதிப்படுத்தவும் ஓர் வர்த்தகர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டதுடன் இதற்கு ஒரு பொது நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

இச்சங்கத்தின் தலைவராக லிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் க. மி. குலரட்ணமும் செயலாளராக சி நமசிவாயம் சிவகுமார் ஸ்ரோர்ஸ் உரிமையாளரும், பொருளாளராக வ. க. குணரட்ணம் குணரட்ணம் ஸ்ரோர்ஸ் உரிமையாளரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் மேலும் பதினைந்து செயற்குழு உறுப்பினர்கள் பல்வேறு பிரிவு வர்த்தகர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (லோ)

# உணவு உடை நீங்களே தந்தீர்கள்

# எம்மைப் போராளி ஆக்கினீர்கள்

(யாழ்ப்பாணம்)

''உணவில் இருந்து உடையணிகள் ஆயுதங்கள் என அனைத்தையும் நீங்களே தந்தீர்கள், ஆகவே நீங்களே எம்மைப் போராளிகளாக்கினீர்கள், எமது மக்களே எம்மை உலகத்திற்கு உயர்த்தி வைத்துள்ளார்கள்.'' என நேற்று யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் வலி காமப்பகுதி வர்த்தகர்சளுடன் நடந்த மிகப் பெரிய கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியல் இணைப்பாளர் ஸ்டான்லி டொமினிக் அவர்கள் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் உலகில் நடந்த பெரும் போராட்டங்களுக் கெல்லாம் ஒரு பெரிய நாட்டின் உதவி இருந்து வந்திருக்கிறது. எடுத்துக் காட்டாக உலகில் அமெரிக்க வல்லாதிக்கத்துடன்போரிட்ட வியட்னாமிய விடுதலைப் போராட்டத்திற்கு ரஷ்யா, சீனா சகல உதவிகளும் இருந்தது. அண்மைக்காலத்தில் ரஷ்யாவுடனும் ஆப்கன் அரசுடனும் போரிட் கெரில்லா அணிகளுக்கு அமெரிக்கா பாகிஸ்தானூடாக தேவையான அனைத்து உதவிகளும் செய்தது.

அதாவது கெரிலா முறைக்குத் தேவையான உணவு வகையிலிருந்து, சீருடை, ஆயுதம் என பல்வகை உதவிகளையும் செய்து வந்தது.

ஆனால் எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நாம் இவ்வாறு உலகின் மூன்றாவது வல்லரசை துரத்தியடித்ததினால் நாம் உலகில் நன்கு இனங்காணப்பட்ட ஒரு கெரிலா இயக்கமாக வளர்ச்சி அடைந்துள்ளோம் என்றார்.

இந்த வகையில் ஒவ்வொரு தமிழ்க் குடிமகனும் பெருமைப்பட வேண்டும்.

இதேபோல எமது நெடிய நீண்ட போராட்டத்தில், எதிர்காலத்திலும் முழுமனதுடன் பூரண ஒத்துழைப்பு அனைவரிடமும் இருந்து எமக்கு என்றும் இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில்வலிகாமப் பகுதிஅரசியல் இணைப்பாளர் ஆஞ்சனேயர் பேசும்பொழுது,

எமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தமிழிற்கு நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டும். அப்படி இருக்கும் போது நாம் எமது வர்த்தகஸ்தாபனங்களின் முன்பக்க பெயர்ப் பலகைகளை ஆங்கிலத்தில் அதற்கு முன்னுரிமை கொடுத்து பதித்து வைத்துள்ளோம். இது நாமே எமது தமிழ் மொழியை இழிவு செய்வது போன்றதாகிறது ஆகவே கூடிய விரைவில் எமது வர்த்தகஸ் தாபனங்களின் பெயர் பலகைகளை தமிழில் பொறித்து எமது தமிழை உயர்த்துவோம் என்று கூறினார்.

இக் கூட்டத்திற்கு ஆயிரக் கணக்கான வர்த்தகர்களும் ஊழியர்களும் சமூகம் தந்திருந்தனர். வர்த்தகர்கள் சங்கம் ஒன்று இக்கூட்டத்தில்

## அரச கருமமொழி அதிகாரி வவுனியா விஜயம்

(வவுனியா)

அரச கருமமொழிகள் திணைக்கள அதிகாரிகளில் ஒருவரான திரு. சிவராஜசிங்கம் வியாழக்கிழமை (5. 4. 90) திடீரென்று வவுனியா கச்சேரிக்கு விஜயம் செய்தார். இந்த விஜயத்தின் போது தமிழ் மொழி அமுலாக்கல் விடயம் பற்றி அரச அதிகாரிகளுடன் ஆராயப்பட்டது.

பல திணைக்களங்களில் தமிழ் மொழி அமுலாக்கலில் ஏற்படும் சிக்கல்கள் பற்றி அவருக்கு விளக்கங்கள் அளிக்கப்பட்டன. இவற்றை நிவர்த்தி செய்வதாக அவர் உறுதியளித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

அரச கரும மொழிகள் அமுலாக்கம் சம்பந்தமாக கமிஷன் ஒன்று நியமிக்கப்பட இருப்பதாகவும், இக்கமிஷனின் மூலம் பல மொழிச்சிக்கல்கள் நீக்கப்படும் எனவும் அவர் தெரிவித்திருப்பதாகக் கூறப்பட்டது.

இதேசமயம், தமிழ்மொழி அமுலாக்கலில் விடுதலைப் புலிகள் அதிக அக்கறை எடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. (தி)

## வவுனியாவில் தற்கொலை அதிகரிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் அண்மைக் காலமாகத் தற்கொலை மரணங்கள் அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சேமமடு, செட்டிகுளம் பகுதிகளில் தற்கொலை மரணங்கள் இந்த ஆண்டு வழமையை விடக் கூடியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (தி)

## ஓமந்தையில் 19ஆம் திகதி பூபதி நினைவஞ்சலி கூட்டம்

(வவுனியா)

உண்ணாவிரதமிருந்து உயிர் நீத்த அன்னை பூபதியின் நினைவாக எதிர்வரும் 19ஆம் திகதி ஓமந்தை விநாயகர் ஆலய முன்றலில் நினைவஞ்சலிக் கூட்டம் நடாத்தப்பட உள்ளது.

ஓமந்தைப் பகுதியில் உள்ள அனைத்துக் கிராமங்களும் இணைந்து இவ்விழாவை நடாத்தத் தீர்மானித்துள்ளன.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் ஒவ்வொரு கிராமங்களும் மேற்படி இடத்தில் அன்னையின் நினைவாக சுழற்சி உண்ணாவிரதமிருந்துவருகின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் அன்னைபூபதியின் நினைவாக அஞ்சலிக் கூட்டங்களும் சிரமதானமும், உண்ணா விரதமும் நடாத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (தி)

## துரோகமே.-..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைக் கேட்டிருந்தேன். ஆனால், எமது நிலைப்பாட்டைத் தவறாகக் கணித்து, எம்மைப் பலவீனமாகக் கருதி எம்மை அழிக்கும் நோக்கத்துடன் இந்தியா தனது தாக்குதல்களை ஆரம்பித்தது.

கேள்வி;
ஆனால் தொடர்ச்சியாக இந்தியா ஒரு ஐக்கிய இலங்கையைத் தான் விரும்பியது?

பதில்;
ஸ்ரீ லங்காவின் பாதுகாவலன் தான் என்பதை உலகிற்கு அழுத்தம்திருத்தமாகக் காட்டுவதற்கு ஐக்கிய இலங்கையை இந்தியா முன்வைத்தது. இந்த வழியை இந்தியா பயன்படுத்தியதால், மற்ற நாடுகள் இந்தப் பிராந்தியத்தில் தலையிடுவது தடுக்கப்பட்டது.

கேள்வி:
தனது இலக்கை அடைவதற்காக இந்தியா ஸ்ரீ லங்காவின் இனப் பிரச்சினையைத் தமக்குச் சாதகமாகப் பாவித்தது, நீங்களும் இந்தியா உங்களுக்கு வழங்கிய ஆயுதத்தையும், இராணுவப் பயிற்சியையும் உங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தினீர்கள்?

பதில்:
ஆம், நாமும் இந்தியாவைப் பயன்படுத்தியுள்ளோம். இந்தியாவின் தந்திரோபாயமும் எங்களுக்குவிளங்கும். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தை நாம் எம்மை இராணுவ ரீதியாகப் பலப்படுத்திக் கொண்டோம்.

கேள்வி:
உலகத்தில் மூன்றாவது பெரிய இராணுவத்தை எதிர்க்க நீங்கள் எப்படித் துணிந்தீர்கள்?

கேள்வி:
இந்திய இராணுவத்தின் முக்கிய பலமும், பலவீனமும் எது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

பதில்:
அவர்களது பலமும் பலவீனமும் பெரிதளவிலான மனித சக்திதான். அது எங்களுக்குப் பல தடைகளை ஏற்படுத்தியது. நாம் இடம்விட்டு இடம் நகரும் தன்மையை மட்டுப்படுத்தியது. இந்தியர்கள் பெருந்தொகையாக வந்தமையால், பெரும் இழப்புகளையும் சந்தித்தார்கள். காலத்தையும், நேரத்தையும், பணத்தையும், சக்தியையும் வீணாகச் செலவு செய்தார்கள். இந்திய இராணுவத்துக்குக் கென்று ஒரு நோக்கமும் இருக்கவில்லை என்பது மற்றொரு முக்கிய காரணமாகும். தாம் ஏன் யுத்தம் செய்கிறார்கள் என்பது இந்திய ஜவான்களுக்கே தெரியாது. அவர்கள் குழம்பிப் போயிருந்தார்கள். தமிழர்களைப் பாதுகாக்க வந்தவர்கள் பிறகு தமிழர்களையே கொன்றார்கள்.

கேள்வி:
விடுதலைப் புலிகளின் பலம், பலவீனம் பற்றிய உங்கள் மதிப்பீடென்ன?

பதில்:
எமது பலம் - பலவீனம் இரண்டிலும் நாம் அதிக நம்பிக்கை வைத்திருந்தோம். சில சமயங்களில் பல துணிகரமான இடர்களையும் சந்தித்துள்ளார்கள். தப்பிச் செல்ல வழியில்லாத இடங்களில் நின்று இந்திய ரோந்துப்படைகளைத் தாக்கியுள்ளார்கள். இதனால் எமக்குப் பல இழப்புகள் ஏற்பட்டன. சில நேரங்களில் நாம் கவனயீனமாகவும் நடந்துள்ளோம். எமதுபோராளிகளுக்கு அசைக்க முடியாத தன்னம்பிக்கையிருந்ததால் ஆச்சரியப்படக் கூடிய பல தாக்குதல்களையும் நடாத்தியுள்ளார்கள்.

கேள்வி:
சாதாரண மக்களின் இழப்புகளைக் குறைக்கும் வகையில் ஒருகையைப்பின்னால் கட்டியபடி தாம் போராடியதாக இந்தியர்கள் சொல்கிறார்கள்.

பதில்:
ஒரு கையைப் பின்னால் கட்டிய நிலையில்எமதுமக்களுக்கு எதிராக இவ்வளவு அட்டகாசம்செய்துள்ளார்கள்என்றால் இரண்டு கைகளையும் பாவித்திருப்பார்களானால் எமது மக்களுக்கு என்ன செய்திருப்பார்கள் என்பதை நினைக்க எனக்கு நடுக்கமெடுக்கிறது. இந்திய இராணுவம் எல்லா வழிவகைகளையும் கையாண்டது. ஆகாயத்திலிருந்து குண்டுமாரி பொழிந்தார்கள் 250 கிலோ குண்டுகளைப் போட்டார்கள். பீரங்கித் தாக்குதல்

கேள்வி:
இப்போது இந்திய இராணுவம் வெளியேறிவிட்டது. வரலாற்று எதிரிகளான ஸ்ரீ லங்கா அரசுடன் நீங்கள் மோதிக்கொள்வது தவிர்க்க முடியாது எனறு பலர் பேசுகிறார்கள்.

பதில்:
எமதுமக்களை அரசு அடக்கி ஆண்டதற்கான நீண்டகால வரலாறு உண்டு. பலமுறை தமிழர் அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தி ஏமாற்றப்பட்டுள்ளார்கள். அதன் விளைவு ஆயுதப்போராட்டம் ஸ்ரீலங்கா அரசு தமிழர்களையும் முஸ்லிம்களையும் நசுக்க முயற்சித்தால் நாம் போரிடுவோம். ஆனால் தற்போது நிலவும் சமாதானம் தொடரும் என நம்புகிறோம்.

கேள்வி:
தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஜனாதிபதி விசுவாசமாக நடந்து கொள்கிறார்களா?

பதில்:
நம்பிக்கையின் அடிப்படையில்தான் நாம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தோம். அந்த நம்பிக்கை இன்னும் உண்டு.

கேள்வி: மாகாண சபைத் தேர்தலில் பங்கு கொள்வது பற்றி விடுதலைப புலிகள் கரிசனையுடன் உள்ளார்களா?

பதில்: நாம் மிக்க கரிசனையுடன் உளளோம். இந்தியாவுக்கும், வெளி உலகத்துக்கும் நாம் மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என்பதைக் காட்ட விரும்புகிறோம்.

கேள்வி:
சுதந்திர ஈழத்துக்கான கோரிக்கை கைவிடப்பட்டுள்ளதா?

பதில்:
கைவிடப்படவில்லை.

கேள்வி:
அப்படியானால் பிரேமதாசாவுடன் நீங்கள் எதைப் பற்றிப் பேசுகிறீர்கள்? பிரிவினைக் கோரிக்கையில் நீங்கள் இன்றும் நம்பிக்கை கொண்டிருந்தால், எங்ஙனம் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ளமுடியும்.

பதில்: நாம் அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளோம். எமது சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை அரசியலில் நாம் கலந்துகொள்வதற்குக் குந்தகமாக இருக்காது.

கேள்வி:
பிரேமதாசாவுடனான உங்கள் பேச்சுவார்த்தைகள் ஒரு தந்திரோபாயம் எனப்பலர் கருதுகிறார்கள்?

பதில்:
நாம் எவரையும் ஏமாற்றவோ, துரோகம் செய்யவோ

## கிணற்றுக்குள். ....

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தம தபால் நிலைய ஊழியர் ஒருவர் திடீரென்று தற்காலிக

## கடைகளின்..:..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் திருப்திகர

## ஏப்ரல்....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளது. இறுதி நாளான 14

**கிணற்றுக்குள். ....**

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தம தபால் நிலைய ஊழியர் ஒருவர் திடீரென்று தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி விடயத்தோடு சம்பந்தப்பட்டவர் என்ற காரணத்திற்காக அவர் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

**கடைகளின்..:..**

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் திருப்திகரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், பெரிய எழுத்துக்களில் தமிழிலும் பின் விரும்பிய ஒரு மொழியிலும் பெயர்களைப் பொறித்து கொள்ளவாம் என்றும் வேண்டிக் கொண்டனர். (லோ

## பதிவு செய்தல்

**வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம்**

எல்லா அரசாங்க ஒப்பந்தக் காரர்களையும் உடனடியாக தங்களை பதிவு செய்யுமாறு வேண்டுகின்றோம்

பதிவு செய்யும் கடைசித் திகதி 12 - 04 - 90

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

தலைமைச் செயலகம் சோண்டாவில்

## மரண அறிவித்தல்

### திரு. சடையர் வேலுப்பிள்ளை

**(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன பிரதம இலிகிதர்)**

கல்வயல் சாவகச்சேரியைச் சேர்ந்த திருவாளர் சடையர் வேலுப்பிள்ளை 7-04.90 அன்று இரவு காலமானார். இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், இரத்தினம், புவனேஸ்வரி, தியாகராஜா, சிவபாதம், சிவபாக்கியம், சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத் தந்தையும், சபாரத்தினம், (யாழ் பல்கலைக் கழகம்) அருளம்பலம், (பத்திரிகை நிருபர்) அன்னலட்சுமி, நித்தியானந்தம், (திருமகள் அழுத்தகம்) அருந்திராதேவி, ஆகியோரின் அன்பு மாமனாரும், வேலழகன், (சுவிஸ்) தேன்மொழி, கயல்விழி, அருள்மொழிஅழகன், திருமொழிஅழகன், நிமலானந்தன், தயானந்தன், பூங்கொடி, தமயந்தி, வித்தியா, சஞ்சீவன், ஆகியோரின் அருமைப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் இன்று (8-9-90) மாலை 4 மணியளவில் வேம்பராய் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
மகன்

(R/98) வே. சிவசுப்பிரமணியம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது

**ஏப்ரல்....**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வுள்ளது. இறுதி நாளான 14 ஆம் திகதியன்று 3 மணிக்கு மாபெரும் ஊர்திப் பவனியும் நிகழவுள்ளது.

இவ்வெழுச்சி விழாவில் உரையரங்கு, பட்டிமன்றம், இசையரங்கு, நாடக அரங்கு, நடன அரங்கு கவியரங்கு என்பன நிகழவுள்ளன. இவ்விழாவின் போது பழைய கலைஞர் கௌரவிப்பும், போராளிகளுக்குச்சமர்ப்பணமும் நிகழும். இதற்கான ஒழுங்குகளை விடுதலைப்புலிகள் இயக்க மக்கள் முன்னணியின் கலை, கலாசாரப் பொறுப்பாளர் புதுவை இரத்தினத்துரை மேற்கொண்டுள்ளார்.

**பிரபாகரனிடம்**

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வராகவே இருக்கமுடியும் என்பது எனது ஊகம். ஆனால் கடந்த ஞாயிறன்று அவரை நேரில் சந்தித்த சமயம், நகைச்சுவை உணர்வுடன் மலர்ந்த முகத்துடன் உரையாடுவதை என்னால் அவதானிக்க முடிந்தது.

ஒரு தீர்வு கிட்டும் பட்சத்தில் நீங்கள் தொடர்ந்து எப்படிச் செயலாற்றுவீர்கள் என்று வினாவினேன்.

நான் ஒரு சமூக சேவையாளராகவே கடமையாற்றுவேன் என்று கூறினார்.

நான், எப்பேற்பட்ட சமூக சேவை என்று வினாவினேன்.

அதற்கு அவர், ஊனமுற்றவர்களைப் பொறுப்பேற்றுப் பராமரிப்பது எனது முக்கிய பணியாயிருக்கும் என்று கூறினார்.

அவருடைய இக் கருத்து எனக்கு அவர்மீதிருந்த அபிமானத்தைப் பல படிகள் உயர்த்திவிட்டன. அவர் ஒரு மனிதநேயர்.

இவ்வாறு ஈழநாதம் நிருபருக்கு மாட்டின் ஸ்ரெஸ் சிங்கர் தெரிவித்தார்.

கணக்கான வர்த்தகர்களும் ஊழியர்களும் சமூகம் தந்திருந்தனர். வர்த்தகர்கள் சங்கம் ஒன்று இக்கூட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டு அதற்கான சபையும் தெரிவு செய்யப்பட்டது குறிப்பிட தக்கதாகும்.

**மூவாயிரம்......**

( 1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதாகவும், தாம் நிர்வாகத்தைக் கையேற்கவில்லை என்றும் தெரிவித்தார்.

### வெளிநாடுகளில் 50,000 அகதிகள்

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது

சுமார் 50,000 தமிழ் அகதிகள் ஐரோப்பாவில்வாழ்கிறார்கள். ஒரு உடன்பாடு ஏற்பட்டு நல்ல சூழ்நிலை உருவாகியதும் வெளிநாடுகளிலுள்ள எமது அகதிகள் மீளவும் இங்கு வருவதை நாம் விரும்புகிறோம்.

தாம் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியை பலப்படுத்தி, மக்களைத் தேர்தலுக்கு தயார்படுத்துவதாகவும். எந்தக் குழுவென்றாலும் அவர்களுக்குத் தைரியம் இருந்தால் தேர்தல் களத்தில் மக்களைச் சந்திப்பதற்கு விடுதலைப்புலிகள் எதிரானவர்கள் அல்ல என்றும் தெரிவித்தார்.

இன்றைய நிலையில் விடுதலைப்புலிகள் அமைப்பில் அரசியலில் இரண்டு கட்டங்கள் உண்டு என்றும், முதலாவது அரசியல் பிரவேசம், பாதுகாப்பு. இந்திய இராணுவ வெளியேற்றம் ஆகியனவும், இரண்டாவது சட்டத்தில் அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ளுதல், மேலதிக சுதந்திரம், உரிமை ஆகியன அடங்கும் என்றும், இரண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் மக்களின் முக்கிய பிரச்சினைகளான புனர்வாழ்வு, புனரமைப்பு ஆகியன கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

பலப்படுத்திக் கொண்டோம்.

கேள்வி:

உலகத்தில் மூன்றாவது பெரிய இராணுவத்தை எதிர்க்க நீங்கள் எப்படித் துணிந்தீர்கள்?

பதில்:

இலங்கைப் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட எமது பன்னிரு பிரதேசத் தளபதிகளையும் விடுவிக்க இந்தியா தவறியது. இவர்களது தற்கொலையில் (சைனட் குடித்தார்கள்) நாம் இந்தியாவை எதிர்க்கத் துணிந்தோம். எவ்வளவு காலம்தான் எல். ரி. ரி. ஈ. இந்தியாவைத் தாக்குப்பிடிக்க முடியும் என்று எனது உயர் மட்டச் சகபாடிகள் எனக்கு ஆலோசனை வழங்கினார்கள். நான் அவர்களுக்கு வியத்நாமை உதாரணம் காட்டினேன். ஒரு சிறிய நாடு மன உறுதியுடனும் அர்ப்பணத்துடனும் ஒரு வல்லரசை எதிர்த்து நின்றது. நான் யுத்தம் செய்ய வேண்டும் என்று தீர்மானித்த போது வெற்றி தோல்வி எனக்குப் பிரச்சினையாகவிருக்கவில்லை. யுத்தம் புரிவதற்கான மனோதிடம் எமக்குஇல்லையாஇருக்கிறதா என்பதைத் தான் நாம் அளவிடவேண்டும். தோல்வி வந்துவிடும் என்று அஞ்சி மக்களின் உரிமைகளையும், நோக்கங்களையும் நாம் கைவிட முடியாது.

கேள்வி:

இதிலிருந்து இந்தியா ஏதும் பாடம் கற்றுக் கொண்டதா?

பதில்:

எவ்வளவுதான் சக்தி வாய்ந்த இராணுவமாக இருந்தாலும் மக்களின் விருப்பத்துக்கு மாறாக எதையும் திணிக்க முடியாது என்பதை இந்தியா உணர்ந்துள்ளது.

கேள்வி:

எந்த வகையான கெரில்லாத் தந்திரோபாயம் உங்களுக்குப் பயன்பொருத்தமாயிருந்தது?

பதில்:

கண்ணிவெடிகளை நாம் பெரிதும் பயன்படுத்தினோம். அது இந்திய தரப்பில் பாரிய இழப்புகளை ஏற்படுத்தியது.

வழிவகைகளையும் கையாண்டது. ஆகாயத்திலிருந்து குண்டுமாரி பொழிந்தார்கள் 250 கிலோ குண்டுகளைப் போட்டார்கள். பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டார்கள் சாதாரண மக்களைத் துன்புறுத்தினார்கள். இவையெல்லாம் தோல்விகளைத் தழுவும் ஒரு இராணுவத்தின் செயற்பாடுகளாகும்

கேள்வி:

சுமார் 6,000 தமிழ் மக்கள் இந்தியாவுடனான இந்தப் போரில் இறந்துள்ளார்கள். இந்த மரணங்களினால் ஏதாவது நன்மையுண்டா?

பதில்:

ஆம், எமது மக்களினது சுதந்திரத்திலும் விடுதலையிலும் எவரும் தலையிட முடியாது என்பதை நாம் நிரூபித்துள்ளோம்.

கேள்வி:

இதனால் நீங்கள் அடைந்த பயன் என்ன?

பதில்:

எமக்குத் தன்நம்பிக்கை பலம், மக்களின் ஆதரவு ஆகியன கிடைத்துள்ளன.

கேள்வி:

இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவுடன் பேச்சுவார்த்தைகளை நீங்கள் ஆரம்பிப்பதற்கான காரணங்கள் எவை?

பதில்:

எமது மக்கள் இந்தியா தமிழீழத்தைத் (தனிநாடு) தரும் என்று நம்பியிருந்தார்கள். பதிலாக இந்தியா எமது விருப்பத்திற்கு மாறாக ஒருஉடன்பாட்டைச் செய்து கொண்டது. ஆகவே ஸ்ரீ லங்கா அரசுடன் பேச்சு வார்த்தைகள் நடாத்தி நன்மைகளைப் பெறலாம் என்று நாம் நம்பினோம். இதேவேளை வெளிச்சக்தி ஒன்று எமது விடயத்தில் தலையிடவும், அதிகாரம் செலுத்தவும் நாம் அனுமதிக்க மாட்டோம். பிரேமதாசாவும் இதே மாதிரியான கருத்தைக் கொண்டிருந்தார். வெளிநாட்டுத் தலையீட்டை இல்லாமல் செய்வதற்கு அவர் சங்கற்பம் கொண்டிருந்தார்.

தந்திரோபாயம் எனப்பலர் கருதுகிறார்கள்?

பதில்:

நாம் எவரையும் ஏமாற்றவோ, துரோகம் செய்யவோ இல்லை. இதேவேளை எம்மை ஏமாற்றினால் அல்லது துரோகம் இழைத்தால் நாம் எதிர்ப்போம். ஆனால் எம்மை நம்பினால் நாமும் நம்பிக்கையாக நடந்து கொள்வோம்.

**மீண்டும்...**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தூதரகத்துடன் தொடர்பு கொண்டு விடுதலை செய்வதாகவும் கூறினர்.

இதற்கு விடுதலைப் புலிகள் மறுத்து, கடற்படையினர் கைது செய்து வைத்திருந்த இந்திய மீனவர்களையும் தம்மிடம் ஒப்படைக்குமாறும், அவர்களைத் தாம் ஆதரித்து ஆலோசனை கூறி விடுவிப்பதாகவும் தெரிவித்தனர்.

சிறிது நேரத்தின் பின் கடற்படையினர் தாம் கைது செய்து வைத்திருந்த மீனவர்களை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தனர்.

இன்று காலை இந்திய மீனவர்கள் அனைவரும் தமிழ்நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

**ராஜீவை....**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேரில் றோகணாவும் ஒருவர். இவரைத் தேசிய வீரர் என்று ஒரு சாராரும், மற்றொரு சாரார் இலங்கைக்கு அவமானத்தைத் தேடித் தந்தவர் என்றும் சொல்லுகிறார்கள்.

''கடந்த காலச் சம்பவம் எனது எதிர்காலத்தைப் பாதிக்கலாம். ஆனால் கடந்த சம்பவத்தைப் பற்றி எனக்குக் கவலை இல்லை'' என்கிறார் றோகண.

# ஈழநாதம்


## ஞாயிறு மலர்

தான் நேசித்த மக்களுக்காக ஒருவன் எத்தகைய உன்னத தியாகத்தைச் செய்யமுடியும்?

ஓர் உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால் உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம் ஆகியனவையே. இதற்காக உயிரினை இழப்பதென்பது உன்னதமான தியாகமாகும்.

தலைவர்: பிரபாகரன்





### புதுப்பூவே!

எதிர்காலம் தமிழீழ எழுச்சிகளில்
எனது செய்யற் பங்க ளிப்பைப்
புதிதுபுதி தாகத்தான் செய்யவேண்டும்
அதற்காகப் பொழுதை யெல்லாம்

மதிநுட்ப துறைதோறும் மாற்றுதற்குத்
தக்கநவ நெறியே தென்றோ
புதுப்பூவே உன் நெஞ்சில் புலர்ஒளியை
தேடி நீ சிந்தித் தாயோ?

- கல்வயலான்

கடந்த வருடம் 14-04-89 அன்று புத்தாண்டு தினம், புத்தாண்டு புத்தாடை, புதுப்பொங்கல் இவற்றில் ஈடுபட்டு புரட்சிக்காரர்கள் புளகாங்கிதம் அடைவதில்லை. தாயகத்தின் சுதந்திரமே அவர்கள் கொள்கை. அதன் விடுதலைத்தினமே அவர்களுக்குப் புத்தாண்டு தினம். இந்தக் கட்டுமானத்தில் வளர்ந்த நான்கு வீரவேங்கைகள் கடந்தவருடம் தமது இன்னுயிரைத் தியாகம் செய்தனர். பலாலி வீதியில் கந்தர்மடம் அருகில் ஆலடிச் சந்தியில் வீரமரணமடைந்த அவர்களுக்கு அங்கே நினைவுச் சின்னம் அமைக்கப்படுகின்றது. அவர்கலை நினைவுகூர்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

"மரணம் என்கின்ற வார்த்தை
மிகவும் கொடுமையானது
நீ இறந்த விதத்தை விளக்கிச் சொன்னால்
என் வார்த்தைகளுக்குகூட
காயம் ஏற்பட்டு விடுமோ என்று
அச்சப்படுகிறேன்."

இப்படி ஒரு இளங்கவிஞர் போராளிகளின் துன்பியல் நிகழ்வு ஒன்றைக் கவிதை வடிவில் வடித்து இலக்கியமாக்கினார். இந்த "நிகழ்வும்" அப்படித்தான் நிகழ்ந்தது. இந்த நிகழ்வு ஏன் இப்

### இயக்கத்தில் சுபாஷ்

வடமாகாணத்தில் நவாலி அரசடி மகாவித்தியாலயத்தில் கல்வியிலும், விளையாட்டிலும் முன்னணியில் நின்ற புண்ணியமூர்த்தி உதயகுமார் என்ற மாணவனது உள்ளத்தைச் சிங்களப் பேரினவாதத்தின் தமிழின விரோத ஒடுக்குமுறைகள் வாட்டியதோடு அவனது மென்மையான உணர்வுகளையும் பாதிக்கவே செய்தன. 1983 ஆம் ஆண்டு இன ஒழிப்பு நடவடிக்கை

இந்தப் படையணியில் ஒரு போராளியாக சுபாசும் இணைந்துகொண்டான்.

### களத்தில் சுபாஷ்

சுபாஷ் விடுதலை ஸ்தாபனத்தில் இணைந்துகொண்ட நாள் முதலாக படையணியில் தீவிரமாகவே செயற்பட்டு வந்தான். சிறீலங்கா இராணுவம் பலதடவைகள் முகாம்களை விட்டு வெளியேறி இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது.

இந்த நிலையில் கிட்டண்ணாவுக்கு ஏதும் ஆபத்து நிகழ்ந்துவிடலாம் என்று அஞ்சிய சுபாஷ் விரைந்து பணியாற்றினான். ஒரு விடுதலைப் போராளியைப் பொறுத்தவரை ஒவ்வொரு வினாடியும் விழிப்போடு செயலாற்ற வேண்டியவையாகும். அதுவும் களத்தில் நின்று துப்பாக்கிகளோடு பேசும்போது Spot decision தான் பிரதானமானது. விரைந்து பணியாற்றிய சுபாஷ் கிட்டுவைக் காப்பாற்றினான். இதனால் சுபாசின் தொடையில் குண்டு ஒன்று பாய்ந்து காயப்படுத்தியது. சில காலம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற சுபாஷ் பின்னர் அங்கிருந்து வெளியேறி மீண்டும் இயக்கப்பணிகள் புரிந்தான்.

இப்படியாக சுபாஷ் களத்தில்பட்ட விழுப்புண்களும் வீரத்தழும்புகளும் அவனது உடலில் பல இடங்களில் காணப்பட்டன.

### ஒப்றேசன் லிபறேசன்

இலங்கை இராணுவம்

லால் பாதிக்கப்பட்டான். கடும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த சுபாசை ஓய்வெடுக்குமாறு சக போராளிகள் கேட்டுக்கொண்டனர் ஆனால் சுபாஷ் அதற்குச் சம்மதிக்கவில்லை. கடும் மலேரியாக் காய்ச்சலின் போதும் களத்தில் நின்று போராடிய சுபாஷ் களத்திலேயே மயங்கி விழுந்தான். மயக்கமுற்று விழுந்த சுபாசை அவனது நண்பர்கள் தூக்கிச் சென்றனர். தனது உடல் பற்றியோ தன்னைப் பற்றியோ சிந்திக்காது தன்னுடைய தாயகம் பற்றி சிந்தித்து களங்கள் பல கண்ட போராளி சுபாஷ் ஆகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமன்றி மட்டக்களப்பு மாவட்டத்திலும் பல இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்ட சுபாஷ் பல தடவைகள் ஹெலி தாக்குதல்கள், பொம்பர் தாக்குதல்களின் போது மயிரிழையில் உயிர் தப்பினான்.

### இரண்டாம் கட்டப் போர்

தாயக விடுதலைப்போராட்

காங்கே பல தாக்குதல்களை சுபாஷ் மேற்கொண்டான்.

விடுதலைப் புலிகளின் ஒவ்வொரு இராணுவ நடவடிக்கைகளுக்குப் பின்னாலும் ஒவ்வொரு அரசியல் ரீதியான முக்கியத்துவம் இருப்பதை கூர்ந்து அவதானிக்கும்போது தெரியவரும். ஒரு அரசியல் பிரச்சினையின் முக்கியத்துவத்தை இராணுவ ரீதியான நடவடிக்கைகள் நன்கு பிரசாரமயப்படுத்துகின்றன. ஆயிரம் பிரசங்கங்கள் செய்வதைவிட ஒரு இராணுவத் தாக்குதல் சிறந்த பிரசாரமாக அமைந்து விடுகின்றது என கியூபாத் தலைவர் பிடல் காஸ்ரோ ஒரு முறை குறிப்பிட்டார்.

நவாலிப் பகுதியில் சுபாசின் மிகத் திறமையான கெரில்லா யுக்திகளுக்கு ஈடு கொடுக்க முடியாது நிலைகுலைந்த இந்தியஇராணுவத்தினர் சுபாசை இலக்கு வைத்துப் பல சுற்றிவளைப்புகளையும் தேடுதல் வேட்டைகளையும் மேற்கொண்டனர். ஆனைக்கோட்டை-நவாலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரியாக இருந்த வட இந்தியரான மேஜர் ரஜீவன் தான் ஒரு கிழமைக்குள் சுபாசை உயிரோடு பிடிப்பதாக சபதம் எடுத்துக் கொண்டான். இந்தச் சபத்தை நிறைவேற்ற அவன் படாதபாடு பட்டமையும் "பேய் அலைச்சல்" பட்டுத் திரிந்தமையும் தான் மிச்சம்.

### வலிகாமம் பொறுப்பாளர்

ஒரு போராட்ட அணிக்குத் தலைவனாக இருந்த சுபாஷ் போராளிகளோடும் பொது மக்களோடும் பழகும் விதம் மிகவும் இங்கிதமானது. இனிமையானது. எத்தகைய இடர்ப்பாடான நிலைமைகளிலும் சகஜமாக துவிச்சக்கரவண்டியில் போவதும் நிலைமைகளை அவதானித்து விட்டு தக்கநடவடிக்கைகளை மேற்கொள்வதும் அவனது வழமையாகும். லெப். கேணல் மதி (பாலச்சந்திரன் தெல்லிப்பளை) யின் மறைவைத் தொடர்ந்து மேஜர் சுபாஷ் வலிகாமம் பிரதேசப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான்.

வலிகாமம் என்பது நான்கு பிரிவுகளைக் கொண்டது. வலிகாமம்- மேற்கு, வலிகாமம்- தெற்கு, வலிகாமம்- வடக்கு, வலிகாமம்- கிழக்கு என குடாநாட்டிற்குள் இப்பாரிய பிரதேசத்திற்குபொறுப்பாளனாக நியமிக்கப்பட்ட சுபாஷ் தான் பொறுப்பை ஏற்றுக் கொண்டதும் எல்லா பகுதிகளுக்கும் சென்று தன் நண்பர்களையும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களை

வானான். இராணுவம் சுபாசை பின் தொடர்ந்து ஓடியபோதும் எதுவித பயனும் கிடைக்கவில்லை.

ஆத்திரமுற்ற இராணுவம் சயிக்கிளை எடுத்துக் கொண்டு போய்விட்டது. இரண்டொரு தினங்களின் பின்பு சுபாஷ் ஒரு புதிய சயிக்கிளைக் கொண்டு வந்து எனது மருமகனுக்கு கொடுத்தான். இவ்வாறாக பொதுமக்களுக்கு தன்னால் எதுவித கஷ்டமும் ஏற்படக் கூடாது என்பதில் சுபாஷ் எப்போதும் விழிப்பாகவே இருந்தான்.

### சமுதாய முன்னோடி

" ஒரு கெரில்லாப் போராளி என்பவன் ஒரு சமூக சீர்திருத்தவாதியாகவும் இருக்க வேண்டும்" என்பது ஏனஸ்ட் செகுவேராவின் கருத்தாகும்.

நவாலி மக்களின் பிரச்சினைகளை மிகவும் புத்தி சாதுரியமான முறையில் தீர்த்து வைத்து அம்மக்களின் மதிப்பைப் பெற்றான்.

நவாலியில் சொந்தக்காணியற்று வாழ்ந்த ஏழை மக்களுக்கு தேடுவாரற்றுக்கிடந்த வெறும் காணிகளைப் பங்கிட்டுக் கொடுத்து அரும்பணி புரிந்தவர். அவர்கள் அக்காணிகளில் குடியேறி வீடு

## நேதாஜி

கள் கட்டவும் விவசாயம் செய்யவும் உதவியும் ஊக்கமும் கொடுத்தான்.

### உயிர் நண்பனின் பிரிவு

மேஜர் சுபாஷ் மல்லாகத்தைச் சேர்ந்த மற்றொரு போராளியான லெப். சிறைவாசன் (தவமணி நாயகம் முரளி கிருஷ்ணா) மீது அன்பு வைத்திருந்தான். 21-03-89 அன்று ஏழாலையில் இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதல் ஒன்றின் போது சிறைவாசன் வீரமரணமுற்றான். தனது உயிர் நண்பனின் பிரிவைத்தாங்க முடியாமல் சுபாஷ் கண்ணீர் விட்டு அழுதான். இந்தச் சம்பவத்தைத் தவிர அவன் கண்ணீர் விட்டு அழுததை யாருமே கண்டதில்லை. போராளிகள் மரணத்துள் வாழ்கிறார்கள். என்பதால் அவர்களது மெல்லிய உணர்வுகளும் மரணித்துவிடுவதில்லை என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும்.

### பாரிய தாக்குதல் முயற்சி

மேஜர் சுபாஷை 12-04-1989

போராளிகளின் துன்பியல் நிகழ்வு ஒன்றைக் கவிதை வடிவில் வடித்து இலக்கிய மாக்கினார். இந்த ''நிகழ்வும்'' அப்படித்தான் நிகழ்ந்தது. இந்த நிகழ்வு ஏன் இப்படி நிகழ்ந்தது? நான்கு வீர வேங்கைகள் ஒருமித்து வீர மரணமடைந்த இந்த நிகழ்வில்.போது பொதுமக்கள் சிலரும் தியாக மரணமடைந்தனர்.

மேஜர் சுபாஷ் (புண்ணிய மூர்த்தி உதயகுமார்) நவாலி,

கரும்புலி கப்டன் தாடி சிறீ (சிறீதரன்) சண்டிலிப்பாய்,

லெப். ஹரன் (ந. பாஸ்கரன்) திருநெல்வேலி-தெற்கு,

லெப். அல்பேர்ட் (ம. ராஜ்குமார்) அரியாலை.

இந்த நால்வரும் யார்? கண்ணிலே இலட்சிய வேள்வியை தூரதிருஷ்டியாக எதிர் கொண்டவர்கள். நெஞ்சிலே பூகம்பத்தைச் சுமந்தவர்கள். இதயத்திலே இனப்பற்றையும் மொழிப்பற்றையும் பச்சை குத்திக்கொண்டவர்கள். உள்ளத்திலே உறுதியை பசுமரத்தாணிபோல் பதித்துக்கொண்டவர்கள். காலிலே காற்றின் வேகத்தை உள்வாங்கிக்கொண்டு காட்டில் மழையிலும் மேட்டில் கடும் வெய்யிலிலும் கடும்பணி புரிந்தவர்கள். இதனால் தான் இவர்கள் பதித்த சுவடுகளை வரலாற்றுச் சுவடியும் பதிவு செய்துகொண்டது. தன்னிகரில்லாத் தலைவனின் பட்டறையில் புடம்போடப்பட்ட இந்த வார்ப்புகளின் இளமைக் கோலம் மக்களின் நினைவாலயமாகிவிட்டது.

மேஜர் சுபாஷை நினைக்கிறேன். களங்கமில்லாத அந்த முகத்தில் கலக்கமில்லாத நிலைமை எப்போதுமே எவரையும் கவர்ந்து கொள்ளும். எத்தகைய பதட்டமான நிலைமையிலும் எத்தகைய நெருக்கடியிலும் எள்ளளவும் பதட்டமின்றி பகிடி விட்டுக்கொண்டே இருக்கும் தனித்துவமான சிறப்பியல்பு மேஜர் சுபாசிடம் காணப்பட்டது என ஒருமுறை விடுதலை ஸ்தாபனத்தின் சிரேஷ்ட உறுப்பினர் பொட்டு அம்மான் குறிப்பிட்டார்.

முறைகள் வாட்டியதோடு அவனது மென்மையான உணர்வுகளையும் பாதிக்கவே செய்தன. 1983 ஆம் ஆண்டு இன ஒழிப்பு நடவடிக்கைகளின் வடுக்கள் எல்லாமாணவர்களையும் பாதித்ததுபோல உதயகுமாரையும் பாதிக்கவே செய்தன. இன்றைய பிரச்சினைகள் இரத்தத்தாலும் இரும்பாலும். தீர்க்கப்பட வேண்டி

களநிகழ்வுகளும் களநினைவுகளும்



யவை என புரட்சிக்காரன் பிஸ்மார்க் பகன்ற வீரச் சொற்பொழிவு இன ஒடுக்குமுறைக்குள்ளான எல்லா நாட்டு மாணவ சமுதாயத்தினதும் செவிவழி புகுந்து நாடி நரம்புகளில் சூடாகப் பாய்ந்து அவர்களையும் புரட்சிக்குத் தூண்டியதுபோல தமிழ்மாணவர்களையும் 1983 இன ஒழிப்பு நடவடிக்கையானது ஆயுதப் போராட்டத்தை முதன்மைப்படுத்த வேண்டிய தன் அவசியத்தை எடுத்துரைத்தது.

இதனால் ஒரு சிறு கெரில்லாக் குழுக்கள்தான் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன என்ற நிலைமை மாறி தொடர்ச்சி முறிவடையாத ஆயுதப் போராட்டம் ஒன்றுக்கான பாரிய இராணுவக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

பட்டு வந்தான். சிறீலங்கா இராணுவம் பலதடவைகள் முகாம்களை விட்டு வெளியேறி இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது.

ஒருநாள் யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து இராணுவம் வெளியேறி யாழ் நகருக்குள் நுழைய முயற்சி எடுத்தது. அக்காலகட்டம் யாழ்ப்பாணக் குடாநாடு போராளிகளது கட்டுப்பாட்டிற்குள் இருந்த காலம். கோட்டை முகாமுக்கு முன்பாக சென்றிகள் போடப்பட்டு இருந்தன. ஆகவே சென்றியை உடைத்துக்கொண்டு வெளியே வர முயன்ற இலங்கை இராணுவத்திற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பலத்த மோதல் ஏற்பட்டது.

இலங்கை இராணுவத்தின் கவசவாகனம் ஒன்றும் கோபுர கவசவாகனம் இன்னொன்றுமாக முன்னே வர இலங்கைச் சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்த வண்ணம் முன்னேற முயன்று கொண்டு இருந்தார்கள். யாழ்ப்பாணம் கோட்டையிலிருந்து ஷெல் தாக்குதல்களும் பலமாக நகரைநோக்கி ஏவப்பட்டன. விடயம் அறிந்த தளபதி கிட்டு அவர்கள் உடன் ஸ்தலத்திற்கு விரைந்து வந்து வியூகங்களை அமைத்து போராளிகளுக்கு பணிப்புரைகளை வழங்கித் தாமும் எதிர்த்தாக்குதலில் ஈடுபட்டார்.

தளபதி கிட்டு களத்தில் நின்று வழிநடத்தும் யுக்திகளைச் சமாளிக்க முடியாமல் திணறிக்கொண்டிருந்த இலங்கை இராணுவத்தினர் உடனடியாக பலாலியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ விமானக் கூட்டுப் பணியகத்திற்கு தகவல் கொடுத்தனர். அங்கிருந்து ஹெலிகப்டர் விமானம் ஒன்று யாழ். நகரப்பகுதியில் ஆகாயமார்க்கமான தாக்குதலை மேற்கொண்டது. தளபதி கிட்டு நின்ற பகுதியை இலக்குப் பார்த்து ஹெலிகப்டரிலிருந்து இயந்திரத் துப்பாக்கிகள் இரைந்து கொண்டிருந்தன.

உடலில் பல இடங்களில் காணப்பட்டன.

## ஒப்றேசன் லிபறேசன்

இலங்கை இராணுவம் குடாநாட்டைக் கைப்பற்ற பல தடவைகள் முயற்சி செய்தது. ஏக காலத்தில் பலாலி, காரைநகர், யாழ்ப்பாணக் கோட்டை, ஆனையிறவு முதலான முகாம்களிலிருந்த வெளியே வர முயற்சிகளை எடுத்தனர். அந்த முயற்சி கைகூடாமல் போகவே 1987 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி லிபறேசன் ஒப்றேசன் என்ற பெயரில் வடமராட்சி மீது பலத்த தாக்குதல்களை மேற்கொண்டனர்.

ஏக காலத்தில் ஆறு பொம்பர் விமானங்களும், ஒன்பது ஹெலிகப்டர்களும் ஆகாய மார்க்கமாகத்தாக்குதல்களை நடத்தின. பீரங்கிகள் பொருத்தப்பட்ட கடற்படைக் கப்பல்கள் குடிசனங்கள் வாழ்ந்த பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல்களை நடத்தின. வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, தொண்டமானாறு முதலான முகாம்களிலிருந்து குடியிருப்புகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. படையினர் ஏககாலத்தில் மேற்படி முகாம்களிலிருந்து வெளியேற முனைந்து கொண்டிருந்தனர்.


இப் பாரிய இராணுவ நடவடிக்கையில் யாழ்ப்பாண மாவட்ட பிரிகேடியர் ஜெரி டீ சில்வா, பிரிகேடியர் டென்சில் கொப்பேக்கடுவ, பிரிகேடியர் விஜய விமலரத்னா முதலான உயர் இராணுவ அதிகாரிகள் மட்டுமன்றி முக்கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்கா மூன்று படைப் பிரிவுகளுக்கும் பணிப்புரைகளை வழங்கிக் கொண்டிருந்தார்.

இந்தப் பாரிய இராணுவ நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதல்களை மேற் கொண்டனர். சுபாசும் ஒரு குரூப் தலைவனாக களத்தில் நின்று போராடினான். போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சுபாஷ் மலேரியாக் காய்ச்சலால்

போது மயிரிழையில் உயிர் தப்பினான்.

## இரண்டாம் கட்டப் போர்

தாயக விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் சிறீலங்கா இராணுவத்துடன்



மேஜர் சுபாஷ்

மோதல் இடம் பெற்றுக் கொண்டிருந்த உச்சக்கட்டத்தில் இந்தியத் தலையீடு ஏற்பட்டது. இதனால் 1987 ஜூலை மாதம் 29 ஆம் திகதி இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஒன்று உருவானது. இந்த ஒப்பந்தத்தின் வெற்றுத் தன்மையை விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியாக எடுத்துக் கூறியபோது ஆத்திரமுற்ற இந்தியா விடுதலைப் புலிகள் மீது இராணுவ ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதனால் இரண்டாம் கட்டப் போர் ஆரம்பமானது.

இந்திய இராணுவத்துடனான பல கெரில்லாப் போர்களில் சுபாஷ் ஈடுபட்டான். தாக்குதல்களை மேற்கொள்வதும் பின்னர் கரந்துறைந்து தலைமறைவாவதும் பின்னர் கெரில்லாத் தாக்குதல்களை மேற்கொள்வதுமாக இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராக பல தடவைகள் குடாநாட்டிற்குள் ஆங்

சுபாஷ் தான் பொறுப்பை ஏற்றுக் கொண்டதும் எல்லா பகுதிகளுக்கும் சென்று தன் நண்பர்களையும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களையும் சந்தித்து உரையாடினான். இந்திய இராணுவ சிப்பாய்களின் ஜரூரான ரோந்து நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் தான் சுபாசின் இந்த நெடும் பயணம் ஆரம்பமானது அவன் நடந்து சென்ற இடங்களும் உண்டு. நண்பர்களோடு ஒற்றையடிப் பாதைகளில் துவிச்சக்கர வண்டியில் சென்றதுமுண்டு எத்தனை வாழைத் தோட்டங்களை, பனம் தோப்புகளை, கரடுமுரடான பற்றைகளை எல்லாம் அவன் தாண்டியிருப்பான்.

## அச்செழுவில் சுபாஷ்

ஒரு முறை நவக்கிரி நிலாவரை சந்தியில் முகாமிட்டு இருந்த இராணுவ சிப்பாய்கள் அச்செழு பகுதிக்குத் தேடுதல் வேட்டைக்கு வந்தார்கள். அத் தேடுதல் நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகளுக்கும்- ஆக்கிரமிப்பு இராணுவத்திற்குமிடையில் ஏற்பட்ட மோதல் ஒன்றில் சுபாசிற்கு நெஞ்சிலும் காலிலும் காயம் ஏற்பட்டது. அவரது நண்பர்கள் சிறப்பான முறையில் சவனித்து அவனைச் சுகப்படுத்தினார்கள்.

பிறிதொரு சமயம் இணுவிலில் விடுதலைப் புலிகளுக்கும்- இந்திய இராணுவத்திற்கும் இடையில் ஒரு மோதல் 15 - 9 - 1988 அன்று ஏற்பட்டது. இந்த மோதலின் போது சுபாசுடன் கூடச் சென்ற கந்தசாமி ரதிதரன் என்ற போராளி வீர மரணமுற்றான். சுபாசும் காயமுற்றான் என்று பரவிய வதந்தியைத் தொடர்ந்து நவாலி- மானிப்பாய் - ஆனைக்கோட்டை எங்கும் இந்திய இராணுவம் சுபாசைத் தேடி அலைந்தது.

ஒரு நாள் சுபாஷ் எனது மருமகனின் துவிச்சக்கர வண்டியை இயக்கவேலைகளுக்காக எடுத்துச் சென்றான். வழியில் இந்திய இராணுவம் எதிரும் புதிருமாக சந்தித்த போது துவிச்சக்கர வண்டியை விட்டு விட்டு ஓடித்தலைமறை

காட்டாகும்.

## பாரிய தாக்குதல் முயற்சி

மேஜர் சுபாஷை 12.04.1989 அன்று இரவுதான் கடைசியாகப் பார்த்தேன். அவன் அந்த இரவில் ஒன்றுமே பேசவில்லை. தன்னுடைய இராணுவப் பிரிவு தலைவன் அம்மானோடு வந்தமையால் ஒழுங்கு கட்டுப்பாட்டிற்காக அப்படி நடந்து கொண்டான் என்று எண்ணினேன். இந்த ஒழுங்கும் கட்டுப்பாடும் இன்று உலகிலேயே விடுதலைப் புலிகளை தலை சிறந்த ஒரு கெரில்லாஅணியாக்க காரணமாகும்.

இவனைக் கடைசியாகப் பார்த்த இரண்டு தினங்களின் பின்னர் இவனின் மரணச் செய்திதான் கிடைத்தது. ஒரு பாரிய இராணுவத் தாக்குதலுக்கான தயாரிப்பு வேலைகளை முடித்துக் கொண்டு சக போராளிகளோடு தாக்குதல் முயற்சியில் ஈடுபட்ட சுபாசும் அவனது நண்பர்களும் எதிர்பாராமல் ஏற்பட்ட விபத்தால் காற்றோடு கலந்து கொண்டனர். 1987 பெப்ரவரி மாதம் 14ஆம் திகதி கைதடியில் ஏற்பட்ட இவ்வாறான ஒரு விபத்தின்போது பொன்னம்மான் முதலான போராளிகள் பலர் மறைந்ததைப் போல 1989 ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் பரமேஸ்வராசந்திக்கு அருகில் ஏற்பட்ட இந்த விபத்தில் சுபாசும், சிறியண்ணாவும், ஹரனும், அல்பேர்ட்டும் வீர மரணமடைந்து வரலாற்றுச் சுவடிகளில் இடம் பிடித்துக் கொண்டனர்.

நெஞ்சம் நிறைந்த அந்தப் போராளிகளின் நினைவுகள் நெஞ்சை விட்டகலாத வீர காவியங்களாக வடிவெடுத்துள்ளன. தேசத்தை மீட்கச் சென்ற அந்தக் குண்டு மோசம் செய்திருக்காவிடின் ஆக்கிரமிப்பு இராணுவத்தின் படைவிலகலின் ஆரம்பப் புள்ளியாக அத் தாக்குதலே அமைந்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

□

# மருத்துவபீடம்

இன்றைய குழந்தைகளே நாளைய பெரியோர். அவர்களே உலகத்தின் எதிர்காலம். அவர்களை ஆரோக்கியமாக வளர்க்க வேண்டும். வலிமை மிக்கவர்களாக வளர்த்தல் மிக அவசியம். இது பெற்றோரின் தலையாய கடமைகளுள் ஒன்று.

குழந்தைகளுக்கு நோய்கள் வராமல் பாதுகாத்தல் மிக முக்கியம். குழந்தை நோய் வாய்ப்பட்டால் உடனே வைத்தியரிடம் காட்ட வேண்டும். கண்டவர் கூறும் ஆலோசனைகளைக் கேட்கக்கூடாது. அவர்கள் சொல்லும் மருந்துகளை வாங்கிக் கொடுக்கக் கூடாது. இது குழந்தையின் உடல்நலத்துக்குப் பெருந் தீங்கு விளைவிக்கலாம். சில வேளை உயிர் ஆபத்தையும் கொண்டுவந்துவிடும். எதற்கும் வைத்தியரைக் கலந்து ஆலோசிப்பதே அவசியம்.

வைத்தியர் ஒருவராலேயே குழந்தை உடலில் ஏற்பட்டுள்ள கோளாறைக்கண்டறிய முடியும். அதற்கேற்ற சிகிச்சையைச் செய்யமுடியும். வைத்தியருடைய ஆலோசனைப்படி நடப்பதே மேலான செயல். குழந்தையை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லுமாறு அவர் கூறினால் உடனே கொண்டுசெல்லவேண்டும். சில நோய்களுக்கு மட்டும் வீட்டில் வைத்து வைத்தியம் செய்யலாம்.

வைத்தியருக்கு ஆளனுப்பிவிட்டு வைத்தியர் வரும்வரை என்ன செய்யவேண்டும் என்பதையும் பெற்றோர் தெரிந்திருத்தல் அவசியம். வீட்டில் குழந்தைக்குச் சிகிச்சையளிக்கும்போது குழந்தையைக் சவனிக்கும் முறைகளையும் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். குறைந்தபட்ச முதலுதவிச் சிகிச்சை முறைகளை வைத்தியர்கள் மூலமோ நூல்கள் வாயிலாகவே அறிந்திருத்தல் அவசியம்.

குழந்தையின் ஆடைகளைக் கழற்றி எடுத்து விடுங்கள். உடலை மெல்லிய இளஞ்சூட்டு வெந்நீரால் கழுவுங்கள். ஈரத்தை நன்றாகத் துவட்டுங்கள். படுக்கையில் படுக்க வையுங்கள். சுத்தமான காற்றுவர யன்னல்களையும், கதவுகளையும் நன்றாகத் திறந்து விடுங்கள். சூரியஒளி தாராளமாக அறையுள் வரவிடுங்கள், இவை குழந்தை உடல்நலம் பெற உதவும். பனி, மாரி, குளிர் காலமானால் குழந்தையைச் சூடுதரக் கூடிய படுக்கையில் யன்னலோரமாகப் படுக்க வையுங்கள். அறையில் எந்நேரமும் காற்றோட்டமிருக்கக்கூடிய ஏற்பாடுகளைச் செய்யுங்கள்.

## உங்கள் குழந்தைக்கு வருத்தமா?

குழந்தை படுத்திருக்கும் அறையை விளக்குமாறு, தும்புத்தடியால் கூட்டாதீர்கள். தூசு கிளம்பிக் குழந்தைக்கு மூச்சுத் திணறல் ஏற்படக் கூடும். ஈரத்துணியால் துடைத்துச் சுத்தஞ் செய்யுங்கள். அறையில் ஈக்கள், கொசுக்கள் மொய்க்க இடம் கொடாதீர்கள்.

குழந்தைக்கென உபயோகிக்கும் பாத்திரங்களைப் படுக்கைக்கு அருகே மேசை ஒன்றில் வையுங்கள். அவற்றில் ஈ மொய்க்காதபடி சுத்தமான துணியால் மூடிவிடுங்கள். மருந்துகளைக் குழந்தைக்கு எட்டாதபடி வைத்து விடுங்கள். குழந்தைக்கு உபயோகிக்கும் பாத்திரங்களை மற்றவர்கள் பாவிக்கக் கூடாது.

நோயுற்ற குழந்தைக்கு நித்திரை மிக இன்றியமையாதது. நீண்ட நேரம் அசந்து தூங்குவதைவிட வேறு சிறந்த மருந்து கிடையாது. ஆகவே அறை அமைதியாக இருக்க வேண்டும். நல்ல காற்றோட்டம் குழந்தை உறங்க வசதியாக இருக்கும். குழந்தையைப் பராமரிப்போர் தவிர வேறு யாரும் அவ்வறைக்குள் செல்வது நல்லதல்ல.

காய்ச்சல் அதிகமாயிருந்தால் கொதிக்கவைத்து ஆறிய நீரில் சிறிது சீனிகலந்து வேண்டிய அளவு குடிக்கக் கொடுக்கலாம். ஈரத்துணி கொண்டு உடலைத் துடைத்துவிட வேண்டும். தலையில் ஈரத் துணியை மடித்து வைத்துக் குளுமையாக்கலாம். குழந்தையின் பல்லைத் துலக்கி வாயைக்கொப்புளிக்கச்செய்ய வேண்டும். ஒரு கிளாஸ் இள வெஞ்சூட்டு நீரில் ஒருதேக் கரண்டிஉப்பைக் கரைத்து வாயைக் கொப்புளிக்கச் செய்தல் நல்லது.

வைத்தியரின் ஆலோசனையின்றிக் குழந்தைக்கு உணவுகளைக் கொடுக்கக் கூடாது. வாந்தி எடுத்தால் குழந்தையைச் சரிந்து படுக்கவிடவேண்டும். கொதித்து ஆறிய நீரைக் கொஞ்சம் கொஞ்சம் பருகக் கொடுக்கலாம். குழந்தை அழும்போதெல்லாம் தாய்ப்பால் கொடுக்கக் கூடாது. இதனால் அஜீரணம், வயிற்றுக்கோளாறு, வயிற்று வலி என்பன தான் ஏற்படும். குழந்தையை நெடுகவும் தூக்கி வைத்திருந்து பழக்கக் கூடாது.

குழந்தை அழுவதற்குப் பெற்றோரே காரணம். குழந்தை சிணுங்கியவுடன் தூக்கிவைத்துச் செல்லம் கொஞ்சி வருவதன் விளைவே இதற்குக் காரணமாகும். பால் கொடுக்கவேண்டிய வேளைகளில் மட்டும் தாய்பால் ஊட்டவேண்டும். குழந்தை கேட்பதையெல்லாம் கொடுக்கக்கூடாது. கண்டபடி தின்பண்டங்களையும் இனிப்பு வகைகளையும் தின்னக் கொடுக்காதீர்கள். உறவினர் வாங்கிக் கொடுக்க விடாதீர்கள். □

**வாகடனார்**




உலகநாடக மேதைகளில் சிறப்பித்துப் போற்றப்படும் வில்லியம் ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் அவலச்சுவை நாடகங்கள் (Tragedies) நாடகச்சுவைஞர்களுக்குப் பெரு விருந்தாகும். 'ஹம்லெட்' லியர் அரசன், ஒத்தெல்லோ, 'மக்பெத்' ஆகியன முக்கிய அவலச்சுவை நாடகங்களாகும். இவற்றோடு, 'யூலியஸ் சீசர்' றோமியோவும் யூலியட்டும்' அந்தோனியும் கிளியோபாட்ராவும் ஆகியவையும் அழுத்தம், தொனி, நடையுடன மாணவர்க்கு பழக்குவது ஆகும். (Pronunciation Stress, Intonation, Style) கடந்த தசாப்தத்தில் ஷேக்ஸ்பியர் நாடகங்களை மேடையேற்றாதபாடசாலைகளே இல்லை எனலாம். ஆனால் இன்று சூழ் புகழ்எய்துகிறான். போரிலிருந்து மீளும் வழியில் அவனைச் சந்திக்கும் சூனியக்காரிகளது சாஸ்திரம் அவன் மனதைக் குடைகிறது. நீ அரசனாவாய் என்பதே அது இது அடிமனத்து ஆசையாகி ஈற்றில் விருந்துண்ண தன் விடு வரும் மன்னன் டங்கனை படுக்கையில் கொலை செய்து (பதட்டத்துடன்) மன்னனாகின்றான். தன்னாட்சியை நிலைநிறுத்துவதற்காகஅதற்கு எதிராகச் செயல்படுவோரையும் கொலை செய்து ஈற்றில் நாட்டைக்காக்க முனையும் இன்னொரு படைத்தளபதி (மக்டப்f) ஆல் மக்பெத் தோற்கடிக்கப்படுதலே கதையாகும். ஆனால் ஆரம்பத்தில் டங்கன் கொலை செய்யப்பட்ட சேதியை காலையில் அப்போது தான் அறிவதாக கேட்டு மக்பெத்தும் லேடி மக்பெத்தும் அதிர்ச்சியடைவதாகப் பாசாங்கு பண்ணுருக்கும் பார்வையாளரிடம் நாடக அனுபவத்தை தொற்ற வைத்ததில் மேலும் ஒரு வெற்றியைக் கண்டிருக்கலாம் நாடகத்தின் சிறப்புக்கு மாணவர்க்குச் செய்யப்பட்ட (மேக்கப்) ஒப்பனையும் அணியப்பட்ட வேட உடுப்புகளும் கச்சிதமாகப் பொருந்தியிருந்தனர் மாளிகையின் குறியீடாக வைக்கப்பட்டிருந்த வளைவு நிலை நாடகத்தில் குறியீடாக மேடைப்பொருட்களைப் பாவிப்பதில் தயாரிப்பாளருக்கு உள்ள கற்பனையைக் கோடிட்டுக் காட்டி நின்றது.

ஆசிரியத் தொழிலில் ஓய்வு பெற்ற போதும் நாடகத் தயாரிப்பில் ஓய்வு பெறாது பாடசாலை மாணவர்க்கு ஆங்கிலநாடகங்களை அதன்சுவை குன்றாது தயாரித்து பார்ப்போருக்கு நாடகச்சுவையுடன் ஆங்கில இலக்கியச் சுவையையும் வழங்கி வரும் நாடகத் தயாரிப்பாளர் திரு. என். தேவபாலசிங்கம் அவர்களைப் பாராட்ட மாணவர் உலகம் கடமைப்பட்டுள்ளது. மேலும் பல நாடகங்களை அவர் மாணவர்களைக் கொண்டு சிறப்புடன் தயாரித்து மேடை ஏற்ற வேண்டும் என்று மாணவருலகம் அவரை எதிர்பார்க்கிறது. □

## யாழ். வேம்படியில்

## '8' கவிதைகள்

குண்டு வீச்சில் சிதறிய வீட்டின்
இடிபாடுகளின் இடையே பாதுகாப்பாக...
அந்த வீட்டின் வரைபடம்.

o o




## மரம், ஆணிவேரை நிராகரிக்கக் கூடாது

நானொரு இலக்கியக்காரன்.

—இந்தக் கூற்றில் எவருக்குமே சந்தேகம் கிடையாது"

ஆனால்—

நான் இலக்கியக்காரனாக உருவாவதற்கு முன்னர் சிறந்த வாசகனாக இருந்திருக்கின்றேன். ஏன் இப்போதும் அப்படித்தான்.

எது முற்போக்கு இலக்கியம், எது பிற்போக்கு இலக்கியம் என்று கூறுபிரித்து வாசிக்கின்ற அறிவு எனக்கு இப்போதும் வளரவில்லை.

ஆனால்—

எது சேறு, எது பூ என்று அடையாளம் காண்கின்ற அறிவு எனக்குள் நிறைய வளர்ந்துள்ளது.

இங்கு இலக்கியம் படைப்பதில் ராட்சசத்தனமாக ஈடுபட்டிருக்கும் நம் எழுந்தாளர்கள், இருவகையான போக்குகளை கடைப்பிடிக்கிறார்கள்

சிலர் தமக்குத் தமக்குப் பொருந்தக்கூடிய விஷயங்களை கட்டிப்பிடித்து அழுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் — பல எழுத்தாளர்கள் தமக்குப் பிரியமுள்ள பெயரில் இலக்கிய அமைப்புக்களை உருவாக்கிவைத்துக் கொண்டு, அவற்றையே தமக்குத் தமக்குச் சொந்தப்படுத்திக் கொண்டு, அவற்றின் மீது 'பற்றுதல் வைத்துள்ளோம்' என்ற போர்வையில் ஒரு வித வெறித்தனத்தை வளர்த்து வருகிறார்கள்.

எமது சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நிரவி, சம தர்மமாக்க வந்தவர்கள், இதற்காகவே பேனா பிடித்தவர்கள், தமக்குள் அற்ப சொற்ப விஷயங்களுக்காக சிறிய சிறிய பிரதேசங்களாக பிரிந்திருப்பது எதிர்கால இலக்கிய வளர்ச்சிக்கு தடையாகவே அமையும்.

எங்கேயோ ஒரு சப்தம் கேட்கிறது.

'நான் முற்போக்கு இலக்கியம் படைக்கிறேன். அவன் பிற்போக்கு இலக்கியம் படைக்கிறான்?

நீங்கள் என்னென்ன போக்குகளில் இருந்து என்

சீசர்' றோமியோவும் யூலியட்டும்' அந்தோனியும் கிளியோபாட்ராவும் ஆகியவையும் குறிப்பிடக்கூடியவை. 17 ஆம் நூற்றாண்டில் ஷேக்ஸ்பியர் எழுதி தயாரித்தபோதும் சரி பல்வேறு தயாரிப்பாளர்களால் பல்வேறுமுறைகளில் இன்றுவரை தயாரிக்கப்பட்டபோதும் சரி அந்நாடகங்களின் வெற்றிக்கு அவரது கவிதை நடைமொழியும், கதைப்பின்னலும் (சூழ்வும்) மனித அனுபவங்களின் ஆழமான உள வெளிப்பாடுகளைக் கருக்கமாகக் கொண்டமையும் காரணங்கள் ஆகும்.

நாடக எழுத்துரு வடிவில் இலக்கிய நயப்புக்காக வாசித்தவற்றை மேடையில் காணும்போது சாட்சி மனதில் எழுப்பும் தாக்கம் முக்கியமானது.

# வேம்படியில் 'ஷேக்ஸ்பிய'ரின் 'மக்பெத்'

நிலை மாற்றங்களால் ஆங்கில நாடகத்தயாரிப்புகள் அருகியே வருகின்றன.

1989 ஆம் ஆண்டு ஆங்கில தினப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்க்கான சான்றிதழ்களை பிரதம விருந்தினர் அவர்கள் வழங்கிக் கௌரவித்தனர் தொடர்ந்து, பாடல்


- கந்தையா ஸ்ரீ கணேசன் -

(தலைவர், ஆங்கில இலக்கிய மன்றம் யாழ். பல்கலைக் கழகம்)


அண்மையில் யாழ்ப்பாணம். வேம்படி மகளிர் கல்லூரியின் ஆங்கில தின விழாவின் போது மேடையேற்றப்பட்ட 'மக்பெத்' நாடகம் மாணவர் மத்தியில் ஷேக்ஸ்பியர் நாடகங்களைத் தேடிப் படிக்க வேண்டும், அறியவேண்டும் என்ற ஆர்வத்தை நிச்சயமாகத் தூண்டியிருந்திருக்கும். அன்றைய நிகழ்ச்சியின் பின் கட்டுரையாளரைச் சந்தித்த 6 ஆம் ஆண்டுச் சிறுமி அந்நாடகம் பற்றி மேலும் தகவல்களைப் பெறக் காட்டியிருந்த ஆர்வம் இதனை உறுதிப்படுத்தியது.

இந்நாடகத்தின் வெற்றிக்கு அதனை நெறிப்படுத்திய முன்னைநாள் பலாலி ஆசிரிய கலாசாலை ஆங்கிலத்துறை விரிவுரையாளர் திரு என். தேவபாலசிங்கம் அவர்களின் பணி காரணம் ஆகும்.

திரு. தேவபாலசிங்கம் ஆங்கிலத்தில் தயாரிக்கும் நாடகங்கள் வரவேற்பைப் பெறுவதற்கு முக்கிய காரணமாக அமைவது ஆங்கிலமொழியை அதற்கேயுரிய உச்சரிப்பு,

நிகழ்ச்சிகள், பா-ஓதுதல் மற்றும் இறுதி நிகழ்ச்சியாக 'மக்பெத்' நாடகக் காட்சிகள் சில மாணவியர்களால் நடிக்கப்பட்டன.

சூனியக்காரிகள்(Weird Sisters) சந்தித்து கதைக்கும் காட்சியுடன் ஆரம்பித்து ஸ்கொட்லாந்து மன்னனாகிய டங்கன் கொலை செய்யப்பட்ட செய்தியை சீமாட்டி மக்பெத் கேட்டு மயக்கமடையும் வரையான காட்சிகள் (இடையில் ஒன்றிரண்டு காட்சிகள் தவிர்க்கப்பட்டன) அந்த நாடக மேடையில் நடத்தப்பட்டன. இந்த அவலச்சுவை நாடகத்தின் நாயகனாகிய 'மக்பெத்' ஸ்கொட்லாந்து நாட்டு அரசன் டங்கனுடைய படைத்தளபதிகள் மூவருள் (மக்பெத் பாங்குவோ, மக்டப்f) முக்கியமானவன் சிறந்த வீரன். டங்கனின். உறவினன் நோர்வீஜியப்படையுடன் ஏற்பட்ட சண்டையில் சிறப்புடன் போர்புரிந்து அப்படையையும் அதற்கு உதவிய உள்ளூர்படைத்தலைவன் மக்டன்வோல்ட்டையும் புறமுதுகிடச் செய்து பெரும்

தலுடன் நாடகத்தயாரிப்பை தயாரிப்பாளர் நிறைவு செய்கிறார்.

மாணவிகளது சிறப்பான நடிப்பில் மிளிர்ந்த நாடகம் அவர்களது ஆங்கிலப் பேச்சு அளிக்கையினால் மேலும் சிறப்புற்றது என்றுகூறினால் மிகையாகாது. பெரும் நடி பாகங்களை ஏற்றவர்களில் சைலஜா சிவசுப்பிரமணியம் (மக்பெத்) திருமகள் நாகராஜா (சீமாட்டி மக்பெத்) அம்பிகை டிவகலாலா (பாங்குலோ) ஆகியோரும் சிறுநடி பாகங்களை ஏற்றவர்களில், சுஜாதா சிவசுப்பிரமணியம் (போட்டர்), சியாமளாபாலசிங்கம் (போர்வீரன்) வித்யா கல்யாண சுந்தரம் (மக்டப் (f) ஆகியோரும் முறையே முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களை சிறந்த நடிப்புக்காகப் பெற்றனர்.

ஷேக்ஸ்பியரது மொழிநடையிலேயே நடிக்கப்பட்டபோதும் நாடகத்தில் முக்கிய கட்டங்களை மாணவர் ரசித்தனர் என்பது அவ்வப்போது சபையில் எழுந்த சலசலப்பிலிருந்து அறியக் கூடியதாயிருந்தது. இருப்பினும் எமக்கு அந்நியமான ஒரு கதையாக இருந்தபடியால் நாடகக் கதையை சுருக்கமாக காட்சி விபரத்தையாவது தமிழில் வழங்கியிருந்தால் மாணவர் மேலும் நாடகத்துடன் ஒன்றித்திருப்பர். அத்தோடு மேடையை அதன் முழுப்பரிமாணத்துடன் பரந்த அளவில் பயன்படுத்தியிருந்தால் நாடகம் மேலும் ஒருபடி வளர்ச்சி பெற்றிருக்கும். நடிப்பும் இயைபுடன கூடிய

O O

சொரிந்து குவிந்திருந்த
பொன்னொச்சிப் பூக்களை மெல்ல
- விலக்கினேன்
உள்ளே...
இறந்துபோன வண்ணாத்திப்பூச்சி.

O O

வல்லரசுகளின் சமாதான மகாநாட்டின்
இறுதி விருந்தில் —
புறா இறைச்சி...

O O

அடைவு கடையில் திருடிய
- நகைகளினிடையே
அவனது —
திருமண மோதிரம்.

O O

ஒற்றைக் காலில் தவமிருக்கும் கொக்கு
தூண்டில்போட்டுக் காத்திருக்கும் மனிதன்...
மீனுக்காகப் பரிதாபப்படும் புழு.

O O

குழந்தைகளுக்கு மட்டும்
எந்தத் தாயின் பாடலும்
நீலாம்பரி ராகமே...

O O

ஊமைத்தாயின்
கற்பனைத் தாலாட்டை
உணர்ந்து துயிலும் குழந்தை.

O O

நாற்புறமும் துர்மணமும்
- தூசும்மிக்க சுவர்
சிறையின் கம்பிக் கதவினூடே
விரிந்த வானமும்,
- பறவைகளின் கீதமும்.

'மௌனா'

'நான் முற்போக்கு இலக்கியம் படைக்கிறேன். அவன் பிற்போக்கு இலக்கியம் படைக்கிறான்?

நீங்கள் என்னென்ன போக்குகளில் இருந்து என்னென்ன இலக்கியம் படைக்கின்றீர்கள் என்பதைத் தீர்மானிக்கப் போவது யார்?

வாசகர்களா? விமர்சகர்களா?

எவருமே இல்லை.

நிச்சயம் காலம் தான் இவற்றைத் தீர்மானிக்கப் போகிறது.

நீங்கள் எவரையும் முட்டாள்கள் ஆக்கலாம். —ஆனால் காலம் பலவருட ஆராய்ச்சிக்குப் பின்னர் மோசடி எழுத்தாளர்களை ''முட்டாள்கள்'' ஆக்கப் போகிறது.

நிகழ் காலத்துப் பிரச்சினைகளிலும் எமது சமுதாயத்தை ஓர் அடியாயினும் உயர்த்த வேண்டும் என்று அக்கறை கொள்வதிலும் பிடிப்பில்லாமல் எழுதுபவர்கள் நிச்சயம் காலத்தால் அழிக்கப்படுவீர்கள்.

காலத்தின் கவனத்திலிருந்து எந்த எழுத்துக்களும் தப்பித்துக் கொள்ள முடியாது.

இங்கே—

பல பெண்கள் வீட்டிற்குள் அடைக்கப்பட்டு வெளி உலகம் தெரியாமல் சித்திரவதைப்படுகிறார்கள்.

சீதனப் பிசாசின் கோரப்பிடியிற் சிக்குண்டு முப்பது வயதைத் தாண்டியபின்னரும் கனவுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் பல கன்னிகள்.

அந்நிய ஆக்கிரமிப்பாளர்களினால் சிதைக்கப்பட்ட பல குடும்பங்கள் வீதிகளையே வீடுகளாக்கி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வறுமைப் பேயின் வாயில் அகப்பட்டு, உணவு முத்திரையே தங்கள் உயிருக்கு உத்தரவாதம் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றன பல குடும்பங்கள்.

சாதிக் கொடுமையினால், இளைய இதயங்களுக்குள் துளிர்விட்ட காதலை விரக்திக்குத் தானம் செய்து விட்டு வாழ்க்கை என்றால் கண்ணீர்தான் என்று அர்த்தப்படுத்திக் கொண்டிருக்கின்றன பல உள்ளங்கள்.

இன வெறியர்களாலும், ஏகாதிபத்தியவாதிகளாலும் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எமது தேசத்தை மீட்பதற்காக ரத்தக்களத்தில் நின்று—நெஞ்சுரம் கொண்டு போராடிக் கொண்டிருக்கிறார்கள் இளைஞர்கள் யுவதிகள்.

—இவற்றில் மனதை ஈடுபடுத்தி, இதயசுத்தியோடு இலக்கியம் படைப்பவர்கள் இங்கே எத்தனை பேர்?

என் அனுதாபத்துக்குரிய இலக்கிய சிருஷ்டிகர்த்தாக்களே...;

உங்கள் வேஷங்களை களைந்தெறியுங்கள்.

மரம், ஆணிவேரை நிராகரித்து விட்டு நிமிர்ந்து நிற்க முடியுமா?

நீங்கள் தேசத்தை மறந்து விடாதீர்கள், தேசம் உங்களுக்குத் தீவைத்து விடும். □

இன்னும்......

# ஒரு கைதியின் நாட்குறிப்பிலிருந்து.

## சிறைப்படாத சிந்தனைகள்



26 - 9 - 1989

இன்று திலீபனின் இரண்டாமாண்டு நினைவுதினம். கடந்த வருடம்போலவே இன்று முழுவதும் இருபத்து நான்கு மணி நேரம் நீராகாரம் இன்றி நாங்கள் அனைவரும் உண்ணாவிரதம் இருக்கப் போகின்றோம் என்று எழுத்துமூலம் தெரியப்படுத்தியதை அறிந்த மேஜர் லக்கன்பால் ''இன்றைக்குக் காலை வடை போடுங்கள். உண்ணாவிரதமிருப்பவர்கள் எப்படியும் அதைக் கைவிட்டுவிடுவார்கள்'' என்று சமையல் வேலை செய்யும் பையன்களிடம் சொன்னாராம். கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை? சுதந்திரப் போராட்டம் என்றால்என்ன? தியாகம் என்றால் என்ன? என்பதைப் புரிந்துகொள்ளும் அறிவு இல்லாத நேருவின் பேரனின் கட்டளைக்குக் கீழ் படிந்து செயற்படுபவர்களால் இப்படித்தான் எம்மை விளங்கிக்கொள்ள முடியும். இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டதும் சட்டென்று ஒருவிடயம் ஞாபகத்துக்கு வந்தது. டீ. எஸ். சேனநாயக்கா இலங்கையின் பிரதம மந்திரியாக இருக்கையின் பிரதம மந்திரியாக இருக்கையில் ஒரு சமயம் சொன்னாராம். ''ஒரு பிளேன்ரீக்கும் வடைக்கும் சுருட்டுக்கும் தமிழனை விலைக்கு வாங்க முடியும்'' என்று. எல்லா ஆக்கிரமிப்பாளர்களும் வடைக்கு விலைபோகும் இனமாகவே எங்களைக் கவனிக்கிறார்கள். ஒரு ஜீ. ஜீ. பொன்னம்பலமோ ஒரு அமிர்தலிங்கமோ வடைக்கு விலைபோகலாம். ஆனால் இந்தத் தலைமுறை இந்தப் பாரம்பரிய நம்பிக்கைகளைத் தகர்த்தெறியும்!

ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் அமைப்பைச் சேர்ந்தவர்களையும் சில கடுமையான நோயாளிகளையும் தவிர ஏனையோர் அனைவரும் இருபத்துநான்கு மணி நேரம் நீராகாரம் இன்றியே உண்ணாவிரதம் மேற்கொண்டோம். ஒன்றும் சிரமமாயிருக்கவில்லை. தனித்தனியாக எங்கள் புளக்கில் இருந்தவர்களை விசாரித்தும், மிரட்டியும் பார்த்தனர். எந்த மாற்றமும் ஏற்படவில்லை. விடுதலை செய்யப்போகிறோம் என்று சொல்லி அனைவரையும் விசாரிப்பது இன்றும் தொடர்ந்தது. அடிக்கடி தனது பூணூலை வெளியே இழுத்துக் காட்டி தான் ஒரு பிராமணன் என்று பெருமையடித்துக் கொள்ளும் கேணல் வாசவன் சிலரிடம் ''நீ என்ன ஜாதி'' என்று கேட்டாராம். எல்லோரும் தமிழ்ச்சாதி என்றே பதிலளித்தனராம். விசாரணைக்குப் போனவர்களிடம் மேசையில் இருந்த வடையைக்காட்டி விடுதலை தேவையென்றால் வடை சாப்பிடலாமே? என்று கேட்டார்கள். ஒருவருமே இவர்கள் வலையில் விழவில்லை என்று அறிந்து சந்தோஷம் அடைந்தேன்.

> எங்கள் நரட்டிலும் முன்னர் சிலர் தங்கள் குழந்தைக்கு காந்தி என்றுதான் பெயர் வைத்தனர். ஆனால் இப்போது திலீபன் என்று தானே பெயர் வைக்கிறார்கள். இங்கு உதிக்கும் திலீபன்கள் இந்தியர்களுக்கே தியாகம் என்றால் என்ன என்பதை போதித்தார்கள். போதிக்கிறார்கள்.

சிறையிலுள்ள கவிஞர்களின் கவிதைகளையும், அந்தக் கவிதைகளுக்கு ஏற்ற ஓவியங்களையும் தாங்கிய தியாகத் திலீபம் என்ற கையெழுத்துப் பிரதியான நினைவு மலர் வெளியிடப்பட்டது. எங்கள் அனைவரினதும் உணர்வுகளின் மொத்த வடிவம் இந்தமலர். வெளியே போகும் காலத்தில் இந்த மலரை நாங்கள் அச்சில் பிரசுரிக்க வேண்டும் என்பது எல்லோரது ஆசையுமாகும். சிறைக்குள் உருவாகிய ஓவியர்களுக்கு இன்று ஓவியப்போட்டி நடாத்திப் பரிசு வழங்கப்பட்டது. மக்களின் துன்பங்களைக் களைவதற்கு தனது துப்பாக்கியையும், பேனாவையும் திலீபன் பயன்படுத்தினான் என்ற கருத்தை விளக்கும் வகையில் பெரிய பாறாங்கல்லின் சுமையால் வேதனையில் துடிக்கும் ஒருவரின் சுமையை தனது பேனாவை நெம்புகோலாகப் பாவித்து ஒரு போராளி நீந்துவதாயும் அந்தப் போராளியின் தோளில் துப்பாக்கி இருப்பதாகவும் வரையப்பட்ட ஓவியத்துக்கே முதல் பரிசு வழங்கப்பட்டது. மொத்தம் ஐந்து பரிசுகள் வழங்கப்பட்டது. ஓவியங்களின் கற்பனையும், அவற்றின் அழகும் பிரமாதமாயிருந்தன.



ஒவ்வொரு புளொக்காக மேஜர் லக்கன் பால் பார்த்துச் சென்றார். ஆனால் விபரீதமாக எதுவும் நடக்கவில்லை. ஒரு நாள் H புளக்கில் ஏதோ கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதமிருந்தபோது அப்போது மேஜராக இருந்த டுத்தா என்ற மேஜரிடம் பின்னப்பட்ட வயறினால் எமது பையன்கள் அடிவாங்கினார்கள். இன்று எல்லோரும் உண்ணாவிரதம் இருப்பதனால் அடிப்பதானால் அடிக்கட்டும். அதையும் நாம் வரலாறாக்குவோம் என்றே காத்திருந்தோம். காந்தியின் தேசத்தவர்களிடம் அகிம்சை படும் பாட்டை வெளியுலகம் அறிய வேண்டும்.

> காந்தியின் பிறந்த தினத்தன்று யாழ்ப்பாணத்திலுள்ள காந்தி சிலைக்கு ஒரு பொது மகன்கூட மாலை போடவில்லை. கடைசியாக நான்தான் மாலை போட்டேன். நன்றியற்ற மக்கள் உங்கள் மக்கள்.
>
> — மேஜர் ஜெனரல் சர்தேஷ் பாண்டே

ஒரு நாள் இங்கு வந்த மேஜர் ஜெனரல் சர்தேஷ் பாண்டே என்பவர் ''காந்தியின் பிறந்ததினத்தன்று யாழ்ப்பாணத்திலுள்ள காந்தி சிலைக்கு ஒரு பொது மகன்கூட மாலை போடவில்லை. கடைசியாக நான்தான் மாலை போட்டேன். நன்றியற்ற மக்கள் உங்கள் மக்கள்'' என்று கண்டமாதிரி எல்லாம் திட்டிவிட்டுச் சென்றார். இதற்கு நாங்கள் என்ன செய்வது? காந்தீயத்தைக் கொன்றுவிட்டு காந்தி சிலைக்கு மாலை அணிவிப்பதில் என்ன பயன்? மற்றது எங்கள் நாட்டில் திலீபனைத்தான் எமக்குத் தெரியும். எங்கள் மனங்களில் திலீபன்தான் உயர்ந்து நிற்கின்றான். காந்தி சிலையில் உள்ள தடிகூட S.L.R. ஆகத்தான் எமது மக்களின் கண்ணுக்குத் தெரிகிறது. என்ன செய்வது? இது தவிர்க்க முடியாதது. காந்தி சிலை உயிர் பெற்றெழுந்தால் இந்திய இராணுவம் போட்ட மாலையைக் கழற்றி எறிந்திருக்கும். எங்கள் நாட்டிலும் முன்னர் சிலர் தங்கள் குழந்தைகளுக்கு காந்தி என்றுதான் பெயர் வைத்தனர். ஆனால் இப்போது திலீபன் என்றுதானே பெயர் வைக்கிறார்கள். இங்கு உதிக்கும் திலீபன்கள் இந்தியர்களுக்கே தியாகம் என்றால் என்ன என்பதை போதித்தார்கள். போதிக்கிறார்கள். □

---




- □ ''சாந்தனின்'' கடிதம்
- □ யாழ்ப்பாணம் கச்சேரியும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களும்
- □ வீதி ஒழுங்கு
- □ ''மார்க்'' ஓவியக் கண்காட்சி

''ஒரு கடிதம் வந்திருக்கு'' என்று சொல்லிக் கொண்டு சவுந்திரம் வந்தான்.

'ஆரடாப்பா போட்டது?'' இது விக்கி.

[illegible]

பற்றிச் சொன்னனாங்கள்''

''அது எதடாப்பா புத்தகக் கடை''

''நீ அடிக்கடி ரவுணுக்குப் போட்டு வாறனி உனக்குத் தெரியாதே ...

''பிறப்புச்சாட்சிப் பத்திரத்திலையும் 1954ஆம் ஆண்டுக்கு முந்திப் பிறந்த ஆட்களுக்கு ஒரு பக்கம் எழுதிய பிறப்பு சாட்சிப் பத்திரம் 1954ஆம் ஆண்டுக்குப் பிறகு பிறந்த ஆட்களுக்கு இரண்டு பக்கமும் எழுதிற பிறப்புச் சாட்சிப் பத்திரம். இப்படி இரண்டுவிதமாய் இருக்கு''

''ஆனால் இப்ப அடிக்கடி பிறப்புச்சாட்சிப் பத்திரங்கள் எடுக்கிறது. 1954ஆம் ஆண்டுக்குப் பிறகு பிறந்த ஆட்கள் தானே. அதுவும் 1960ஆம் ஆண்டுக்கும் 1970-ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட ஆட்களதான் கூட''

''ஓமோம் ஆனால் கச்சேரிக்கு போய் விசாரிச்சுப்பார். இரண்டு மாதத்துக்கு ஒருக்காஎது அதிகமாய் தேவைப்படுதோ அந்த இரண்டு பக்கமும் எழுதிற 1954ஆம் ஆண் ...

மோட்டார் சைக்கிள்காரர் எல்லாரையும் வடிவாய்க் சவனிக்க வேணும்' என்று விக்கி சொன்னான்.

□

'சவுந்திரம் நீ 'மார்க்' மாஸ்டரிண்டை ஆர்ட் எக்சிபிஷன் பார்க்கப் போனனியே'

'எது அண்டைக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலே நடந்த எக்ஸிபிஷனைப் பற்றிக் கேக்கிறியோ'

'ஓமோம்'

'நான் பாக்கேல்லை'

'ஏண்டாப்பா நீ தானே உந்த கலை, இலக்கியம், சிற்பம், ஓவியம் எண்டு ஓடித்திரிவாய்'

'எனக்கு ஆர்வம் இருக்கி ...

---

## மாணவருலகு......

ஒவ்வொரு மனிதனுக்கும் மானிடத்தை, மனித நேயத்தைக் கற்றுக்கொடுக்கும் பருவம் மாணவப்பருவமாகும். இந்தப் பருவத்தில் தான் மின்னல் கீற்றுக்களைப் போல் பளிச்சிடுகின்ற எண்ணங்களைச், சிந்தனைகளை வளர்த்துக்கொள்ள முடியும். தமக்கு வேண்டிய அறிவைப் பெற்றுக்கொள்ளவோ பெருக்கிக் கொள்ளவோ முடியும், அறிவு என்பது அழிவு வராமல் காக்கும் கருவியாகும். பகைகொண்டு தாக்குபவர்கள்கூட அழிக்கமுடியாத உள் அரண் இந்த அறிவேயாகும்.

கடந்த காலத்தில் எமது சமூகம் மனிதாபிமானமற்றவர்களினால் மறக்கமுடியாத பல கசப்பான அனுபவங்களின் காயங்களைச் சுமந்து நிற்கிறது. இந்நிலையில், இன் ... கட்டுண்டு கிடந்த எம்மால் மோசமான கலாசாரச் சீரழிவு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தெரிந்தோ தெரியாமலோ நாம் எமது பாரம்பரிய கலைகளின் வளர்ச்சியினைத் தடை போட்டுவிடுகிறோம். (உதாரணமாக:- வீடுகளில் நடைபெறும் கொண்டாட்டங்கள், வைபவங்கள், திருமண விழா, பிறந்தநாள் விழா, போன்றவற்றில் விடியவிடியத் திரைப்படங்கள் ஓடுகின்றன. இவ்விழாக்களில் வில்லுப் பாட்டு, கவியரங்கம், நாடகம் போன்ற உள்ளூர் நிகழ்ச்சிகளை நாம் சேர்த்துக் கொள்ளவேண்டும்.) தமிழினத்துக்கென்று கலை, கலாசாரம், மொழி என்பன உண்டு. இதனை வலியுறுத்தியே நாம் தனியினமென்று போராடுகின்றோம். எமது கலை. கலாசாரம், மொழி என்பவற் ...

... ணத்துவமடைகிறது. மாணவப் பருவத்தில் மனதில் படியும் உணர்வுகளைப் பொறுத்தே மனிதன் உருவாகிறான். ஒரு மாணவனை நல்லவனாக உருவாக்குவதில் பெற்றோரும் ஆசிரியர்களும் பெரும் பங்கு வகிக்கிறார்கள். பெற்றோர்கள் பிள்ளைகளின் மீது கல்வியைத் திணிக்கும் முறையை மாற்றி, அவர்களுக்கு நாட்டமுள்ள துறைகளில் முன்னேற ஒத்துழைப்பு நல்க வேண்டும். இதே போன்று ஆசிரியர்களும மாணவர்களினுடைய திறமைகளைக்

ஆதிலட்சுமி

ஒரு கடிதம் வந்திருக்கு என்று சொல்லிக் கொண்டு சவுந்திரம் வந்தான்.

'ஆரடாப்பா போட்டது?'' இது விக்கி.

'எங்கடை எழுத்தாளர் சாந்தன்' என்றான் தாடி மாமா. ''சாந்தனோ- எங்கை வாசி பாப்பம்.' எனவிக்கி சொல்ல சாந்தனின் கடிதத்தினை சவுந்திரம் வாசிக்கத் தொடங்கினான் 'வணக்கம், 18.03.90 இதழ் 'மதவடி' கண்டதும் எழுதுகிறேன். எனது 'ஒட்டுமா' நாவலை அதிக விலையில் விற்கப்படுவது பற்றிய குறிப்பினைக் கண்டேன்.

குறித்த நூல் வரதர் வெளியீடாக வந்தது. அந்த 1978ஆம் ஆண்டுப் பதிப்பின் விற்பனை உரிமையும் அவர்களதே. எப்படியிருப்பினும் அவர்களும் இப்படிச் செய்திருக்க மாட்டார்களெனவே நம்புகிறேன்'

எந்தப் புத்தகக்கடை என்பது போன்ற விபரங்களும் 'மதவடி' யில் இல்லை. அதை யாவது குறிப்பிட்டிருந்தால் உதவியாய் இருக்கும்.

எனக்கும் இவ்விலை மாற்றத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை; அதை நான் அறிய நேர்ந்ததே இப்போது தான். (உண்மையில் என் கைவசம் போதிய பிரதிகளில்லாமல் இருப்பதால், குறித்த புத்தகக் கடையை எதுவென அறிந்தால் நானும் சில பிரதிகளை வாங்கிக் கொள்ள முடியும்!)

இவ்விலை மாற்றத்துடன் என பெயரையும், குறிப்பிட்டிருப்பதால் அது பற்றிய என் அறியாமையையும் தகுந்தவிதத்தில் கூடிய விரைவில் மதவடியில் இடம் பெறச் செய்வீர்களென எதிர்பார்க்கிறேன். ''உங்களுக்கு ஏன் தேவையில்லாத வேலையை'' என தாடி மாமா முணு முணுக்கத் தொடங்க ''நாங்கள் ஒண்டும் தேவையில்லாத வேலையைப் பாக்கேல்லை கண்ணுக்கு முன்னால நடந்த அநியாயத்தைப்

''அது எதடாப்பா புத்தகக் கடை''

''நீ அடிக்கடி ரவுணுக்குப் போட்டு வாறனி உனக்குத் தெரியாதே. புத்தகக்கடைக் காரரிலையும் பிழையில்லை. ஆரோ தான் கொண்டு வந்து கொடுத்தவையாம்''

''அதுதான் எந்தப் புத்தகக் கடை'

'பூபாலசிங்கம் புத்தகக் கடைதான்''

□

''நீ அண்டைக்கு பேத் சேட்டிபிக்கட் தான். செண்டு கிடைக்கிறதைப் பற்றிச் சொன்னாய். நான் விசாரிச்ச மட்டில இப்ப கனகாலமாய் கச்சேரியில இருக்கிற உந்த பிறப்பு இறப்பு பதிவு காரர் கந்தோர் ஒழுங்காய் இல்லை'

'எப்பிடியடாப்பா உனக்குத் தெரியும்?' 'எனக் கேட்டான் தாடிமாமா.

'இரண்டு கிழமையாய் என்ரை பேத் சேட்டிபிக்கட்டுக்கு திரிஞ்சனான். தெரியாமல் இருக்குமே''

'பிறப்புச் சாட்சிப் பத்திரத்திற்கும் அப்பிளிக்கேசன் போட்டால் அவை கையால எழுதின பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் கொடுப்பினம். அல்லது அங்கை இருக்கிற பதிவுப் புத்தகத்தை போட்டோட் ஸ்ரட் கொப்பி எடுத்து சைன் பண்ணித் தருவினம். ஆனால் அங்கை இருக்கிற போட்டோஸ்ரைட் மெசின் இரண்டு நாளைக்குத் தானாம் ஒழுங்காய் வேலை செய்யும். இரண்டு மூண்டு நாளைக்குப் பிறகு பழுதாய்ப் போயிடுமாம். பிறகு அதைத் திருத்த இரண்டு மூண்டு மாதம் செல்லும், பிறகு பழைய குருடி கதவைத் திறவடி கதைதான்.'

''நல்ல பகிடியாய் தான் இருக்கு'' என்று தாடிமாமா சொல்லிச் சிரித்தான்.

''ஓமோம் ஆனால் கச்சேரிக்கு போய் விசாரிச்சுப்பார். இரண்டு மாதத்துக்கு ஒருக்கா எது அதிகமாய் தேவைப்பபடுதோ அந்த இரண்டு பக்கமும் எழுதிற 1954ஆம் ஆண்டுக்குப் பிறகு பிறந்த ஆட்களுக்கு கொடுக்கிற பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள் தட்டுப்பாடாய் இருக்கும். இதுவும் ஒரு தொடர்கதையாய் அடிக்கடி நடக்குது.'

## அயக்கிரீவன்

'இந்த இரண்டு பக்கமும் எழுதிற பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் தான் அதிகம் தேவைப்படும் எண்டு சம்பந்தப்பட்ட ஆட்களுக்கு ஏன் தெரியாமல் போகுது' எனக் கேட்டான் விக்கி.

□

''இப்ப யாழ்ப்பாணம் ரவுணுக்குப் போக சந்தோஷமாய் இருக்கு' என சந்தோஷமாகச் சொன்னான் விக்கி.

'என்ன விசேஷம். நானும் தான் ஒவ்வொரு நாளும் போட்டு வாறன்' என ஆச்சரியமாய்க் கேட்டான் தாடி மாமா.

''இப்ப ரவுணில முக்கியமான இடத்தில வெள்ளை உடுப்புப்போட்ட சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் ஆட்களாக இருக்கவேணும் வீதி ஒழுங்கைப் பாக்கினம்'

'உண்மையில உது ஒரு நல்ல அலுவல்தான் ஒருவழிப்பாதை எல்லாம் இப்ப ஒழுங்காய் நடக்குது. நிம்மதியாய் போய் வரக் கூடியதாய் இருக்கு'

'உப்பிடியான வீதி ஒழுங்கு தனிய யாழ்ப்பாணம் ரவுணுக்கு மாத்திரம் இருக்கக் கூடாது. எல்லா இடமும் இருக்க வேணும்.

'அதோடு கண்டபடி கண்ணைமூடிக்கொண்டு ஓடுறமாதிரி ஓடுற மினிபஸ்காரர்,

'ஏண்டாப்பா நீ தானே உந்த கலை, இலக்கியம், சிற்பம், ஓவியம் எண்டு ஒடித்திரிவாய்'

'எனக்கு ஆர்வம் இருக்கிறது வேறை விஷயம். ஆனால் உப்பிடியான ஆர்ட் எக்ஸிபிஷனையோ சிற்பக் கண்காட்சியையோ நெடுக யாழ்ப்பாணத்தில நடத்திக் கொண்டு இருந்தால் நல்லதே'

'ஏன்'

'இல்லை எங்கடை ஊர்ப் பக்கங்களிலையும் உதுகளை கொண்டு வந்து நடத்தலாம் தானே. ஒவ்வொரு ஊராய் வைக்க வேணும் எண்டு இல்லை. ரவுணை விட்டுவிலத்தி இரண்டு மூண்டு ஊர்களுக்குப் பொதுவாய் வசதியான ஒரு இடத்தில நடத்தினால் ஊரில இருக்கிற சனங்களுக்கும் உடயோகமாய் இருக்காதே'

□

## வைரவரிகள்

*பணப்பிரச்சினை என்றால் எல்லாரும் ஒரே மதத்தவர் தான்.*
*குற்றங்கள், துர்ப்பாக்கியங்கள் - இவற்றின் பதிவுப் பேரேடு தான் சரித்திரம்.*

*இருதயம் முணுமுணுக்கும் போது வாய் அற்பமாகத்தான் கீழ்ப்படிகிறது.*

- வால்டேர்

*உலகிலுள்ள முழு இருளும் சேர்ந்தாலும் ஒரு சிறு மெழுகுவர்த்தியின் ஒளியை அணைத்து விட முடியாது.*

- யாரோ

கடந்த காலத்தில் எமது சமூகம் மனிதாபிமானமற்றவர்களினால் மறக்கமுடியாத பல கசப்பான அனுபவங்களின் காயங்களைச் சுமந்து நிற்கிறது. இந்நிலையில், இன்றைய மாணவ உலகத்திடமிருந்து எமது சமூகம் பல விதமான பங்களிப்புக்களை எதிர்பார்த்திருக்கின்றது. ஒரு சமூகத்திற்கும், தேசத்திற்கும் மாணவர்களுடைய பங்களிப்பு அத்தியாவசியமாகின்றது. மாணவர்களது முன்னேற்றத்தின் முதலாவது எதிரி சோம்பேறித்தனமாகும். மாணவர்கள் முதலில் மனச்சோர்வையும், சோம்பலையும் களைந்து சொள்ளவேண்டும்

''நீ இளமையில் வீணாக்கும் ஒவ்வொரு வினாடியும் உனது எதிர்காலத்தின் கண்ணீர்த்துளிகள்'' என்றார் விவேகானந்தர். இந்த வாசகத்துள் பொதிந்துகிடக்கும் உண்மையை அனைவரும் அறிவர். அடுத்து மாணவர்கள் தமது எண்ணங்களைத் தீய வழிகளிற் செலுத்துவதைத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். பாடசாலைப் புத்தகங்களைச் சுமக்கவேண்டிய மாணவன் இங்கே மிகவும் துர்அதிஷ்டவசமாக வீடியோசினிமாப் படக் கொப்பிகளையே சுமக்கும் பரிதாபநிலையைப் பெரும்பாலும் காண்கின்றோம்.

இந்த மாயையிலிருந்து எமது மாணவர்கள் விடுபட வேண்டும். தரமற்ற, ஆபாசக் காட்சிகள் நிறைந்த, மனித முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடுகின்ற சினிமாக்களில் பொன்னான நேரங்களைப் பலியிட்டுக் கொள்ளாமல், எமது பாரம்பரிய கலை கலாசாரங்களை வளர்த்தெடுப்பதில் அக்கறைகொள்ள வேண்டும் கருத்துச்செறிவான மேடை நாடகங்கள், கிராமிய நடனங்கள் போன்ற வற்றில் ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும்.

எம்மிற் பெரும்பாலானோர் கலப்புக் கலாசாரங்களையே பின்பற்றிவருகின்றோம், காலங்காலமாக அந்நியர்களின் ஆதிக்கக் கரங்களுக்குள்

கென்று கலை, கலாசாரம், மொழி என்பன உண்டு. இதனை வலியுறுத்தியே நாம் தனியினமென்று போராடுகின்றோம். எமது கலை. கலாசாரம், மொழி என்பவற்றைப் புறக்கணிப்பதன் மூலம் நாம் எமது வளர்ச்சியைப் பின்னடையச் செய்தவர்களாவோம்.

## ஆதிலட்சுமி

கணித்து அவர்கள் முன்னேற வாய்ப்பளிக்கவேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களிடம் தாழ்வுமனப்பான்மை (Inferi

# சமுகமுன்னேற்றத்தில் மாணவர்களின்பங்கு

1970 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட ''தரப்படுத்துதல்'' மூலம் முதன் முதலாக மாணவர்கள் இனரீதியாக ஒடுக்கப்படத் தொடங்கினார்கள். இதனைத் தொடர்ந்து பல்வேறு வடிவங்களில் மாணவர்கள் ஒடுக்குமுறைக்குட் படுத்தப்பட்டார்கள். சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்படுதல், துன்புறுத்தப்படுதல் சுட்டுக்கொல்லப்படுதல் போன்றவற்றால் எமது மாணவசமூகம் போராடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. பாடசாலைகளில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன. சில பாடசாலைகள் அகதி முகாம்களாகின. இன்னும் சில முற்றாகச் சேதமாக்கப்பட்டன. இந்நிலைமை மாணவர்களின் கல்வியைப் பாதித்ததுடன், மாணவர்களிற் பெருமளவினரைச் சமூகப்பொறுப்புகளிலிருந்து விலகி வெளியேறவும் வைத்தது.

இந்நெருக்கடியான காலகட்டத்திலும் எமது மாணவர்கள் சளைக்காது பல சாதனைகளைப் புரிந்து வருவது பாராட்டுக்குரியது. வரும் காலம் வளமானதொரு காலமாக அமையுமென அனைவரும் நம்புகின்றோம்.

தான் கற்றகல்வியை தேவைப்படும் சந்தர்ப்பங்களில் சரியான முறைகளில் உபயோகிக்கும் போதுதான் ஒரு மாணவனின் கல்வியறிவு பூர

ority Complex) தலைதூக்குவதைத் தம்மாலியன்றளவு தடுத்திடவேண்டும்.

இன்று பெரும்பாலான ஆசிரிய- மாணவர்களுக்கிடையே நல்லுறவு மிகவும் வேதனைக்குரியதாகவேகாணப்படுகிறது. மாணவர்களிலும் கணிசமானவர்கள் ஆசிரியருக்கு ''மேலால்'' கதைப்பதையும், ஆசிரியர் கூறுபவற்றை மறுதலிப்பதிலுமே குறியாக இருக்கின்றனர். ஆனால், இவர்கள் ஓர் உண்மையை உணர்ந்து கொள்ளுவதில்லை. ஒரு ஆசிரியரின் நன்மதிப்பையும், நல்லாசிகளையும் பெற முனையாத எந்தவொரு மாணவனும் வாழ்வில் உயர்வடைய முடியாது. இதனால்தான் ''எழுத்தறிவித்தவன் இறைவன்'' என்கின்றோம்.

ஒரு சிறந்தமாணவன் தான் நிறைந்த மனிதனாகின்றான். நிறைந்த மனிதனாலே தான் சமூகம், இனம் முன்னேற்றமடைகிறது. எனவே தான் மாணவர்கள் ஒழுக்கம், கடமை, கட்டுப்பாடு என்பவற்றில் சிறந்து விளங்கவேண்டியது அத்தியாவசியமாகிறது.

□




அன்பான சிறுவர் சிறுமியரே

வணக்கம்

துருவன் பற்றிய உங்கள் கருத்துக்களும் ஆர்வமும் உற்சாகமுட்டக் கூடியதாக இருக்கிறது.

தொடர்ந்தும் தரமான சுவையான அத்துடன் உபயோகமான விடையங்களை தரவுள்ளோம்.

உங்கள் ஆக்கங்களை தொடர்ந்து அனுப்புங்கள் விடுமுறை காலம் தானே ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபடுங்கள்

அடுத்தவாரம் சந்திப்போம்......

- தமிழண்ணா

## தேடிஎடுத்துப் படியுங்கள் - I

- இப்பகுதியில் உலகப்புகழ் பெற்ற சிறந்த சிறுவர் நூல்கள் பற்றிய கதைச் சுருக்கம் தொடர்ந்து வெளிவரவுள்ளது
- இந் நூல்களை நீங்களும் தேடி எடுத்துப்படித்து பயனடையுங்கள்.

## றொபின்சன் குருசோ

ஒரு முறை படித்தால் மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் வெகு இரசனையான கதை இது. சிறுவர்கள் மட்டுமல்ல பெரியவர்களும் இரசித்துப்படிக்கும் கதை இது. சிறுவர், பெரியவர் என பலதரப்பட்டவர்களும் படிக்கும் வகையில் இக்கதை பலதரப்பட்ட அளவுகளில் சுருக்கியும் நீட்டியும் இன்று வெளியிடப்படுகிறது.

ஒரு குறிப்பு: இந்த ரொபின்சன் குருசோ ஒரு மனிதரின் அனுபவத்தை வைத்தே எழுதப்பட்டது என சிலர் கூறுகின்றனர். ஒரு சில கலைக்களஞ்சியங்கள் (Encyclopedia) இக்கதைக்கான அனுபவத்தை பெற்ற மனிதரையும் குறித்துள்ளது. ஸ்கொட்லாந்தைச் சார்ந்த அலெக்சாந்தர் ஸெல்கிரிக் என்பவரே அம்மனிதர்.

ரொபின்சன் குருசோ: டானியல் டிபோ என்ற ஆங்கிலக் கதாசிரியரின் கைவண்ணம் இது.


அவன் பெயர் ரொபின்சன் குருசோ கடற்பயணி அத்துடன் வர்த்தகன்.

ஒருமுறை கடற்பயணத்தில் புயல் ஒன்று அடித்தது. கப்பல் கவிழ்ந்தது. கரைதேடி பயணிகளின் கடலில் அங்கலாய்க்கின்றனர். பின்னர் இறந்தனர். அவர்களில் ரொபின்சன் குருசோ மட்டும் தப்பித்து யாருமற்ற தீவு ஒன்றில் இறங்குகின்றான். தீவில் தனிமைப்படுத்தப்பட்ட குருசோ ஒருகுகையை தன்வீடாக அமைத்தான். கவிழ்ந்த கப்பலிலிருந்து உணவு, துப்பாக்கிகள், தொலைநோக்கி ஆகியவற்றை கவர்ந்து தான் அமைத்த வீடுகளில் ஒழுங்குபடுத்தினான். தொலைநோக்கி வழியாக தினமும் கடலை அவதானித்து கப்பல் ஏதாவது வருகின்றதா என அவதானிக்கின்றான்.

ஆண்டுகள் கடந்தன குருசோ ஒரு தனி மனிதனாய் தன் இருப்பிடத்தை வளமாக்கினான். பயிர்ச்செய்கை செய்தான். தீவில் அநாதரவாகத் திரிந்த ஆடுகளை வளர்த்தான். கிளி ஒன்றையும் நாயொன்றையும் தோழர்களாக்கினான். உடைகளை ஆட்டுத் தோலினால் தயாரித்தான்.

பலமுறை மரங்களைக் கோதி படகுகளாக்கி அத்தீவிலிருந்து வெளியேற முயன்றான். ஆனால் பலிக்கவில்லை.

திடீரென ஒருநாள் பல காட்டுவாசிகள் படகில் ஒருவனைக் கட்டியவாறு தீவிற்கு கொண்டு வந்தனர். அவர்கள் அவனைக் கொன்று தின்பதற்காக கொண்டு



மேலேயுள்ள படத்தில் ஒரு விமானத்தையும், ஒரு கோளத்தையும் காண்கின்றீர்கள். இவ்விமானம் விண்வெளி ஆராய்ச்சிக்காக சில விரர்களை ஏற்றிக்கொண்டு பூமியைவிட்டு விண்வெளியில் புகுந்தது. தெரியாத்தனமாக விரர்கள் பூமியைவிட்டு வெகுதூரம் சென்றுவிட்டனர். "தயவுசெய்து விமானம் பூமியை அடைய வழிகாட்டி உதவுங்கள்"

## துவிச்சக்கரவண்டியின் கதை

சைக்கிள் இன்று உங்களின் உற்ற தோழனாக விளங்குவது சைக்கிள் என்ற துவிச்சக்கரவண்டி இது தயாரிக்கப்பட்ட சிறு வரலாறு இதோ.

ஆரம்ப காலங்களில் சைக்கிள்கள் தற்போதைய அமைப்பிலேயே இருந்தன. ஆனால் அவற்றில் சங்கிலியோ (செயின்) மிதியோ (பெடல்) கிடையாது. உட்காருமிடத்தில் இருந்து கொண்டு கால்களால் நிலத்தை தத்தள்ள வேண்டும். இத்தகைய ஆரம்ப சைக்கிள் 1816 இல் 'பரொன்வொன் டாரைஸ்' என்ற ஜேர்மன் காரரால் தயாரிக்கப்பட்டது. இதன் பின்னர் சங்கிலி மிதியுடனான சைக்கிள் அறிமுகமானது. இத்தகைய வசதி கொண்ட சைக்கிளில் ஒரு பெரிய சில்லும் ஒரு சிறிய சில்லும் இருந்தன. பெரிய சில்லில் கவர் (போக்) அமைத்து அதன் உச்சியில் இருக்கை இருக்கும் பெரியசில்லின் அச்சுடன் சங்கிலி இணைக்கப்பட்ட மிதி இருக்கும். அதனை மிதிக்க 60 அங்குல விட்டமான பெரிய சில்லு சுற்ற சைக்கிள் அசையும். இதனை 'பியரி மிச்சல்ஸ், பியரியால் எம்பேட்' எனும் இருவர் 1860 இல் தயாரித்தனர். இந்த சைக்கிளினால் பெரிய தொல்லை. ஏறுவது கடினம். நிறுத்துவது கடினம். (இதன் தொல்லைகளை சார்ளி சட்லின்

## வாரம் ஒரு அறிவுரை

— "பாதகம் செய்பவரைக் கண்டால் - நீ பயங் கொள்ளல் ஆகாது பாப்பா மோதிமிதித்து விடு பாப்பா அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா" என்றார் மகாகவி பாரதியார்.

— அநியாயம் எந்த வடிவில் வந்தாலும் அதனை எதிர்க்கும்

## விடுதலை வீரர் கதை (2)



### நீக்ரோமக்கள் தலைவர் நெல்சன் மண்டேலா

மண்டேலா என்ற மாமனிதன் 1918 ஆம் ஆண்டு யூலை 18 ஆம் திகதி தென் ஆபிரிக்க தேசத்தின் திரான்ஸ்கோய் என்ற இடத்தில் பிறந்தார். முழுமையான பெயர் நெல்சல் ரொல்காலா மண்டேலா. இவரது இனம் கறுப்பினத்தின் கோசா என்ற பழங்குடியின் அரச வம்சம் ஆகும்.

வெள்ளையர்கள் கறுப்பின மனிதர்களை ஒடுக்கியதன் காரணமாக அவர்களிடம் விடுதலை எழுச்சி உண்டானது. இவ் எழுச்சியின் காரணமாக ஒரு இபக்கம் உண்டானது. அவ்வியக்கம் 1912 ஆம் ஆண்டு தை மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமானது. அதன் பெயர் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்' சுருக்கமாக ANC என்பார்கள். இதன் தலைவர் தான் மண்டேலா மாமா. இந்த மண்டேலா தலைவரானதும் சிறுவர் முதல் முதிந்தோர் வரை பதித்தனர்.

சரி இதில் ஒரு குழப்பம். 1919 இல் தொடங்கிய ANCக்கு 1918 இல் பிறந்த மண்டேலா எப்போது தலைவரானார். இதைத்தான் இனிக் கூறப்போகின்றேன்.

1918 இல் பிறந்த மண்டேலா கல்வியிற்சிறந்து விளங்கினார். வெள்ளையர்களையே அனுமதிக்கும் நிறவெறி கொண்ட தென்னாபிரிக்க பல்கலைக்கழகத்தில் புகுந்து பல வித அனர்த்தங்களுக்கிடையில் ஒரு வழக்காளராக வெளியேறினார். கல்வியின் பின் அரசியல் போராட்டத்தில் கலந்து தென்னாபிரிக்க தேசிய கொங்கிரஸிற்கு தலைமை தாங்கி கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச்சென்றார். வெள்ளையர் அரசு இவருக்கு பல இன்னல்களை தந்தது. இதனால் மண்டேலா தளரவில்லை. போராட்டம் உக்கிரமடைந்தது. இந்த உக்கிரத்தை தாங்க முடியாத வெள்ளையர்களை அவசர காலச் சட்டம் என்ற பெயரில் சிறைக் கூண்டினுள் 1964 யூன் 12 இல் ஆயுட் கைதியாக அடைத்தது. மண்டேலா கைதியாக இருந்தாலும் அவரது இயக்கம் அவர் சொற்படியே நடந்தது. தென்னாபிரிக்க மக்களெல்லாம் அவரையே தலைவனாகக் கொண்டார்கள். மண்டேலாவின் ஆயுட்கைதிக்கான காலம் முடிந்தும் அவரை வெள்ளையர் அரசு விடுவிக்கவில்லை. ஏன் தெரியுமா? அவர வெளியே வந்தால் போராட்டம் மேலும் உக்கிரமடையுமாம். ஆனால் மண்டேலா உள்ளே இருந்தபோதும் போராட்டம் நடந்து கொண்டேயிருந்தது.

எங்கும் சுவரொட்டிகள் மண்டேலாவை விடுமாறு கோரியிருந்தன. உங்களைப் போன்ற சிறுவர்கள் அச்சுவரொட்டிகளை தடவி 'மண்டேலா மாமா எப்போது எங்களை மீட்க வருவீர்கள்' என்று கெஞ்சுவார்களாம். இப்படி பாலகர் மனதிலும் இடம் பிடித்த மண்டேலாவை 'வெளியே சென்று புரட்சி செய்யா திருப்பின் உம்மை விடுதலை செய்வோம்'

ஒருவனைக் கட்டியவாறு தீவிற்கு கொண்டு வந்தனர். அவர்கள் அவனைக் கொன்று தின்பதற்காக கொண்டு வந்தவர்கள் ஆம் அவர்கள் நரமாமிச பட்சணிகள்.

குருசோ அந்நரமாமிச பட்சணிகளை கொன்று விட்டு கட்டப்பட்டவனைத்தன் தோழனாக்கினான்.

மேலும் சில ஆண்டுகள் கழிய கப்பலொன்றைக் கடத்தியவாறு ஒரு கொள்ளைக் கூட்டம் அத்தீவிற்கு வந்தது. கப்பலின் தலைவன் பணியாட்களை அத் தீவில் விட்டுச் செல்ல அக்கொள்ளைக் கூட்டம் முயல குருசோ அவர்களைக் காப்பாற்றி கடற்கொள்ளை யரை தீவில் விட்டு விட்டு கப்பலில் குருசோ தன் சொந்த நாட்டை நோக்கிப் போகின்றான்.

இந்தக்கதை உலகின் அனைத்து மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. தமிழில் தமிழகத்தின் பழனியப்பா பிறதர்ஸ் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் பல பாடப்புத்தகங்களிலும் இடம் பெற்றுள்ளது.

அத்துடன் ஒரு திரைப்படமாகவும் ஆங்கிலத்தில் வெளியானது. 1983 ஆம் ஆண்டளவில் இலங்கை தொலைக்காட்சி ஒளிபரப்பில் ஒளிபரப்பப்பட்டது.

ரேட்' எனும் இருவர் 1866 இல் தயாரித்தனர். இந்த சைக்கிளினால் பெரிய தொல்லை. ஏறுவது கடினம். நிறுத்துவது கடினம். (இதன் தொல்லைகளை சார்லி சப்ளின் படங்களில் காணலாம்)

ஆகவே இந்தத் தொல்லைகளை நீக்க ஆரம்பத்தில் அமைக்கப்பட்ட சைக்கிளை திருத்த முயன்றனர். எச். ஜே. லோசன் என்ற ஆங்கிலேயர் இவர் 1879 இல் புதிய சங்கிலி மிதி ஒரேயளவு சில்லுகள் என நவீன சைக்கிளை வடிவமைத்தார். இத்தச் சைக்கிளிலும் சில குறைபாடுகள் இருந்தன. அக்குறைபாடுகளையெல்லாம் நீக்கி புத்தம் புதிய நவீன சைக்கிளை அமைத்தவர் 'ஜே. கே. ஸ்ராட்லி' என்ற பிரித்தானியர் ஆவார். 1885 இல் இவர் புதிய சைக்கிளை அமைத்தார்.

இன்று பொதுவாக சைக்கிளை வடிவமைத்தவர் என்றால் ஜே. கே. ஸ்ரார்லியையே குறிப்பிடுவார்கள். இனியாராவது சைக்கிளை கண்டுபிடித்தவர் யார்? எனக்கேட்டால் எந்தச் சைக்கிளை என்று திருப்பிக்கேளுங்கள்.

ஆதாரம்: Crown encyclopedia
U. S. A

வடிவில் வந்தாலும் அதனை எதிர்க்கும் சுபாவத்தினை வளர்த்துக் கொள்ளுதல் அவசியம்.

— அப்படிச் செய்யாமை கூட அநியாயத்திற்கு ஆதரவான செயலே.

— நெஞ்சில் உரமும் நேர்மைத்திறனும் கொண்டவரை எந்தக் கொடுமையாலும் அழித்தொழிக்க முடியாது.

வருவார்கள் என்று ... மனதிலும் இடம் பிடித்த மண்டேலாவை 'வெளியே சென்று புரட்சி செய்யா திருப்பின் உம்மை விடுதலை செய்வோம்' என்று கூறியது வெள்ளையர் அரசு.

'நான் என்னை தென்னாபிரிக்க மக்களுக்காக ஒப்படைத்து விட்டேன் அவர்கட்காகவே போராடுவேன்' எனக் கூறினார் மண்டேலா.

இப்படி பல இன்னல்களைத்தந்து அண்மையில் அவரை வெள்ளையர் அரசு விடுவித்தது. 27 வருடங்களின் பின் மீண்டும் மண்டேலா சுறுப்பின மக்களுடன் கலந்தார். நாம் நினைப்பது போல் வயதான இளைஞனாக அல்ல. வயது முதிர்ந்த 72 வயது முதியவனாக. அவர் வயது முதிர்ந்தாலும் எண்ணக் கொள்கை முதிரவில்லை. இனிவரும் போராட்டம் மண்டேலா மாமாவின் பெயர் சொல்லும். ஒருகுறிப்பு: இங்கிலாந்தில் இவருக்கு சிலை வைத்திருக்கிறார்கள். இவரை கறுப்பு மலர் என்பார்கள்.

## சப்பாத்துப் பிழை

**சில** ஆண்டுகளுக்கு முன் சீனாவில், உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் தன் அலுவலகம் நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் போது தன்னுடைய கால் ஒன்று நொண்டுவதாக உணர்ந்தார்.

அவர் முடவன் அல்ல. அப்படியென்றால் ஏன் அவர் நொண்ட வேண்டும்?

அவர் குனிந்து தன் கால்களைப் பார்த்தார். உண்மை புரிந்தது.

இரு சப்பாத்துக்களும் வெவ்வேறாயிருந்தன. ஒன்று உயர்ந்த குதியுடனான சிவப்பு நிறச் சப்பாத்து. மற்றது தட்டையான பச்சைநிறச் சப்பாத்து.

உடனே அவர் தன் உதவியாளனைப் பார்த்து "வீட்டுக்கு ஓடிப்போய் சரியான சப்பாத்தை எடுத்துவா" எனப் பணித்தார்.

அவன் விரைந்து போய் சில நிமிடங்களில் திரும்பி வந்தான், வெறுங் கையுடன்.

நீதிபதி அவனை வியப்புடன் பார்த்தார். அவன் பயபக்தியுடன் பதிலளித்தான்.

உங்களுடைய சப்பாத்தை மாற்றுவதில் பயனில்லை ஐயா .. வீட்டிலிருக்கும் ஒரு சோடியும்... இவற்றைப் போலவே வெவ்வேறு நிறத்தில் உள்ளன.

□

## கண்களை மூடியபோது

பிரிட்டிஸார் கென்யாவுக்கு வந்த போது அவர்கள் கையில் பைபிள் இருந்தது. கண்களை மூடிக் கொண்டு பிரார்த்திக்கும்படி எங்களுக்குக் கற்பித்தார்கள். நாங்கள் கண்களைத் திறந்த போது அந்த பைபிள் எங்கள் கையில் இருந்தது. எங்கள் நிலம் அவர்கள் கையில். இருந்தது.

—ஜோமோ கென்யாட்டா

□

வகுப்பில் நித்திரை தூங்கிய மாணவனைப் பார்த்து ஆசிரியர் கேட்டார்-

"கிழக்கு எப்பக்கம் இருக்கிறது சொல்லு".

மாணவன் சொன்னான்.

"மேற்குத் திசையின் எதிர்ப் பக்கத்தில்"

□

## ஒரு விளம்பரம்

மூட்டைப் பூச்சிகளை ஒழிப்பதற்கு சுலபமான வழி. ரூபா முப்பது மட்டும் அனுப்புங்கள் (விலாசம்)

இந்த முகவரிக்கு எண்ணற்ற கடிதங்கள் வந்தன, ரூபா முப்பது உட்பட.

எல்லோருக்கும் சிறு சிறு பார்சல்கள் கிடைத்தன. அதில் இரு சிறு பலகைகள் இருந்தன. சிறு கடிதாசித் துண்டும் இருந்தது. அதில் எழுதப் பட்டிருந்தது.

"மூட்டையைப் பிடித்து ஒரு பலகையில் வைத்து மறுபலகையால் நசுக்கவும்"

□

## அபூர்வ நண்பர்கள்

நண்பர்கள் இருவர் சேர்ந்து ரயிலில் பயணம் செய்தனர். ஒருவன் மட்டுமே ரிக்கட் வாங்கியிருந்தான்.



ஒரு ஸ்ரேசனில் ரயில் நின்ற போது ரிக்கட் பரிசோதகர் ஏறிக் கொண்டார். அவரைத் தூரத்தே கண்டு ரிக்கட் வைத்திருந்தவன் ரயிலைவிட்டுப் பாய்ந்து வெளியே ஓடினான். இன்ஸ்பெக்டரும் பாய்ந்து துரத்தினார்.

அவரிடம் அகப்பட்டவுடன் மிக மரியாதையாக ரிக்கட்டை எடுத்து நீட்டினான். மடையா, ரிக்கட்டை வைத்துக் கொண்டு ஏன் ஓடினாய்? என்றார் இன்ஸ்பெக்டர் எனக்கு இப்படி ஓர் அப்பியாசம் தேவைப்பட்டது என்றான் அவன். அதே வேளை ரிக்கட் இல்லாமல் பயணம் செய்த மற்றவன் பாய்ந்து வேறு திசையில் ஓடித் தப்பிக் கொண்டான்.

□

"உன் எதிரிகளைப் பற்றி புகழ்ந்து பேசு. நினைவிருக்கட்டும் அவர்களை உருவாக்கியவன் நீயே.

□

"பூனைக் குடும்பத்தில் நான்கு மிருகங்களைச் சொல்லு பார்க்கலாம்"

"தகப்பன் பூனை, தாய்ப் பூனை. இரண்டு குட்டிகள்."

□

## ஒஸ்கார் த லிவேரா

அவர் ஒரு திறமையான ஆங்கில ஆசிரியர். ஆனால் ஒரு குறை அவருக்குக் காது கேட்பது குறைவு மாணவர்களை அடக்கி வைப்பதில் அவர் சமர்த்தர். என்றாலும் மாணவர்கள் அவரை விட்டுவைக்க வில்லை. ஒருவன் கேட்பான் -

"சார் தண்ணீர் குடிக்கப்போகிறேன்...."

"சரி போய் வா..."

இன்னொருவன் வந்து அதே காரணத்தை சொல்லுவான். அவரும் அதே பதிலைச் சொல்வார்.

மற்றொருவன் வந்து சார் உங்கள் மகளைக் காதலிக்கிறேன். அனுமதிப்பீர்களா...? என்பான்.

யேஸ்.. யேஸ்.. கெதியய் வா என்பார்? ஆசிரியர்.

அவர் பாடம் தொடங்குமுன் அறையின் கதவுகளை மூடச் செய்வார்.

கதவுக்கும் தரைக்கும் இடையில் இரண்டு அங்குலம் இடைவெளி இருந்தது. வகுப்பில் குளப்படி செய்யும்? மாணவர்களை அவர் வெளியில் அனுப்புவார். அவர்கள் கதவருகில் நிற்கவேண்டும். கால் பாதங்கள் ஆசிரியருக்கு தெரியவேண்டும்.

இலங்கையின் வெளிநாட்டுத் தூதுவராக இருந்த ஒஸ்கார் த லிவேரா இவரிடம் கல்வி கற்றவர், ஒருநாள் லிவேரா வெளியில் நிற்க வேண்டியேற்பட்டது. இவருடைய சப்பாத்துக் கால் ஆசிரியருக்குத் தெரிந்தன. பாடம் முடிந்தது மணி அடித்தது.

சரி லிவேரா உள்ளே வா என்றார் ஆசிரியர். லிவேரா வரவில்லை. ஆசிரியர் மீண்டும் சத்தமிட்டார் "லிவேரா உள்ளே வா"

லிவேரா வரவில்லை. ஆசிரியர். விரைந்துபோய் வெளியே பார்த்தார். அங்கே லிவேரா இல்லை. இரண்டு சப்பாத்துக்கள் கிடந்தன.

□

**தொகுப்பு:**
**எஸ். பி. கே.**

# தரிசனம்

## "இன்னொருமுகம்"
## 'மாற்கு'வின் ஓவியமுகம்

● சங்கரசெல்வி

தேடலில் சதா உழன்று வளர்ந்துகொண்டிருக்கும் ஒரு ஓவியக் கலைஞராகத் திகழும் ஓவியர் அ. மாற்குவின் "இன்னொருமுகம்" ஓவியக் கண்காட்சியை 17 - 3 - 90 அன்று யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் பார்க்க முடிந்தது. பல நாட்கள் இடைவெளியின் பின் அமைதியான அகப் புறச் சூழலில் மென்மையாக ஜலதரங்க ஒலி காற்றில் மிதந்துவர, சனநெரிசல் அதிகமற்ற ஒரு சூழலில் ஓவியங்களின் செய்திகளை உய்த்துணர மக்களால் முடிந்தது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந் நிகழ்வின்போது செஞ்சிலுவைச் சங்கப் பட்டியணிந்த பாடசாலை மாணவர்களுடன் ஓவியர் மார்க், அவர் தம் மாணாக்கர்களாகிய கொன்ஸ்ரன்ரைன், நிலாந்தன், அருந்ததி, வாசுகி மற்றும் பலரும் பார்வையாளர்களுக்கு அவ்வப்போது வேண்டிய விளக்கமளித்துக் கொண்டிருந்தனர்.

றாகிவிட்டது. ரசனைக்கு தடையாகவும் இருந்தது.

மாற்குவின் படைப்புகளை அவரது வளர்ச்சிப் பருவத்தைக் கணக்கிலெடுத்து நான்கு காலங்களுக்குள் அடக்குவர். ஓவிய விமர்சகர்கள் நுண்கலைக் கல்லூரியின் இறுதிக் காலம் வரையிலான மங்கல் நிறக் காலம், வெள்ளைக் காலம், நீலக்காலம், கோடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் ஆரம்பத்தில் தத்ரூபமான படைப்புகளைவடித்த மாற்கு அறுபதுகளின் பிற்பகுதியில் கோடுகளை நன்கு பயன்படுத்துகின்றார். தொடர்ந்து நிறங்களுடன் பரிசோதனைகளை செய்ய முற்பட்டபோதும் 70, 80 களில் மீண்டும் கோடுகளை பல பரிமாணங்களில் பயன்படுத்துகின்றார்.

சமூக நிகழ்வுத் தாக்கங்களால் பாதிப்புறும் ஒரு கலைஞனாக மிளிரும் மாற்கு 'விடிவு', 'வேதனை', 'ஜூலை 83', 'காதலர்' 'ஏழ்மை', 'பசி', 'சோகம்', 'பதுங்குகுழி மனிதர்கள்' போன்றவற்றை ஆக்குகிறார்.

போகிறோம். கேட்காத சங்கீதத்தின் இனிமையை இரசித்துக்கொண்டு'காவடி ஆட்டம்' வழங்கும் லயம், கதி என்பன ஓவியத்தின் சிறப்பைக்காட்டி நிற்கின்றன.

நவீன ஓவியங்களில் காணப்படும் சிதைவு, விகாரம், ஒளி, இருள் தாக்கங்கள், முகமிழந்த மனிதரது தோற்றங்கள் என்பன குறிப்பிட்ட கருத்து ஒன்றை – ஓவியனின் தரிசனத்தை வெளிப்படுத்துவன ஓவியனின் தரிசனத்தை நாமும் தரிசிப்பதற்கு நவீன ஓவியம் வரையும் தூரிகையின மொழி பற்றிய பரிச்சயம் அவசியம். கோடுகள், நிறங்கள் அவைகளது நெளிவு சுழிவுகள், மென்மை கடுமைகள் பற்றிய புரிதல்களை புதிய பார்வை



பார்வையாளர் எந்த ஒரு சட்டுப்பாட்டுக்குள்ளும் அமைய வேண்டாதவாறு, அவர்தம் மனோலயத்திற்கேற்ப ஓவியங்களை இரசிக்கக்கூடியதாக 'ட' வடிவில் அமைக்கப்பட்ட தட்டிகளில் ஓவியங்கள் பார்வைக்குசொழுவப்பட்டிருந்தன. 89 ஓவியங்களும் 40 சிற்பங்களும் மண்டபத்தை நிறைத்திருந்தன. மார்க்கின் படைப்புகள் மாட்டப்பட்டிருந்த ஒழுங்கு தரப்பட்ட துண்டுப்பிரசுர ஒழுங்கில் அமையாதது பார்வையாளருக்கு சங்கடத்தை உண்டு பண்ணியது. ஓவியத்தின் இலக்கத்தைப் பார்த்து அதன் தலைப்பை (தேவையாயின்)

சமய, புராண, வரலாற்று கலாசாரத் தாக்கங்களின் விளைவாக 'வியாகுலம்', 'சகுந்தலை', 'இரவுவிருந்து', 'சத்தியசோதனை', 'தாண்டவம்', 'ராதை கிருஷ்ணா', 'காந்தி', 'தாகூர்' ஆகியவை அவர்தம் தூரிகையூடு பிறந்தவை!

ஓவியங்களில் அவற்றின் உணர்வு, நயம் வீச்சு என்பனவற்றுக்கு ஏற்ப ஓவியப்பாணியை வகுத்துக்கொள்ளும் ஓவியர் பார்வையாளரின் கற்பனையை நன்கு தூண்டுகின்றார். 'தேடல்', 'விடிவு', 'கரைதல்' என்பனவற்றைக் குறிப்பிட்டுச்சொல்லலாம். சங்கீத ரசனையில்

யாளர் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறான புரிதல்களுக்கும், பரிச்சயத்திற்கும் இவ்வாறான கண்காட்சிகளையும் கலந்துரையாடல்களையும் ஒவ்வொரு பிரதேச வாரியாக ஒரு நாள் வீதமேனும் அவ்வப் பிரதேச கலை இலக்கிய ஓவிய ஆர்வலர்கள் ஒழுங்கு பண்ணுதல் அவசியம். இதுவே நாம் இக்கலை வளர்ச்சிக்கு ஆற்றும் பங்கு ஆகும். மாற்குவின் அடுத்தகட்டமாக 'இன்னொரு புதிய முகத்தையும்' காணும் காலம் விரைந்து கைகூட வேண்டும். □

---

*ஈழத் தமிழகத்தின் மூத்த ஒப்பனைக் கலைஞரான சாமுவேல் பெஞ்சமின் இந்த ஆண்டுக்கான (1988 - 1989) மகவம் கௌரவ விருந்தினைப்பெறுகிறார். இவ் விருது தொடர்பானமகவம் கலைஞர் கௌரவிப்பு வைபவக் குழுவின் தலைவர் அவர்களால் எழுதப்பெற்றது, இக் கட்டுரை.*

# ஒப்பனைக் கலைஞர் சாமுவேல் பெஞ்சமின்

ஒரு நாட்டின் பாரம்பரியக் கலைவடிவங்கள், கலைத் திறன்கள், கலைஞர்கள் பாராட்டப்படும் போது தான் அந் நாட்டின் பண்பாட்டுப் பாரம்பரியமும் பேணப்படுகின்றது; போற்றப்படுகிறது. ஈழத் தமிழர் தம் சுதேசியக் கலைவடிவம் நாட்டுக்கூத்து என்பதில் எவருக்கும் முரண்பட்ட கருத்து இருக்க முடியாது. இப் பாரம்பரியக் கலை வடிவத்துடன் ஒன்றிணைந்து வளர்ந்து வந்த கலைதான் ஒப்பனைக் கலை.

நாட்டுக் கூத்து, நாடகம், நடனம் ஆகிய அவைக்காற்று கலைகளுக்கு ஒப்பனை மிகவும் இன்றியமையாத ஓர் அம்சமாகும். ஒப்பனை முழுமையாகவும் பொருத்தமாகவும் அமையாவிட்டால் நாடக அரங்கு செம்மைபெற முடியாது. இவ்வகையில் கடந்த அறுபது ஆண்டுகளாக ஒப்பனைக் கலைக்கே தன்னை அர்ப்பணித்த மாமனிதனே சாமுவேல் பெஞ்சமின் அவர்கள்.

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டத்திலே 08. 08. 1915 இல் கலை நுட்பம் கைதேர்ந்த குடும்பத்தில் பிறந்த இவர், தமது இளைமைப் பராயத்தில் சித்திரக் கலையில் மிக்க ஆர்வமுடையவராகத் திகழ்ந்தார். இவரது குடும்ப உறவினர்களிற் சிலர் ஒப்பனைக்கலையி ல்லீடுபாடு கொண்டிருந்தனர். அவர்களுட் ஜே. பிலிப்பு, ஏ. டேவிற், எஸ். செல்லையா ஆகிய ஒப்பனைக் கலைஞர்களுடன் பெஞ்சமின் அவர்களும் சேர்ந்து கொண்டார். பெஞ்சமினின் திறமையைக் கண்டுகொண்ட ஒப்பனைக் கலைஞர்கள் இவரைத் தம்முடன் சேர்த்துக் கொள்வதில்

போட்டி போட்டுநின்றனர். இவர்கள் அனைவருடனும் சேர்ந்து ஒப்பனைக் கலையில் ஆளுமை பெற்றுக் கொண்ட பெஞ்சமின்அவர்கள் 1939இல் முதல் முதலாகத் தானேதனி



நிறுவனமாகச் செயறபடத் தொடங்கினார்,

முதன்முதலாக நெடுந்தீவில் கண்டிராசன் நாடக ஒப்பனையை வெற்றிகரமாகச் செய்து புகழ்பெற்றார். இவர் இளைஞராக இருந்தமையாலும், திறமை காணப்பட்டமையாலும், கடவுளின் கிருபையினாலும் இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து இவருக்கு ஒப்பனைக்காக அழைப்புக்கள் வந்து கொண்டே இருந்தன என்கிறார் பெஞ்சமின் அவர்கள்.

ஒவ்வொரு ஆண்டிலும் சராசரி 80 நாடகங்களுக்கு மேல் தான் ஒப்பனை செய்ததாகக் கூறும் பெஞ்சமின் கடந்த 50 ஆண்டுகளிலும் 4000 நாடகங்களுக்கு மேல் ஒப்பனை செய்திருப்பதாகக் கணக்கிட்டு மகிழ்கிறார்.

வட்டக்களரிகளிலும் கொட்டகைகளிலும் நடைபெற்று வந்த நாட்டுக்கூத்து, இசை நாடகம், டிறாமா முதலான பல்வகை நாடக பரிமாணங்களினூடாகவும் இவரது ஒப்பனை நடைபெற்று வந்திருக்கிறது. இந்தியாவிலிருந்து வந்து யாழ்ப்பாணத்தில் நாடகம் போட்டோருக்கும். யாழ்ப்பாணத்தில் நாடக சபாக்கள் அமைத்து நாடகங்கள் நடாத்தியோருக்கும் பெஞ்சமினின் ஒப்பனை சிறப்புக் கொடுத்தது.

கலையரசு சொர்ணலிங்கம், நடிகமணி வைரமுத்து, குழந்தை சண்முகலிங்கம், தாசீஸியஸ், பாலேந்திரா போன்ற நாடக விற்பன்னர்களுடைய நாடகங்களுக்கும் பெஞ்சமின் அவர்கள் ஒப்பனை செய்திருக்கிறார். கலையரசு சொர்ணலிங்கத்தின் "தேரோட்டி மகன்" நாடகத்தை இவர் இன்னும் நினைத்துப்பார்க்கிறார்.

இருந்திருக்கிறது. இவற்றையும் தான் செய்து கொடுத்ததாகவும் பெஞ்சமின் குறிப்பிடுகிறார்.

கத்தோலிக்கக் கூத்துக்கள், டிறாமா என்பனபோன்றே இந்துசமயம் தழுவிய புராணக் கூத்துக்கள், நாடகங்கள் ஆகியவற்றுக்கும் இவர் தமது பணியினை மேற்கொண்டிருக்கிறார். புகழ்விரும்பாத இப் பெருமனிதனின் குடும்பமே கலைக் குடும்பம்.

இவரது ஆண் பிள்ளைகளில் இமானுவேல், அன்ரனி, டன்சன், சாள்ஸ் என்போரும் ஒப்பனைக்கலையில் வல்லவர்கள் மட்டுமன்றி நாடகக் கலைஞருமாவர். ஜேர்மனியில் வாழ்ந்துவரும் இமானுவேல் என்பவர் அண்மையில்

யாழ். பல்கலைக் கழகத்திலே நிர்மலா நித்தியானந்தனின் நாடகங்களுக்கும் இவரே ஒப்பனை செய்திருக்கிறார். தற்போது இலங்கை முழுவதும் புகழ்ந்து பேசப்படும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ் மன்றத்தினரின் சார்பில் கலாநிதி இ. பாலசுந்தரம் தயாரித்து நெறிப்படுத்திய காத்தவராயன் இசை நாடகத்திற்கும் இவரே ஒப்பனையாளராவர். இந் நாடகம் ரூபவாகினியில் ஒளிபரப்பிய நிகழ்ச்சியிலும் இவரது ஒப்பனையே இடம் பெற்றது என்பதை இவர் ஒரு சிறப்பாகக் கருதுகின்றார்.

அங்கு "மயான காண்டம்" நாடகத்தைத் தயாரித்து மேடை ஏற்றினார் எனின் அவர் பெருமையை நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

காலஞ்சென்ற பேராசிரியர் சு. வித்தியானந்தன் சாகித்திய மண்டலத்தின் நாடகக் குழுத் தலைவராக இருந்து பாடசாலை நாடகப் போட்டிகள் நடாத்திய போது அந் நாடகங்களுக்கும் ஒப்பனை செய்திருக்கிறார் பெஞ்சமின். கொழும்பு, கண்டி, மன்னார், வன்னி முதலான பல இடங்களிலும் தனது திறமையைக் காட்டி வந்துள்ள முதுபெரும்

**கலாநிதி இ. பாலசுந்தரம்**

ஒப்பனைக் கலையோடு இணைந்ததே, மேடையில் கட்டப்படும் ஓவியத்திரைச் சீலைகளாகும். சீன்ஸ் என்று கூறப்படும் வர்ணத்திரைச் சீலைகளை வரைவதிலும், மேடையிற் பொருத்தப்படும் வர்ணம் தீட்டப்பட்ட தூண்கள் வரைவதிலும் பெஞ்சமின் அவர்கள் கைதேர்ந்தவர்கள். பண்டைநாளில் கூத்துக்களில் குதிரை, கப்பல், தேர் என்பன இடம் பெறும் போது. அவற்றைச் செய்து இழுத்து களரிக்கு வருவது மரபாக

ஒப்பனைக் கலைஞரை ', மகவம் '' நிறுவனம் சிறந்த கலைஞராகத்தேர்ந்து எடுத்து அவருக்கு சித்திரை 14 ஆந் திகதி பாராட்டு விழா! நடாத்த இருப்பதை அறிந்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம். திறமைகள் பாராட்டப்பட வேண்டும். அப்போதுதான் திறமைகள் நாட்டுக்குப் பயன்படும். இவ் வகையில் மகவம் நிறுவனமும் பாராட்டுக்கு உரியதே. □

தலைப்பை (தேவையாயின்) தேடுவதற்குள் போதும் என்

லலாம். சங்கீத ரசனையில் பாடகரோடு நாமும் கரைந்து

டன் சேர்த்துக் கொள்வதில்

களினூடாகவும் இவரது ஒப்

# இலக்கியத்தடம்

## சமகால இலக்கியங்கள்

சம காலத்து இலக்கியங்கள் எப்படி இருக்குமென்று நினைக்கின்றீர்கள். அல்லது எப்படி அமைய வேண்டும் என எதிர்பார்ப்பீர்கள்?

மிக நீண்ட காலமாக அரசியல், பொருளாதார காரணங்களால் நசுக்கப்பட்டு வரும் எமது இனமும், அந்நிய ஆக்கிரமிப்பால் நாம் பட்ட கஸ்டங்களும் வெறுமனே மறந்து போகக் கூடிய சமாச்சாரங்களா?

அடக்கு முறைகளால் இராணுவ அத்துமீறல்களால் எமது மக்கள் அனுபவித்த சொல்லொன்னா துயரங்கள் ஏராளம் கணவனைப்பறிகொடுத்து மைந்தர்களை களப்பலியாக்கி தங்களின் கற்பை இழந்து, மீள முடியாத துயரங்களில் ஆழ்ந்துள்ள பெண்கள் எத்தனை பேர்.

இப்படி எத்தனை விடயங்கள். இவை வெறும் செய்திகளாகக் கூட இன்னமும் முழுமையாக வெளியே வரவில்லை இலக்கியப் படைப்புக்களாக எப்படி வெளியே வரும்?

எவ்வளவோ விடயங்களை வெளிக் கொண்டு வர வேண்டிய தேவையும் அத்தியாவசியமும் இருக்குப்போது எமது படைப்புக்கள் எப்படி வரும்?

கலைத்துவமும், தரமும் மிகுந்த படைப்புக்களை எங்களால் தான் படைக்க முடியும். நாங்கள் சுட்டி உரைப்பவர்களே சிறந்த இலக்கிய பிரமாக்கள் என்று வரிக்கு வரி நீட்டி முழக்குபவர்களை பின்னணியாகக் கொண்ட சில பத்திரிகைகளில் எப்படியான கதைகள் வருகின்றன.

'கார்த்திநேசன்' எழுதிய 'பஜகோவிந்தம்' சிறுகதையை வாசித்துப்பாருங்கள்(23.3.90 பிரசுரமானது.) எத்தகைய அரிய கருத்துக்களை முன் வைக்கும் அபூர்வமான கலைப்படைப்பு.

'சின்ன எழுத்தாளரோ பெடியன் எழுத்தாளரோ இந்தக் கதையினை எழுதியிருந்தால் 'பத்திரிகைத்தர எழுத்துக்கள் என்றோ, கட்டப்பட்ட கதை என்றோ கூறலாம். கூறமுனைவார்கள்.

## பத்திரிகைத் தர இலக்கியங்கள்

தரமற்ற பத்திரிகைத்தர கதைகள் ஏன் வெளிவருகின்றன எனக் காரணமும் கூறுவோர். 'இலக்கியங்கள் மீதிலான ஆழ்ந்த ஈடுபாடு, நல்ல நூல்களுடனான பரந்த அளவிலான பரிச்சயம், கலை இலக்கியங்களின் அடிப்படை அம்சங்கள், தமிழின் பிற மொழிகளின் சிறந்த படைப்பாளிகளின் படைப்புலக வாழ்வு' தொடர்பான கருத்துக்களிலான அக்கறை, சொந்த அனுபவங்களின் அடிப்படையில் இவை பற்றி உருவாகிக் கொள்ளும் முடிவுகள் செம்மையான படைப்புருவாக்கத்திற்குத் தேவையான கடும் உழைப்பு என்பன. பெரும்பாலான இலக்கியக்காரர்களிடம் இல்லையென்பதை, எனது அனுபவத்தில் கொண்டுள்ளேன். இன்னும், அடிப்படைப்படைப்பு நேர்மை படைப்புந்தல் நிகழாத விடத்து வேறு எதற்குமாகவோ எதனையும் 'தயாரிக்க' அந்தரப்படாமை அரிதாகவோ காணப்படுகிறது. பிரசுரித்ததினால் அடையக் கூடிய பிரபலத்திற்காகவே இங்கு பெரும்பாலார் அந்தரப்பட்டு எழுதுகிறார்கள்' எனவும்—

''கதைகள் தயாரிக்கும் பலரை நானும் அறிவேன். இத்தகைய தயாரிப்பு அந்தரமெதுவும் எனக்கு இல்லை. சில அனுபவங்களையும் உணர்வுகளையும் பகிர்ந்து கொள்ள எண்ணினேன். எழுத வேண்டும் போல் இருந்ததால் எழுதினேன் எழுத வேண்டுமென்பதற்காக எழுதியதில்லை,'' என்றும்—

''நல்ல கலைப் படைப்புக்களின் தன்மையே அது சம்பந்தங் கொள்ளும் போதெல்லாம் ஆழ்ந்த அனுபவத்தைத் தரும்'' என்னும் கருத்துக்களைத் தூவிவிட்டவர்கள் எல்லாம் பஜகோவிந்தம் போன்ற கதைகளுக்குப் பின்னால் ''பஜனை'' பாடப் புறப்பட்டு விட்ட அர்த்தமென்ன?

''சகலரும் சுவைக்கக் கூடிய ரொட்டிகளைச் சுடும் விவகாரமாக கலைகளைக் கருதியதனால் வந்த கோளாறாக இதனைக் கொள்ளலாமா?'' அல்லது—

எழுத்தாளன் என்று அங்கீகரிக்காத ஒருவர் 'பொடியன்' என்று இலக்கியக் கூட்டத்தில் பேசியபோது 'போலி வேஷம் கலைந்து சத்திய வேட்கையோடு எழுதுங்கள் என்றும்' கருத்து வேறுபாடுகள் உள்ளவரானாலும் பெடியன் என்று சொல்லலாமா? என்று விவாதம் புரிய முனைந்தவருக்கு நன்றி தெரிவிப்பதற்காகவா? இந்த பஜனை.

## மு. பொன்னம்பலத்தின் கட்டுரை

''யாருக்கு இரண்டக நிலை மு. த. விற்கா? க. கைக்கா? என்ற கட்டுரை கிட்டத்தட்ட ஒன்பது வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட கட்டுரை (1981) எழுதியவர் மதிப்புக்குரிய மு. பொன்னம்பலம் அவர்கள். அதன் சில பகுதிகள் இங்கு வெளியிடப்படுகின்றன.

க. கைலாசபதியின் அண்மைக்கால வெளியீடான நவீன இலக்கியத்தின் அடிப்படைகள் என்ற நூலில் மு. தளையசிங்கம் பற்றியும் அவரது ஆக்கங்கள் பற்றியும் ஒரு விமர்சனம் சேர்க்கப்பட்டுள்ளது. அதற்கு இடப்பட்ட தலைப்பு- இலக்கியத்தில் மார்க்சிய எதிர்ப்பு- ஒரு புத்திசீவியின் இரண்டக நிலை.

இவ் விமர்சனக் கட்டுரை 1973ல் மு. த. வின் மறைவுக்குப் பின் பூரணி இதழ் ஆசிரியர் குழு, மு. த. பற்றியொரு விமர்சன மலர் வெளியிடுவதற்காக இவரிடம் ஒரு கட்டுரை கேட்டபோது ஒரு புத்திசீவியின் இரண்டகநிலை என்ற தலைப்பில் எழுதிக் கொடுக்கப்பட்டது. ஆனால் கட்டுரை பூரணியில் வெளியிடப்படாமல் எழுதியவரிடமே திருப்பிச் சேர்க்கப்பட்டது. காரணம், க.கை. கூறுவது போல் அவரது விமர்சனத்திற்கு அஞ்சியல்ல. விமர்சனம் என்ற பெயரில் அவர் தந்திருந்த ஆதாரமற்ற கருத்துக்களுக்கும், நிந்தனைகளுக்கும், மட்டந்தட்டல்களுக்கும் பூரணிகளமாகக் கூடாதென்பதற்காகவே. க. கை. யின் மு. த. பற்றிய கண்மூடித்தனமான தாக்குதலை விமர்சனம் என்று பிரசுரித்து விட்டு அதற்குப் பதிலளிக்கும் வியர்த்தமான பொறுப்பைப் பூரணிக்கு அவர்கள் கொடுக்க விரும்பவில்லை. இதேகாலத்தில் எஸ். பொ. ஒரு கட்டுரையைப் பூரணிக்கு அனுப்பியிருந்தார். நிராகரிக்கப்பட்ட க.கை.யின் கட்டுரைக்குச் சோடை போகாத வகையில் க.கை. யையும் கா. சிவத்தம்பியையும் தாக்கியிருந்தார். எஸ். பொ. அதையும் பூரணியினர் பிரசுரிக்கவில்லை என்பது இச் சந்தர்ப்பத்தில் கவனிக்கத்தக்கது.இது பூரணியினரின் தன்மையை விளக்க உதவும். அவர்கள் விமர்சனத்திற்கு அஞ்சவில்லை. விமர்சனம் என்ற பெயரில் கக்கப்பட்ட விஷயங்களுக்கே அஞ்சினர்.

இது நடந்து எட்டுவருடங்களுக்குப் பிறகு, இப்போது தான் க. கை. மீண்டும் பல வெட்டுக் கொத்துச் சரிக்கட்டலோடு ஓர் அசாத்தியத் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு பூரணியால் மாறுபட்ட மு.த. பற்றிய தனது விமர்சனத்தை அச்சேற்றியுள்ளார், எவ்வளவோ பிரசுர வசதிகள் படைத்த கலாநிதி. நிராகரிக்கப்பட்ட கட்டுரையை வேறிடத்தில் பிரசுரிக்க எட்டுவருடங்களாக ஏன் தான் அஞ்சினாரோ (!) என்பது ஒரு புறமிருக்க, மு. த. இருந்த போது எந்தவித மூச்சும் காட்டாதவர் அவர் இறந்து எட்டு வருடங்களுக்குப்பிறகாவது இந்தத் துணிச்சலைக் காட்டினாரே என்பதற்காக அவரை நாம் பாராட்ட வேண்டும். ஏனெனில் அவரது இந்த விமர்சனம் மூலம் அவருக்கு எஞ்சிய பயன் இந்தத், துணிச்சலே.''

## பஜகோவிந்தம்

எவ்வளவோ காலத்திற்கு முன்னர்கார்த்திநேசனால்எழுதப்பட்டு இங்கிருந்து கொழும்புப் பத்திரிகைக்கு அனுப்பப்பட்டு அங்கு பிரசுரிக்க முடியாமல் போகவே யாழ்ப்பாணத்து சஞ்சிகை ஒன்றுக்கும் வலை வீசப்பட்டது. கடைசியில் பஜகோவிந்தம் கதைக்கு களம் கொடுத்த பத்திரிகையை நினைத்து அனுதாபப்படத்தான் முடிகின்றது.

''தரமான வார வெளியீடு என்று அநேகமானோர் மதிக்கும் அந்த வார வெளியீடு. இடைக்கிடை இப்படி (வேறு ஒரு உதாரணம் — தூண்டிலில் சிக்கிய மல்லிகை) சேற்றில் புரள்வது ஆரோக்கியமான செயல் அல்ல.

இப்படியான அவதூறுக் கதைகளை, ஒவ்வொருவரின் சொந்த வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட விடயங்களை இலக்கியங்களாக படைக்கப் புறப்பட்டால் முடிவு என்ன? எழுத முனைந்தால் எப்படியிருக்கும். இவை எல்லாம் நாகரிகமான செயல்களா? தயவு செய்து யோசித்துப் பாருங்கள்.

## அட்டைப்பட மகிமை

திருவாளர் கார்த்தி-நேசன் அவர்களே இலக்கிய காரர்கள் 'வார்த்தைகளோடு விளையாடுமேடப்பாய் கூத்துக் காரர் அல்லவா' எனவும், 'இலக்கிய உலகம் முழுவதும் வெறும் பம்மாத்துத் தானா?' எனவும் 'சப்புகள் சருகுகள் திண்டுகள் முண்டுகள் எனவும் நீங்கள் கூறுவதெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும்.

'இலக்கிய சஞ்சிகைக்கு அழகான படத்தினை அட்டைப்படத்திற்காகக் கொடுத்துவிட்டு கட்டுரையையும் வரச் செய்து விட்டு (கிட்டத்தட்ட ஐந்து வருடங்களுக்கு முன்னர்) இப்போது ஞானம் அடைந்ததன் காரணம் என்ன?

அட்டையில் உங்கள் படம் அட்டகாசமாக வெளி வந்த போதே உங்களுக்கு யார் டுப் மாஸ்டர், யார் முகமூடி போட்டவர் என்று தெரிந்திருக்குமே?

# அழலாடிக்குட்டன்

தனிமனிதர்களின் தனிப்பட்ட விடயங்களின் சரி பிழை, நியாய அநியாயங்கள், எல்லாம் தனிப்பட்டவர்களுக்கே தெரியும். இதனை பஜகோவிந்தம் கதைக்கு களம் கொடுத்துவிட்டு சந்தோஷப் படுபவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு இப்படியான கதைகளுக்கு களம் கொடுப்பவர்களின் தனிப்பட்ட வாழ்க்கையினைப்பற்றி யாராவது

எந்த நியாயத்தை அடிப்படையாக வைத்து உங்கள் படத்தைக் கொடுத்தீர்கள்? எந்த சத்திய வேட்கையுடன்? கார்த்திகேசு மாஸ்டருக்கு நேசமாக இருந்தால் மட்டும் போதுமா?

## சிறுகதை

# சுதந்திரச் சோறு

ஆதிலட்சுமி • இராசையா



**1987** நவம்பர் பதினெட்டாம் தேதி கோண்டாவில் டிப்போவை அண்மித்த பகுதிகளில் இராணுவ ஹெலிகொப்டரும்...... குண்டுவீச்சு விமானங்களும் தரையை நோக்கித் தாக்கிக் கொண்டிருந்தன.

வழமை போல பொம்பர்களை...... அவற்றிலிருந்து விழும் குண்டுகளை...... வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் சனக் கூட்டம்...... சற்றும் எதிர்பாராமல் ஒரு ''ஷெல்'' பறந்துவந்து விழுகிறது...... படுபயங்கரமான அந்தச் ''ஷெல்'' பாரதூரமான அழிவுகளை எற்படுத்தி விட்டது......

பால் மணம் மாறாத...... பாலகர்கள் ரமணனும்...... ரஜனியும் சிதறிப்போய்க் கிடந்தார்கள்...... ஆடுகள்... மாடுகள்...... கிணற்றடிப் பிள்ளையார்...... வேப்பமரத்தின் ஒற்றைக்கிளை...... எல்லாமே சிதைந்து போனபிறகுதான்... எல்லோரும் பிள்ளையார் கோயிலை அண்டிய பள்ளிக்கூடத்தில் அகதிகளானார்கள். அகதிகளாக வந்து இரண்டு மாதமாகிவிட்டது.

'விடிய என்ன பாடுபட்டும் வீட்டுக்குப் போய்வரவேணும்......' இரவிரவாக யோசித்துக் கொண்டிருந்த அன்னம்மா...... விடிய ஆறு மணிக்கு வீட்டுக்கு வந்துவிட்டாள். வீடு சுடுகாடு மாதிரித் தோற்றமளிக்கிறது.

'என்ர வீட்டிலை எப்பன் சுடுதண்ணியாவது வைச்சுக் குடிச்சால் தான் மனம் ஆறும்......' என்று நினைத்தவள் 'சுதந்திரமாக' பூனை உலாவியதில் உருண்டு சிதறிக் கிடக்கும் பாத்திரங்களில் ஒன்றை எடுத்துத் தண்ணீர் அள்ளி வந்தாள்.

முன்பு என்றால் விறகுக்கு சொஞ்சம் கஷ்டம் ..... இப்ப இந்தப் ''புண்ணியவான்கள்'' இலவசமாக மரந்தடிகளை விழுத்தி விடுவதால் விறகுப் பஞ்சமில்லை. முறிந்து விழுந்து...... காய்ந்துகிடக்கும் வேப்பங் கொப்பை முறிக்கிறாள் நெருப்பு மூட்ட, வீட்டின், வளை, சும்பு, ஜன்னல், நிலை எல்லாமே விறகாகிக் கிடந்தன.

மூத்தவன் சாந்தன்...... மூன்று வருஷத்துக்கு முன்பே களத்துக்குப்போய்விட்டான். மற்ற இரண்டில்...... பொம்பிளைப்பிள்ளை சுதா. அவளை வீட்டுக்கு கூட்டிவரப் பயமாக இருந்தது. கிழவிகளையே வெறிக்கண்களால் விரசமாகப் பார்க்கும் ''அதுகள்''...... ''செகிங்'' என்று .. பெண்பிள்ளைகளை வரிசையாய் நிறுத்தித் ''தொட்டுப் பார்க்கும் மிருகத்தனம் - நிறைந்ததுகள்.

அன்னம்மா ஓலை பிடுங்கி விறகுடன் சேர்த்து அடுப்புக்குள் திணித்த போது, ஒழுங்கை முகப்பில் நாய்கள் அவுக் அவுக்கென்று குலைத்தன. ''வந்திட்டாங்கள் போலை...'' என்று நினைந்து நிமிர...... நாலைந்து பேர் அவளுக்கு முன்னால். எப்படித் தான் இவங்களுக்கு மூக்கிலை வேர்க்குதோ?

'தம்பி இருக்கா......' ஒருத்தன் கேட்டான், தடக்கும் தமிழில்.

'இஞ்சை ஒண்டும் இல்லை......' அன்னம்மா எரிச்சலோடு சொன்னாள்......

'ரெம்பிளுக்கு ஓடு ..போ... போ...' கையில் வைத்திருந்த பொல்லை ஓங்கித் தலைப்பா வைத்தவன் விரட்டினான். வைத்த சுடுதண்ணியை வார்த்துக் குடிக்காமல் அவள் கோயிலுக்குப் போனாள்.

அடிக்கடி வாறதும், இளசுகளைத் தரம்பிரித்து தலையாட்டிக்கு முன்னால் விடுவதும்...... வாகனத்தில் ஏற்றிச் செல்வதும்........ இப்படித்தான் ஏதோ நடக்கப் போகிறதாக்கும் என்று அவள் நினைத்தாள்.

''ஒருத்தரும் பயப்பிட வேண்டாம்........ அலையள் மீற்றிங் வைக்கப்போகினமாம்....'' இதுவரை நேரமும் இழுத்துப் பிடித்திருந்த மூச்சை மெதுவாக எல்லாரும் வெளியேற்றினார்கள், தற்காலிக நிம்மதியுடன்.

பாடசாலை மண்டபம் முட்ட ''அவர்கள்'' வீடுவீடாகப் போய் விரட்டிக் கலைத்த சனங்கள் நிரம்பி வழிந்தார்கள். மண்டபத்தைச் சுற்றிக் காவல். பக்கத்தில் இருந்தவர்களைத் திரும்பிப் பார்க்கவே பயம்........ ஏதோ ''சிக்னல்'' கொடுப்பதாக ''அதுகள்'' நினைத்துவிடும்.

அந்த ஆட்கொல்லிப் பிசாசுகளின் தலைவன் மேடையேறினான்........ ஆங்கிலத்தில் ஏதோபேசிவிட்டு அமர்ந்தான்.

இன்னொருவர் அப்பேச்சை மொழி பெயர்த்துக் கூறினார்.

''தமிழ் மக்களே........ எனக்குத் தமிழ் தெரியாது........இவ்வளவு காலமும் சிங்களவர்கள் உங்களைக் கொன்று குவித்தார்கள்........ நாங்கள் அவர்களிடமிருந்து உங்களைப்பாதுகாக்க வந்திருக்கிறோம்........ உங்களுக்கு உதவிக்கரம் நீட்ட வந்திருக்கிறோம்........ உங்களுக்கு அரிசி, பருப்பு, பால்மா, மருந்து எல்லாம் கொண்டு வந்திருக்கிறோம்........ நீங்கள் எங்களைக் கண்டு பயப்படத் தேவையில்லை........உங்களுக்கு அமைதியையும், சுபீட்சத்தையும் நாம் பெற்றுத் தருவோம்....... இதற்கு உங்களுடைய ஒத்துழைப்புத்தேவை.... நீங்கள் பணது வைத்தால் புலிகளைப் பிடித்துத் தரமுடியும்........ அவர்களின் நடமாட்டத்தை எங்களுக்குத் தெரிவிக்கமுடியும்........ அவர்கள் தான் உங்களைக் கொல்கிறார்கள்....... உங்களுக்காக இந்த அகதிமுகாமில் ஐந்து மூடை அரிசியை வழங்கியிருக்கிறோம்....... இனியும் வழங்குவோம்''

''அதுதானே பார்த்தன்.... அரிசி தாறன் பருப்புத்தாறன் எண்டு ஏன் சொல்லிறான் எண்டு....'' அன்னம்மா தனக்குள் நினைத்துக் கொள்கிறாள்.

அனைவர்கும் அரிசி வழங்க ஏற்பாடு நடக்கிறது. சிலர் முண்டியடித்துக் கொண்டு வரிசையில் நிற்கிறார்கள்.

அன்னம்மா எழும்பிப்போய் தூணோடு சாய்ந்து அமர்ந்து கொள்கிறாள். ''அம்மா........ அரிசி வாங்கேல்லையே........ எல்லாரும் வாங்கினம்........'' கையில் சுரண்டிய கடைக்குட்டியை அன்னம்மா பார்க்கிறாள்.

''உது அரிசி இல்லையடா தம்பி........ நஞ்சு........ உது எங்களுக்கு வேண்டாமடா........ பட்டினி கிடந்து செத்தாலும் பரவாயில்லை........'' அந்தச் சிறுவனுக்கு அன்னம்மா சொன்னது புரியாமல் முழிக்கிறது.

''தம்பி........உந்தப் பொருட்களெல்லாம் எங்கடை போராளிகளைக் காட்டித் தரச் சொல்லித் தரப்படுகிற பிச்சையடா........ எங்களை எங்கடை போராளிகளிடமிருந்து பிரிக்கிறதுக்கு நடக்கிற முயற்சியடா........ எங்களுக்குச் சோறு முக்கியமில்லை........ சுதந்திரம் தானடா முக்கியம்.... எங்கடை மண்ணிலை.... எங்கடை வீட்டிலை..... .. எங்கடை கையாலை, மெய்யாலை கஷ்டப்பட்டு உழைச்சுத் தின்ன வேணும்... அது தானடா சுதந்திரச் சோறு... நிம்மதியில்லாமல் ... பயந்து பயந்து...... ஓடி ஓடி . தூக்கத்திலும் திடுக்கிட்டு எழும்புற இந்தச் சூழ்நிலை மாற வேணும் எதிரி எறிந்து விட்டுபோகிற எலும்புத் துண்டுக்கு நாங்கள் ஆசைப்படக் கூடாது......''

அன்னம்மா ஆவேசத்தோடு சொல்கிறாள். சுதாவும் அவளுடைய கடைக்குட்டி சிவாவும் அவளையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சற்றுத் தூரத்தில் அகதிகளுக்கு அரிசி விநியோகம் அமோகமாய் நடக்கிறது. □

## கடந்த காலத்தின் பதிவுகள்

**1987** அக்டோபர் மாதம் பத்தாந்தேதி தொடங்கிய ஊழிக் கூத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள செல்வமெல்லாம் சூறையாடப்பட்டும் குண்டுகள் வைத்தும், தீயிட்டும் கொளுத்தியழிக்கப்பட்டன. திடீரென சிலமணி உத்தரவில் வந்திறங்கிய பல்லாயிரம் இந்திய ஜவான்களுக்கு வேண்டிய உணவினை இந்தியா கப்பலில் அனுப்ப முடியுமா? கடைகள், பலநோக்குக் கூட்டுறவு பண்டகசாலைகள் எல்லாவற்றையும் உடைத்து வாரி அள்ளி டிரக்குகளிலும், வலுக்கட்டாயமாக பறித்து பொது மக்களின் லாறிகளிலும் ஏற்றிச் சென்றார்கள். ஆடுகள், கோழிகள் பொது மக்களின் சொத்துக்கள் தானே தாராளமாகக் கிடைத்தன. கிட்டத்தட்ட 1988 ஏப்பிரல் மாதம் வரை தமிழ்ப் பகுதியில் விடி காலையில் கூவுவதற்கு ஒரு சேவல் மரத்தையே வெட்டி வீழ்த்துவது போலவும், எலியைக் கொல்வதற்காக ஒரு குடிசையையே கொளுத்துவது போலவும், புலிகளின் ஆயுதங்களைக் களைகிறோமென வடகிழக்கு மாகாணத்தையேதீயிட்டுக் கொழுத்தினர் - இந்திய இராணுவத்தினர்.

கிட்டத்தட்ட இரண்டு மாதங்களின் பின் தமிழ்ஈழம் ஐ. பி. கே. எப். வசம் வந்தது போன்றதொரு மாயைத் தோற்ற மேற்பட்டது என்னவோ, உண்மை தான்.

ஆனால் இந்தியப் படையினர் நாள் தவறாமல் கிராமங்களிலும், நகரங்களிலும் சலித்துச் சலித்து புலிகளைத் தேடினர். நல்லூர் கந்தசுவாமி கோயில், யாழ் இந்து மகளிர் கல்லூரி போன்ற பல அகதி முகாம்களில் மாதக் கணக்காக பொதுமக்கள் அடைத்து வைக்கப்பட்டனர்.

கிராமப் புறங்களில்தான் இந்திய ஜவான்களின் கோட்...

...மென பயமுறுத்தினார்கள்.

அகதிமுகாம்களில் அடைபட்டுக் கிடந்தவர்கள் தத்தம் வீடுகளில் வழமைபோல் சென்று வாழப் பயந்தார்கள். அப்படிப் போய் வாழ்வதற்கு விரும்பினால் சிலரது வீடுகள் உடைபட்டு அழிக்கப்பட்டதால் எங்கு போவது என்று அறியாமல் போக இடமற்று அவலப்பட்டார்கள்.

நல்லூர் கந்தசாமிகோவில், இந்து மகளிர் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகிய இடங்களிலிருந்த முகாம்கள் இறுதியாக மூடப்படும்போது எத்தனையோ குடும்பங்கள் அவ்விடங்களிலிருந்து வெளியேற மறுத்ததும் பின்பு அவர்கள் பலவந்தமாக வெளியே அனுப்பப்பட்டமையும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

எத்தனையோ பேரது வீடுகளில் இந்திய ஜவான்கள் முகாமிட்டிருந்தார்கள். அவ்விதம் முகாமிட்டிருந்த வீடுகளில் அவர்கள் செய்த அழிவு...

...யுயர்ந்த சாறிகள் இருந்தன. நுளம்பு (கொசு)த் தொல்லை தாங்கமுடியாமல் ஜவான்கள் அந்த இளம் பெண்ணின் சேலைகளை முறுக்கி, கொழுத்தி புகை மண்டலம் உண்டு பண்ணும் நுளம்புத் திரியாகப் பாவித்தனர்.

நாவற்குழியிலிருந்து யாழ் நகரப் பகுதியை நோக்கி முன்னேறிய படையினர் அரியாலையூடாய் கச்சேரியிலும் கச்சேரி வளாகம், பழைய பூங்காப் பகுதி முதலிய இடங்களில் வந்து முகாமிட்டனர். கச்சேரியை வந்தடைந்தவர்கள் கச்சேரி கதவுகளின் பூட்டுக்களை உடைத்து அங்குள்ள பைல்களை வாரி, கண்ட கண்ட இடமெல்லாம் எறிந்து, பைல்களிலிருந்த கடதாசிகளை கிழித்தெறிந்து பேரழிவு செய்தார்கள், தளபாடங்களை உடைத்து அவர்கள் சமையலுக்கு அடுப்பு மூட்டி விறகாகப் பயன்படுத்தப்பட்டது. கதிரைகள், கட்டில்களில் மெத்தைகள் குத்திக் கிழிக்கப்பட்டு எங்கும் பஞ்சு பறந்த வண்ணமிருந்...

## □ மகளிர் பகுதி



# மனோரஞ்சிதம்

எங்கள் தாய் மண்ணில் அந்நியத் தடங்கள் ஆழமாய்ப் பதிந்து அவலமாய்க் கிடக்கின்றன. சொத்துக்கள் சூறையாடப்பட்டு, கட்டடங்கள், பாலங்கள் பாதைகள், கோபுரங்கள் இடிந்து தகர்ந்த நிலை. இவைகளின் நடுவே மக்களின் பிணக்குவியல்கள். இப்படித்தான் அந்நிய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் நரவேட்டை தொடர்கிறது. நரவேட்டை மட்டுமல்ல நகங்களும் பதிக்கப்படுகின்றன; தசைகள் கிழிந்து குருதி வடிகிறது; குருதியாறு மகாவலி போல் இங்கேயும் பாய்கின்றது.

இராணுவத்தின் கனவாக அமைந்தது. ஆனால், அது முறியடிக்கப்பட்டு இத்தகைய கொடுமைகளுக்கு எதிராக மக்கள் எழுச்சி கொண்டதே உண்மையாக நிகழ்ந்தது.

உள்ளாகின்றானோஅவ்வாறே பெண்களும் சித்திரவதைக்கு உள்ளாகின்றார்கள். ஆயுத முனையில் திட்டமிட்டு நடத்தப்படும் அரக்கத்தனமான இவ்வன்முறையை நாமும் வன்முறையாலேயேதான் அடக்க முடியும், நம்மையும் விடுவித்துக்கொள்ள முடியும்.

பெண் என்பவள் ஊனப் பிறவி அல்ல போராட இயலாதவளல்ல. எமது உரிமைகள் பறிக்கப்படும் பொழுது' நாம் பலாத்காரப் படுத்தப் படும் பொழுது, சித்திரவதைக்குட்படுத்தப்படும்

# சமகாலக் கண்ணோட்டம்


தமிழ்ப் பகுதியில் விடி காலையில் கூவுவதற்கு ஒரு சேவல் கூட மிஞ்சவில்லை. கிட்டத்தட்ட எட்டு மாதகால விடிகாலைப் பொழுது ஈழத் தமிழகத்தில் சேவல் கூவாமலே விடிந்தது!

யாழ்ப்பாணம் கோட்டை பலாலி போன்ற இடங்கட்கு அண்மையில் புலிகள் 'சென்றி' போட்டு தடைகள் ஏற்படுத்தி இருந்தனர். இவற்றை உடைப்பதற்குத் தான் மிகப் பெரிதான யுத்த முஸ்தீபு. கோட்டையிலிருந்து வெளியேறிய கூர்க்காப் படை யாழ். ஆஸ்பத்திரியுள் புகுந்து அங்குள்ள டாக்டர்கள், நர்சுகள், நோயாளிகள் எனப்பாரது 99 பேரை கட்டுத்தள்ளி எஞ்சிய அனைவரையும் ஆடாது அசையாது குப்புறப்படுக்க வைத்து காவலும் இட்டது. மறுநாள் மாலைவரை யார் இறந்தவர் யார் உயிருடன் தப்பியவர் என பேசும் தெரியாமல் எல்லாருமே பயத்தில் குப்புறக் கிடந்தார்கள். மாலை ஆறு மணியளவில் ஒரு கமாண்டர் வந்து ''இறந்தவர்கள் போக மிகுதியானவர்கள் இனி எழுந்திருக்கலாம்'' உத்தரவுபோட்டார்!

சூறாவளி வேகத்தில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற உத்தரவு போட்ட கிருஷ்ணசுவாமி சுந்தர்ஜி எனனும் செங்கல்பட்டுமாவட்டத்தைச் சேர்ந்த எங்கள் அருமைத் தமிழ்ச் சகோதரர் ஒருவர் தான் இந்தியப்படை எல்லாவற்றுக்கும் மேலான தளபதியாக இருந்தார். இவருக்கும் மேலாக சுப்ரீம் கமாண்டராக இருந்தவர், இன்னொருதமிழர் ஜனாதிபதி வெங்கட்ராமன். கிருஷ்ணசுவாமி சுந்தர்ஜியின் இராணுவ ஞானத்தின்படி இருபத்து நான்கு மணித்தியாலங்களில் புலிகளை வென்று யாழ்ப்பாணத்தை இந்தியாவின் கீழ் கொண்டு வரலாம் என திடமாக நம்பப்பட்டது. அதுதான் ''ஒப்பரேஷன் பவன்'' அதாவது ''சூறாவளி ஒடரேஷன்'' என பெயரிடப்பட்டது. ஒரு மாங்காயைப் பறிப்பதற்காக ஒரு

அடைத்து வைக்கப்பட்டனர். கிராமப் புறங்களில்தான் இந்திய ஜவான்களின் கோட்

முகாமிட்டிருந்தார்கள். அவ விதம் முகாமிட்டிருந்த வீடுகளில் அவர்கள் செய்த அழிவு



# சேவல் கூவாது விடிந்தநாட்கள்

டம் அதிகமாயிருந்தது. அவர்களுடைய பெண் வேட்டைகள் சூறையாடுதல் எல்லாம் கேட்பாரில்லாமல் தனிக்காட்டு தர்பாராக நடந்து வந்தது.

கோப்பாயில் இருந்த தளபதியொருவர் பெண்களை மட்டும் வீட்டில் இருக்கும்படி கூறிவிட்டு ஆண்களை அகதி முகாம்கட்கு விரட்டி விட்டார்.

அமைதி முகாம்களிலுள்ளவர்களை ஏசியும் பேசியும் துன்புறுத்தியதோடு நாங்கள் நினைத்தால் யாழ்ப்பாணத்தை ஒரு நொடியில் சாம்பராக்க முடியும் என்று சூளுரைத்தார்கள். புலிகளிடமுள்ள கோபத்தையெல்லாம் சந்தர்ப்பத்திற்கேற்றபடி அகதி முகாம்களிலுள்ளவர்களிடம் காட்டினார்கள்.

''புலிகள் இருக்குமிடத்தைக் காட்டித் தராவிட்டால் உங்களையெல்லாம் நாளை காலை விடிவதற்குள் குண்டு போட்டுக் கொன்று விடுவோ

கள் பல கோடிக்கணக்கான ரூபா பெறுமதியானதாகும். 1987 டிசம்பர் மாத இறுதி வரை யாழ்ப்பாணத்தில் நல்ல நிலையில் உள்ள அனைத்து வீடுகளிலும் அமைதிப்படையினர் முகாமிட்டிருந்தனர். அப்படி இருந்த வீடுகளிலுள்ள பெறுமதிமிக்க பொருட்களை மிச்சம் விடாமல் சூறையாடினர். தமக்குத் தேவையற்ற பொருட்களைக் கூட வேண்டுமென்றே அடித்து உடைத்து அழித்தார்கள்.

ஒரு வங்கி ஊழியரது வீட்டில் முகாமிட்டிருந்த இந்தியப் படையினர், கொசு (நுளம்பு) உபத்திரவத்தைப் போக்கக் கையாண்ட வழிமுறை வினோதமானதும் வேதனை தருவதுமாகும். வங்கி ஊழியரின் மனைவியும் நல்ல உத்தியோகத்தில் உள்ளவர் மட்டுமல்லாமல் அரசாங்கத்தில் ஒரு திணைக்களத் தலைவரின புதல்வி. அந்தச் செல்லப் பெண்ணுக்கு அலுமாரி நிறைய பல விதமான விலை

திக் கிழிக்கப்பட்டு எங்கும் பஞ்சு பறந்த வண்ணமிருந்தது. கச்சேரி பண்டகசாலை புத்தகசாலை முதலியனவற்றின் கதவுகள் உடைக்கப்பட்டு பொருட்கள் சூறையாடப்பட்டன. ஏற்கனவே கச்சேரிக்கு அனுப்பப்பட்ட 1988 ஆம் ஆண்டிற்குரிய மோட்டார் அனுமதிப் பத்திரங்கள் கச்சேரியெங்கும் காற்றில் பறந்து கொண்டிருந்தன. கச்சேரி மூலை முடுக்கெல்லாம் மலசலம் கழிக்கப்பட்டு நாற்றமெடுத்தது. கச்சேரியின் ஒய்வூதியக்கிளை படையினரின் உணவிற்காக நாடெங்கிலும் வளைத்துப் பிடிக்கப்பட்ட ஆடுகள் கட்டப்பட்டு துர்நாற்ற வாடை வீசிக் கொண்டிருந்தது.

## நவபாரதி

பல்கலைக்கழக வளாகத்திலும் இவ்விதமே. மாணவர் சம்பந்தமான முக்கிய ஆவணங்கள் எல்லாம் கிழித்தெறியப்பட்டும், அடுப்பு மூட்டி எரிக்கப்பட்டும், தளபாடங்கள் உடைக்கப்பட்டும் மிலேச்சத்தனத்தின் உச்சக்கட்டத்தையும் தாண்டி அப்பால் போய்க்கொண்டிருந்தது. ஜவகார்லால் நேரு, இந்திரா காந்தி ஆகியவர்களின் நேரடி வாரிசுகள் நடத்திய மிலேச்சக் கூத்தை வெளியுலகிலுள்ளவரை அறியவிடாமல் சாமர்த்தியமாக மூடி மறைக்கப்பட்டு விட்டது. இது மிக வெட்கக்கேடானதொரு சதியாகும்.

இந்தியர்கள் இற்றைக்கு சுமார் நூறு வருடங்கட்கு முன் ஜாலியன் வாலாபார்க்கில் நிகழ்ந்த கோரக் கொலையை வருடந்தோறும் நினைவு கூர்ந்து அந்த கோரக் கொலையைச் செய்த பிரிட்டிஷாரைக் கண்டித்த வண்ணமே இன்னும் குமுறிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இந்த இரண்டு வருடங்கட்கு மிடையில் அமைதி காக்க வருகிறோமென வந்த இந்திய இராணுவம் எத்தனை

போல் இங்கேயும் பாய்கின்றது.

> பெண் என்பவள் ஊனப்பிறவி அல்ல போராட இயலாதவளல்ல. எமது உரிமைகள் பறிக்கப்படும் பொழுது, நாம் பலாத்காரப் படுத்தப்படும் பொழுது, சித்திரவதைக்குட்படுத்தப்படும் பொழுது எமது விடுதலைக்காக வேறுயாரும் போராட முடியாது. நாம்தான் போராடிப் பெற வேண்டும்.

சோதனைகள் நிறைந்த பெண்களின் வாழ்க்கை மேலும் சோதனைக்குள்ளாகின்றது. அந்நிய இராணுவம் திட்டமிட்ட ரீதியில் பல அழிவுகளை மேற்கொள்கின்றது. இதில் ஒரு வழிமுறைதான் தமிழ் பேசும் மக்களின சமூக ஒழுங்குகளினைச் சீரழிப்பது. இதன் மூலம் மக்களை மண்டியிட வைக்கலாம் என்பதே

ஜாலியன் வாலாபாகிக் கொலைகளைச் செய்திருக்கிறது! ஜாலியன் வாலாபார்க்கில் பிரிட்டிஷ் அரசாங்கத்தைக் கண்டித்தது. ஆனால் கொக்குவிலில் பிரம்படிலேன் பகுதியில் இந்திய இராணுவம் நிகழ்த்திய கொலைகளுக்கு இணையாக உலக சரித்திரத்திலே வெறொரு சம்பவத்தைக் கூறமுடியாது.

கொக்குவிலுக்கு அண்மையில் ஒரு சம்பவத்தில் முப்பதுக்கும் அதிகமான இந்திய ஜவான்கள் புலிகளினால் கொல்லப்பட்டனர். பிரம்படிலேன் பகுதியிலும் பலர் ஒரு வீட்டினுள் வசமாய் அகப்பட்டு பூட்டப்பட்டனர். இன்னொரு கோஷ்டி ஜவான்கள் அவ்விடத்திற்கு வந்து பூட்டப்பட்டவர்களை விடுவித்ததோடு பிரம்படிலேன் பகுதி மக்களை நிரையாகப் படுக்க வைத்து அவர்கள் மீது 'செயின் புளொக்' கினைச் செலுத்தி குரூரமாகக்கொன்றனர். இதில் சிறு குழந்தைகளும் அடங்குவர்.

(தொடரும்)

ஆயினும் பெண்கள் மீது பிரயோகிக்கப்படும் பலாத்காரத்தைச் சமூகம் பெரிது படுத்துகின்றது. சமூகத்தின் ஒரு அங்கமான பெண்கள்மீது சமூகத்தின் இந்த நடவடிக்கை, தன்கையாலேயே தனது கண்ணைக் குத்துவது போன்று அமைந்துள்ளது.

மேலும் இது எதிரியின் நோக்கத்தை, மறைமுகமாக நாமே நிறைவேற்றுவது போன்றுள்ளது; இந்நிலை நிச்சயமாக மாற்றப்பட வேண்டியதொன்றாகும்.

இராணுவத்தின் பாலியல் வன்முறைக்குட்பட்ட பெண்

பொழுது எமது விடுதலைக்காக வேறுயாரும் போராட முடியாது. நாம்தான் போராடிப் பெற வேண்டும்.

போராடத் துடிக்கும் எமது கரங்களை சமூகம் கட்டிப் போட்டிருக்கின்றது. அறுத்துக்கொண்டு ஆயுதமேந்த வேண்டியது எமது கடமையாகும்.

கற்பு என்றும், கன்னி என்றும், கைம்பெண் என்றும் பெண்கள் மீது பெரும் பாறாங்கற்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. இந்த அடக்குமுறைகள் பெண்களைப் போகப் பொருளாக்கும் நோக்கில் அடிமைகொள்வதற்காக அன்றிலிருந்து, ஆண்களால் கொண்டுவரப்பட்ட விதிகளாகும்.

இத்தகைய சமூக அடக்குமுறைகளை எப்போது தகர்த்தெறிகின்றோமோ அப்போதுதான் நாம் பூரண சுதந்திரம் உடையவர்களாவோம்.

இவை தகர்த்தெறியப்படுவதற்குரிய சந்தர்ப்பமும், சூழலும் தேசவிடுதலைக்காக

> கோபத்தால் உங்களின் கண்களில் கொப்பளிக்கும் சிவப்பு, உங்களை அவமதித்த, இம்சித்த எதிரியின் உடலைக் கிழித்து ஓடும்குருதியாக வேண்டும். அப்போதுதான் எமது நிலமும் வாழ்வும் விடியும்.

களை, மனிதாபிமானமற்ற முறையில், வித்தியாசமான நோக்கில் பார்ப்பதோ, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் வார்த்தைகளை வீசுவதோ, அவளின் மனநிலை மிகப்பாதிப்படையும்படி நடந்து கொள்வதோ அவர்களை வாழ்க்கையில் வெறுப்பும், விரக்தியும் அடையச் செய்யுமே தவிர விடுதலைப் பாதையில் அவர்களின் பணியைச் செய்யஇட்டுச் செல்லாது.

ஓர் ஆண் எவ்வாறு இராணுவத்தின் உடல்வதைக்கு

ஆயுதமேந்துகின்ற இந்த உன்னத பணியைச் செய்கின்ற பொழுதே கிடைக்கின்றது.

பெண்கள் சமூகம் முடங்கியிருந்து கண்ணீர் வடிப்பதை விடுத்து களம் காணப் புறப்பட வேண்டும்.

கோபத்தால் உங்களின் கண்களில் கொப்பளிக்கும் சிவப்பு உங்களை அவமதித்த, இம்சித்த எதிரியின் உடலைக் கிழித்து ஓடும் குருதியாக வேண்டும். அப்போதுதான் எமது நிலமும் வாழ்வும் விடியும்.

நன்றி -சுதந்திரப்பறவைகள்

## மொழியியல்

# தமிழ்மொழியின் தனிச்சிறப்புகள்

தமிழ்மொழி பற்றிய மொழிசார்ந்த நோக்கிலான சில சிந்தனைகளுடன் சமூகம், சமயம், பண்பாடு, இலக்கியம் கலைகள், மருத்துவம் வானியல், அரசியல் போர் வாழ்வியல், துறவியல், பொவிதுயல் சிறப்பியல்களென்பவற்றையும் உள்ளடக்கிய நோக்கிலே மொழியும் வாழ்வும் என்ற பரந்த சிந்தையுடன் சில செய்திகளை நோக்கலாம். மொழியைப் பேசுபவன் மனிதனேயாவான். விலங்குகளும் பிற பிராணிகளும் பூச்சிகளும் சத்தமிடுகின்றன. அவற்றின் குரல் கீச்சிடுதல்களிலிருந்து சிற்சில தேவைகள் உண்டென்றும் தொடர்பு கொள்ள விழைகின்றனவென்றும் அறிந்துகொள்ள முடியுமாயினும் பிரக்ஞை பூர்வமாகத் தனது கருத்துக்களை எண்ணங்களை செய்திகளை விருப்பு வெறுப்புக்களை, அபிலாஷைகளை வெளிப்படுத்தத் தக்க நல்ல வாய்ப்பான சாதனமாக அமைவது மனித மொழியாகும். அது ஒன்றுதான் பரிவர்த்தனையூடகமாகச் செயற்பாட்டு நிலையில் பயன்தருவதே 'மொழி' என்று கொள்ளப்படும். சிலமொழிகள் தொடர்புச் சாதனமாக மட்டும் அமைதல் கூடும். இன்னும் சில வளங் கொண்டதாயபையும், சில மொழிகள் வழக்கிறந்து காணப்படும். தமிழ் போன்ற மொழி புதிய புதிய பரிணாமங்களையும் வளர்ச்சிகளையும் வளங்களையும் தன்னகத்தாக்கிக்கொண்டு கால தேச வர்த்தமானங்களுக்கும் தேவைகளுக்கும் ஈடு கொடுத்து, வசைந்து, நெகிழ்வுடன விளங்கும் அத்தமிழ்மொழியின் தனிச் சிறப்புக்கள் சிலவற்றைக் குறிப்பிடுவோம்.

ன்றதென்பதனை முதலிலே சுட்டுதல் வேண்டும். ஆனால் தமிழ்மொழியின் பயில்நிலை. பிரயோகம், அன்றாட உபயோகம், பேச்சு, பயன்பாடு என்பன பற்றிச் சிந்திட்போர் இவர்களில் எத்தனை விழுக்காடு? இவ் விழ்ச்சியை எப்படி நிவர்த்திபண்ணுவதென்பதும் ஒருசுவையான ஆராய்ச்சியாகலாம். இந்நோக்கிலே தமிழ் மொழியைப்பற்றிச் சிந்திக்கும் போது அதன் தேவை

1. தமிழிலக்கிய இலக்கண வளம், பழைமை என்பதனை யறியவும்

2. தமிழர் தம் அலைச்சலை அசதி நிலைமையைத் தமிழை வாழவைப்பதன் மூலம் நீக்குவதற்கும்

3. ஆதித் தன்மை வாய்ந்த விழுமிய பண்பாடுகளையும், நாகரிகங்களையும் நிலைநாட்டுவதற்கும்

என வகைப்படுத்திபுரைத்தல் பொருத்தமாகலாம்.

தமிழிலக்கிய இலக்கண வளம் தமிழ்மொழியின் தனிச் சிறப்புக்களுள் ஒன்றெனலாம் தமிழிலக்கியப் பழமையினூடே தமிழ் மக்களது பண்பாடு, வாழ்க்கை முறைமை, நாகரிகம் ஆகிய அம்சங்களை அறிய வாய்ப்புண்டு. திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழ்மொழி தொன்மை

என்பனவ நிலத்தை அடிப்படையாக வகுத்த வாழ்வையே வகுத்துரைத்துள்ளன குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைக்கும் உரிய ஒழுக்கம் தமிழர் வாழ்வு என்று வகுத்துரைக்கப்பட்டுள்ளது. அன்பினைந்திணை மரபு என்ற தத்துவம் தமிழர் வரலாற்று தத்துவமாக அமைந்தது, அது களவு, கற்பு என இருவகைப்பட்டமைந்தது. அதனின்றும் பிறந்த ஒழுகலாறுகளும் இலக்கியங்களிலுண்டு. அதன் விரிவு நீண்டு கொண்டேபோகும். கைக்கிளை பெருந்திணை என்ற மரபுகளுமுண்டு. ஆக அகவாழ்வு புறவாழ்வு என்ற இருவகையான வாழ்க்கை நிலைகளை 'வாழ்வுத்தளத்தைத் தமிழ் மக்கள் கொண்டு விளங்கினர் என்று புலப்படும் 'உள்ளம் பற்றிய' செய்திகள் எனவும் புற உலகுடன் மனிதன் கொள்ளும் புறநிலையான பண்பாடுகள் என்ற வகையிலும் இருவகை நிலைப்பாடுகளும் தமிழர் வாழ்வில் முதன்மை பெற்றுத் திகழ்ந்தன. இத்தகு வாழ்க்கை எந்தச்சமயச்சார்பு கொண்டும் அமையாத தன்மையைக் குறித்துத் தமிழர் பெருமையும் பெருமிதமுமுடையலாம். ஏனெனில் சமயச் சார்பு பல்வேறு சண்டைச்சச்சரவுகளை

நாகரிகத்தைக் கொண்டமைந்த ஏனைய நாகரிகங்கள் சிலவற்றோடு ஒப்பநோக்கி வியக்கத்தக்க வளப்பமுடையது தமிழர் தம் திராவிட நாகரிகம் சிந்துவெளி நாகரிக ஆய்வு இதனை மெய்ப்பிக்கிறது. திராவிட நாகரிகத் தடயங்கள் தமிழர் நாகரிக மேம்பாட்டைத் துலக்கவல்லன 'வாழ்க்கைக் கடமைகள்' வகுக்கப்பட்ட நிலையில் அமைந்த சமூகம் தமிழர் சமூகம் என்பதனைப் புறநானூறுபறைசாற்றுகிறது.

''ஈன்று புறந் தருதல் என்
றலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்
தைக்குக் கடனே
வேல் வடித்துக் கொடுத்
தல் கொல்லற்குக் கடனே
ஒன்றுவான் அருஞ்சமம்
முருக்கிக்
கற்றெறிந்து பெயர்தல்
காளைக்குக்கடனே

எனக் கடமைகள் வகுக்கப்பட்டு வாழ்க்கை நடத்திய செய்திக் குறிப்புண்டு. தமிழர் கண் செலுத்தும் வழியும் அதுதான்'' என்ற இவ்வறிவுரையை எண்ணிப்பார்க்க வேண்டும்.

தமிழ்மொழி பொதுமையுட் சிறப்பையும் சிறப்பினுட் பொதுமையையுங் கொண்டமைவது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தத்துவமும், தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினையழித்திடுவோம்' என்று பேசிய உயர்ந்த பொதுநெறிப் பண்பாடு தமிழுக்குண்டு. ஆதலாலேயே தமிழ்மொழியுடன் இணைத்துத் தமிழைப் படைத்த புலவனும் தனியனாயும், சமுதாயமாயும் வாழ்ந்து சிறந்துள்ளார்கள் சங்கப்புலவன் முதல் சமகாலப் புலவர்கள் வரையும் நோக்கினால் தமிழால் உயர்ந்த பண்பையும் தமிழ்ச் சமுதாய நலத்திற்கென வாழ்ந்த செழுமையையும் கண்டு மகிழலாம். புலமைச் செழுமையிருந்தமை ஆனால் செல்வச் செழுமையில்லை இது தமிழ் புலமையின் சோக வரலாறு. புலமையின் வீறும் செருக்கும்

> தொல்லியற் சான்றுகளிடையாக நோக்கும் போது, மனித நாககரித்தின் தொடக்கநிலையினைச் செப்புகின்ற இலக்கியவளம் கொண்ட மொழி தமிழ் என்ற பெருமை கவனிக்கத்தக்கது. ஆற்றோர நாகரிகத்தைக் கொண்டமைந்த ஏனைய நாகரிகங்கள் சிலவற்றோடு ஒப்பு நோக்கி வியக்கத்தக்க வளப்பமுடையது தமிழர்தம் திராவிட நாகரிகம்.

சமுதாயம் 'இலட்சிய சமுதாயம் என்ற தத்துவத்தைத் தமிழ் மொழியிலக்கியங்களினால் அறிந்து கொள்ளல் வேண்டும் 'உயர்நனி இலட்சியங்கள்' கொண்ட சமுதாயத்தின் பயில் மொழியாகத் தமிழ்மொழி விளங்கியதென்பது தெரியவருகின்றது.

''நல்லது செய்தல் ஆற்றீரா
யினும்
அல்லது செய்தல் ஓம்புமின்
அதுதான்
எல்லாரும் உவப்பது
அன்றியும்
நால்லாறுப் படூஉம் நெறியு
மாறதுவே'' (புறம். 195)

நல்வினையைச் செய்ய முடியவில்லையாயினும் தீவினை

வலிமையும் மற்றெல்லாவற்றையும் விட எக்காலத்தும் மேலோங்கி நின்று ஒலிக்கும் தன்மையினைத் தமிழ்க்கவிகளின் குரல்களிலேயிருந்து அறிய முடியும்.

'அறஞ்செய்ய விரும்பு' ஆறுவது சினம், ஊக்கமது கைவிடேல் ஐயமிட்டுண் 'ஓதுவதொழியேல்' அஃகஞ் சுருக்கேல், ஔவியம்பேசேல் என்று வரும் தொடர்கள் எல்லாமனிதருக்கும் பொதுவான கருத்துக்களாகவும் இவற்றினைப்பின் பற்றுவோர் சகல சிறப்பும் பெற்று வாழ்வாரென்பதும் உண்மை (மொழி) யாகும். இத்தகு சிறப்பு மிகு 'பொதுமை நலன்' தமிழின் தனிச்


**கனகசபாபதி நாகேஸ்வரன் M. A. (Jaffna)**

இன்று தமிழ்மொழி மூலம் கல்வி பயில்கின்றனராயினும் தமிழின் தனிச்சிறப்புக்களைப் பெரும்பாலான தமிழ்மக்கள் அறிந்து புரிந்து கொள்ளத் தக்க வாய்ப்பில்லையென்றே கூறலாம். காரணம் தமிழர் தற்போது மேற்கொள்ளும் பாடங்களாகும். தமிழர்கள் தமிழைப்படிப்பதினை விடுத்து இன்று பிற மேற்குநாட்டு மொழிகளையே அதிக வேகத்துடனும், ஆர்வத்துடனும் அங்கலாய்ப்புடனும், ஆவேசத்துடனும் படிக்கிறார்கள். பரீட்சை எழுதுகிறார்கள். பாஸ்பண்ணுகிறார்கள். முடிவில் பணந்தேடுகிறார்கள். இப் பணத்தேட்டத்தினை தமிழ்மொழியினால் பெற்றுக்

மிக்கமொழியாக விளங்குவதனை ஆய்வாளர் பலரும் சான்றாதாரங்களுடன் நிறுவியுள்ளனர். இன்னும் தொல்காப்பியம் என்ற இலக்கண நூல் பற்றிய நுண்ணாய்வு முடிவுறாத நிலையில் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றது. இயற்கை பற்றிய ஆய்வுகளுடன் சங்கமித்தஆய்வாகவும் அணுகுமுறையாகவும் தமிழாய்வு நிகழுவது அதன் தனித்துவத் தொன்மைக்குச் சான்றாகிறது. தமிழிலக்கியக் கருவூலங்கள் இத்தகு வழியிலே சிந்திப்பதற்குரிய சான்றுகளைத் தருவனவாகுகின்றன. இயற்கை தோன்றிய காலமுதல் 'வாழ்வு' பற்றிப் பேசிய தன்மைகளை இலக்கியங்கள் சுவைபட எடுத்தியம்புகின்றன

தோற்றுவிப்பதுண்மையே தமிழின் சிறப்பம்சங்களிலே இப் பண்பு இவ்வம்சம்தலையாய சிறப்பெனலாம். மதத்தின் கட்டுப்பாட்டுக்குள் நின்று வாழ்வைப் போதிக்காத தன்மை உன்னிப்பாக நோக்கத்தக்கதொன்றாகும். உள்ளம்விரும்பியபடி உலக இயற்கையோடொட்டி வாழ வேண்டும் என்ற தத்துவத்தைக் கற்பிக்கும் இலக்கியங்கள் காலத்தால் முற்பட்ட தமிழிலக்கியங்களெனலாம். செம்புலப்பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் கலந்த'' 'வாழ்வு நெறி' நோக்கற்பாலது,

தொல்லியற் சான்றுகளிடையாக நோக்கும் போது, மனித நாகரிகத்தின் தொடக்க நிலையினைச் செப்புகின்ற




--- பாப்பாணன்

(5)

ஆறுபத்தி ஒன்றினிலே உச்சக் கட்டம்
அரசாங்க அதிபர்பணி மனைகள் முன்னே
அறப்போரைச் செய்தார்கள் அந்த நாளில்
அரச நிர் வாகங்கள் நின்று போச்சு
புறம்போகாத் தமிழர் செய்போரினாலே
புகைந்தார்கள் புறப்பட்டார் அடக்கும் நோக்கில்
திறம்பாத நெஞ்சத்துக் கொள்கையோர்கள்
தியாகத்தைச் செய்தார்கள் அடிகள் வாங்கி.

சட்டத்தை மதிக்காது அன்று செய்த
சரித்திரத்தில் இடம் பெற்ற போரை எல்லாம்
திட்டங்கள் பலவாறு தீட்டிப் பின்னர்
திசை திருப்பி விட்டார்கள் ஆளுவோர்கள்
கொட்டங்கள் அடங்கியவர் ஆகி எம்மார்
கொள்கையிலே தளர்வுற்று சோர்ந்து போனார்
பட்டங்கள் பதவிகளை நாடுவோராய்
பாராளு மன்றமதே நோக்கமானார்.

சிங்களத்தைப் படிக்காதீர் என்று மேடைச்
சிங்கமெனவே நின்று கர்ச்சித்தார்கள்
எங்களவர் சொல்கின்றார் என்று ஏற்று
எத்தனை பேர் தந்தொழிலை இழந்து போனார்
தங்களது பிள்ளைகளை தலைவர் மார்கள்
தலைநகரில் படிப்பித்தார் சிங்களத்தை
எங்கெங்கோ வெளிநாடு எல்லாம் போக்கி
ஏற்றமுற வைத்தார்கள் ஆங்கிலத்தில்.

தாய்மொழிக் கல்வியினை தமிழர் தங்கள்
தாரகமாய் கொண்டு மொழிப்பற்றுத் தன்னில்
வாய்மையுடன் நின்றதனால் தமது சொந்த
வாழ்க்கையிலே இழப்புகளுக்காளாய் போனார்
தூய்மையிலா அரசியலில் தமிழ்த் தலைவர்
தூண்டி விட்டுத் தாம்விலகித் துரோகம் செய்து
மாய்மாலக் கண்ணீரை வடித்து மக்கள்
மனங்களிலே நின்றுதம் வயிறு காத்தார்.

கட்டாயச் சிங்களத்தால் உத்தியோகம்
கை நழுவிப் போனோரும் அறிவு தன்னில்
மட்டான சிங்களவன் பதவி ஏற்பும்
மதிமிக்க தமிழ் இளைஞன் புறக்கணிப்பும்
முட்டாளாய் கல்வியிலே தரம் குறைக்க
முறையற்ற தரப்படுத்தல் நடைமுறையும்
ஒட்டாத உறவுகளை வலுப்படுத்த
ஒவ்வொன்றாய் சம்பவங்கள் நிகழலாச்சு.

அடிபட்டு உதைபட்ட காலமெல்லாம்
அன்னை மார்வயிறுகளில் உருவெடுத்த

வில் பணந்தேடுகிறார்கள். இப் பணத்தேட்டத்தினை தமிழ்மொழியினால் பெற்றுக் கொள்ள முடியாதென்பதும். அம்மொழிப்பரம்பலுக்குக் குந்தகமாக, தடையாக அமைகி

'வாழ்வு' பற்றிப் பேசிய தன்மைகளை இலக்கியங்கள் சுவைபட எடுத்தியம்புகின்றன

தமிழிலக்கியங்கள் (எட்டுத் தொகை பத்துப் பாட்டுமுதல் இன்றுவரை) இலக்கணங்கள்

யாக நோக்கும் போது, மனித நாகரிகத்தின் தொடக்க நிலையினைச் செப்புகின்ற இலக்கிய வளம் கொண்ட மொழி தமிழ் என்ற பெருமை கவனிக்கத்தக்கது. ஆற்றோர

நல்வினையைச் செய்ய முடியவில்லையாயினும் தீவினையைச் செய்யாதீர்கள். இப் பண்பாட்டை எல்லோரும் புகழ்வர் மேலும் நன்னெறிக்

இத்தகு சிறப்பு மிகு 'பொதுமை நலன்' தமிழின் தனிச் சிறப்பாகும்.

அடுத்த வாரம் முடியும்

அடிபட்டு உதைபட்ட காலமெல்லாம்
அன்னை மார்வயிறுகளில் உருவெடுத்த
கடுகினிலும் சிறிதான கருவிற்றானும்
கலவரத்தின் தாக்கங்கள் பதியலாச்சு
துடியாட்டம் மிக்கவராய் துள்ளியோடும்
துடுக்கான சிறுவர்களின் நெஞ்சில் எல்லாம்
கொடுமைகளை கண்ணாரக் கண்டும் கேட்டும்
குருதியிலே பழியுணர்வு பதிந்ததன்றோ.

சம்பவங்கள் ஒவ்வொன்றாய் நிகழும் போதும்
சாத்வீகம் இளைஞரிடை சாகலாச்சு
''நம் பலங்களை நாம் காட்டவேண்டுமன்றேல்
நாளடைவில் நாமிங்கு வாழ மாட்டோம்
கும்பலிலே ஒன்றாக வாழ்ந்து செத்து
குலமழிக்கும் நிலைவளர்க்கலாமோ? '' என்று
வெம்பலிலும், விம்மலிலும் விரக்தியுள்ளும்
வீரம்மிகு காளைகளும் புறப்பட்டார்கள்.

தீப்பிழம்பை உள்ளடக்கி வெளியே ஒன்றும்
தெரியாது இருக்கின்ற மலையே போல
பூப் பூத்த புதர்செறிந்த சோலையொன்றின்
புற்றினிலே வாழ் கொடிய நாகம் போல
மூப்பானோர் செல்கின்ற பாதை தன்னை
முற்றாக ஏற்காத மனத்தராக
''காப்பாவோம் வருநாளில் தமிழக்'' கென்று
காத்திருந்தார் இளந்தமிழர் களத்தேபாய.

— தொடரும்

## விண்வெளி விஞ்ஞானம்

**உடுவில் விவியன் நமசிவாயம்**

சூரியனின்கதிர் செங்குத்தாக விழும் இடத்திலே - சூரியனுக்கு நேர் கீழாக உள்ள இடத்திலே - வெள்ளிக் கிரகத்தில் உஷ்ணம் 1300 பாகை F வரையில் இருக்கலாம். மற்றைய இடங்களிலே, வேறு வேறு காரணங்களினால், உஷ்ணத்தின் அளவு வித்தியாசப்படக் கூடும். துருவப் பகுதிகளில், சீதோஷ்ண நிலைமை குளிராக இருக்கக் கூடுமா? பருவத்துக்குப் பருவம் - பூமியிலே சீதோஷ்ண நிலைமை வேறு படுவது போல, வெள்ளியிலும் சீதோஷ்ண நிலைமை, காலத்துக்குக் காலம், இடத்துக்கிடம் வேறு படுமா? பகலுக்கும் இரவுக்கும், உஷ்ண அளவில் வேறுபாடு இருக்கக் கூடுமா? இப்படிப் பலகேள்விகளுக்குரிய விடைகளை அறிந்து கொள்வதற்கு முன்னர், வெள்ளியைப் பற்றித் துப்புத் துலக்கும் முயற்சியில் ஈடுபட்ட வானியல் வல்லுனர், வெள்ளி தன்னைத் தானே எந்த வேகத்தில் சுற்றுகிறது என்பதை அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஒரு கிரகத்தினுடைய சுழற்சி வேகத்தை, நிர்ணயிப்பதற்கு, மிகச் சரியான வழி. அந்தக் கிரகத்தின் மேற்பகுதியில் உள்ள - குறிப்பிட்ட நிலையான அடையாளங்கள் சுழல்வதை. அசைவதை அவதானிப்பதாகும். ஆனால் வெள்ளியைப் பொறுத்தவரையில் இவ்வாறு அவதானிக்க முடியவில்லை. காரணம், அதனைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் முகிற் பரப்பு. எவ்விதமான இடைவெளியும் இன்றி, முற்று முழுதாக, ஏகமாக, மறைத்து மூடியிருப்பதாகும். இப்படிப் பரவி ஏகமாகச் சூழ்ந்திருக்கும் முகிற்படலத்தின மேற்பகுதியிலே கூட, அவதானிக்கக் கூடிய, நிரந்தர அடையாளங்கள் எதுவும் இல்லை. ஒரு கிரகத்தின் சுழற்சிவேகத்தைக் கணக்கிடுவதற்குரிய இன்னொருவழி டொப்ளர் விலக்க விதியை உபயோகிப்பதாகும். டொப்ளர் விலக்க விதி முறையை உபயோகித்தும் கூட, வெள்ளியின் சுழற்சி வேகத்தைக் கணக்கிட முடியவில்லை.

டொப்ளர் விலக்கம் என்பது;'' நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கும் ஒரு பொருளில் இருந்து பிரதி பலிக்கப்படும். ஒளியின் அலைகள், குறுகலாகின்றன. நீளத்தில் படிப்படியாகக் குறைந்து கொண்டே வருகின்றன என்ற விதியும், தம்மை விட்டு விலகிச் சென்று கொண்டிருக்கும் ஒரு பொருளில் இருந்து பிரதி பலிக்கப்படும் ஒளியின் அலைகள் படிப்படியாக நீளத்தில் அதிகரிக்கின்றன'' என்றவிதியும் ஆகும். இவ்விரு வகையாகவும் விலக்கத்தின் அளவு எவ்வளவு என்பதை வைத்துக் கொண்டு - நீளம் குறுகிக் கொண்டே போனால் எவ்வளவு குறுகுகிறது என்பதையும், நீளம் அதிகரித்தால், எவ்வளவு அதிகரிக்கிறது. என்பதையும் கணித்துக் கொண்டு ஒருபொருள், அது கிரகம் நட்சத்திரம் அல்லது செயற்கைக் கோள் எதுவாக இருந்தாலும், அது எந்த வேகத்தில் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறது என்பதையோ, அல்லது எவ்வளவு வேகத்தில் நம்மை விட்டு விலகிச் செல்கிறது என்பதையோ கணக்கிட்டுக் கொள்வார்கள். சுழன்று கொண்டிருக்கும் ஒரு கோளத்தின் ஒரு விளிம்பில் இருந்து, ஒளி பிரதி பலிக்கப்படும் போது, டொப்ளர் விலக்க விதியின் உதவியுடன் அந்த விளிம்பு என்ன வேகத்தில் பார்த்துக் கொண்டிருப்பவரை நோக்கி, அல்லது பார்த்துக் கொண்டிருப்பவரில் இருந்து திரும்புகிறது என்பதைக் கணக்கிட முடியும். இதனைக் கொண்டு அந்தக் கிரகமோ - நட்சத்திரமோ என்ன வேகத்தில் சுழல்கிறது என்பதைக் கணித்துக் கொள்வதும் சாத்தியம் - இருந்தும், இந்த வழியிலே கூட வெள்ளியின் சுழற்சி வேகத்தைக் கணித்துக் கொள்ள முடியவில்லை. அது சாத்தியப் படாமற் போனதற்கான காரணத்தை அடுத்த வாரத்தில் பார்ப்போம். □

## விண்வெளி விநோதம்

வெள்ளிக் கிரகத்திலே, கண்ணாடி வீட்டுப் பண்பு நிகழ்வதற்கு, அங்கே கண்ணாடி போலக் கடமை புரிவது, அங்கே உள்ள ஆழமான— நெருக்கம் நிறைந்த — சூழலாக இருக்கக் கூடும். உஷ்ணத்தைத் தடுத்து, வெளியே விடாமல் நிறுத்தக் கூடிய வஸ்துக்கள் அதன் சூழலிலே போதிய அளவு உண்டு என நிரூபிக்கப்படும் பட்சத்தில் மாத்திரமே, இது சாத்தியமாகும். வெள்ளியில் உள்ள சூழலிலே காணப்படும் எந்த ஒரு பொருளும் உஷ்ணத்தை வெளியேற விடாமல் தடுத்து நிறுத்தக் கூடிய சக்தி உடையதாக இல்லை. இதனால், வெள்ளியின் நிலப்பரப்பு, சிவந்து சூடாக இருக்க முடியாது. அகச்சிவப்பு அலை நீளங்கள் சில, வெள்ளியில் இருந்து தப்பி வெளியேற எத்தனித்தாலும், வெள்ளியின சூழலிலே உள்ள கரியமில வாயுவினால் தடுத்து நிறுத்தப் படுகிறது. ஆனால், கரியமில வாயுவினால் தடுத்து நிறுத்தப்படாத — மற்றைய அலை நீளங்கள், உஷ்ணத்தைக் கடத்தி வெளியேற்றும் இது எதனைப் போன்றது என்றால், கண்ணாடி வீட்டில் உடைந்து, துவாரங்கள் ஏற்பட்டிருக்குமாயின், அவற்றின் ஊடாக உஷ்ணம் காற்று என்பன வெளியேறுவது போல.

இப்படியாக வெளியேறும் உஷ்ணத்தைத் தடுத்து நிறுத்தக் கூடிய வேறு அம்சங்கள் வெள்ளியிலே இருக்கக் கூடும். உதாரணமாக, நீராவி அங்கே இருக்கக் கூடுமானால், அது கரியமில வாயுவினால் தடுத்து நிறுத்த முடியாத அலைநீளங்களைத் தடுத்து, வெளியேற விடாமல், நிறுத்தக் கூடிய வல்லமை பொருந்தியது. வெள்ளியில் நீராவி இருக்கிறதா என்பதை அறிந்து சொள்வதற்காக, ஆரம்பத்திலே செய்யப்பட்ட ஆராய்ச்சிகள் அனைத்தும் தோல்வியிலே முடிந்தன. வெள்ளியில் நீராவி இருக்கிறதா, இல்லையா என்பதனை ஆராய்ந்து அறிவதற்குத் தடையாக இருப்பதும்நீராவி தான். வெள்ளியில் உள்ள நீராவி அல்ல, ஆனால் பூமியைச் சூழ்ந்திருக்கும் நீராவியே, வெள்ளியில் நீராவி இருக்கிறதா இல்லையா என்பதனை ஆராய்ந்து அறிவதற்குத் தடையாக இருக்கிறது!


வெள்ளியில் இருந்து பிரதி பலிக்கும் சூரிய ஒளியின் ஒளி வண்ணத்தின் மூலம், வெள்ளியிலே நீராவி இருக்கிறதா என்பதை அறிவதற்கு — பூமியைச் சூழ்ந்திருக்கும் நீராவி தடையாக இருக்கிறது. இந்தத் தடையை நீக்குவதற்காக, அகச்சிவப்பு ஒளிவண்ணக்கருவியை, பலூனில் பொருத்தி, அந்தப்பலூனே பூமியைச் சூழ்ந்திருக்கும் நீராவியின் உயரத்துக்கும் மேலே அனுப்பி ஆராய்ச்சி செய்தார்கள். இந்த ஆராய்ச்சியின் மூலம், வெள்ளியிலே நீராவி நிறைய உண்டு என அறிந்து கொண்டனர். சோவியத் கலசமும் இந்த முடிவை உறுதிப்படுத்தியது. வெள்ளியிலே உள்ள நீராவி, அங்கிருந்து உஷ்ணத்தை, வெளியேற விடாது, தடுப்பதற்குப் போதுமான அளவில் இருக்கிறது. வெள்ளியைச் சூழ்ந்திருக்கும் நீராவி வெள்ளியிலே சூரியன் மூலமாகக் கிடைக்கும் உஷ்ணம், மீண்டும் வெளியேறிவிடாமல்- கண்ணாடி வீடுபோல—தடுத்து விடுவதனால், வெள்ளியின் மேற்பரப்பு அதிக உஷ்ணம் உள்ளதாக விளங்குகிறது. அதனுடைய சூழலில், அதிக அளவான நீராவி இருப்பதைக் கொண்டு, அங்கே உள்ள முகில்களின் மேற்பகுதி, பனித்துகள்கள் நிறைந்ததாக இருக்க வேண்டும் என வானியர் அறிஞர்கள் ஊகிக்கிறார்கள். அங்கே உள்ள முகிலின் மேற்பகுதியில், தூசுகளோ வேறு திட பதார்த்தங்களோ இருக்கமுடியாது. □

(தொடரும்)

# கரந்துறை வாழ்வு கலைந்தது


# 'றோ'வின் வதந்தி சிதைந்தது

கைதிகள் ஆயினும் கருணையே காட்டினோம்...
பொய்த்தனை அகற்றி ஓர் புத்துணர்வூட்டினோம்!



'' விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டு மனிதாபிமான ரீதியில் விடுதலை செய்யப்பட்ட இந்திய இராணுவத்தினரும், அவர்களை விடுதலை செய்த "மாத்தயா' அவர்களும்.
(இவர்களைத்தான் உயிரோடு ரயர் போட்டு புலிகள் எரித்தார்கள் என இந்திய செய்தி தொடர்பு சாதனங்கள் பிரசாரம் செய்தன)

வேங்கையின் கானகத்துள்
ஆங்கவர் முன்னே வந்து
பாங்குடன் பேசி எங்கள்
பாசத்தை அள்ளிச் சென்றோன்...



## உண்மைகளும் பொய்மைகளும்

விடுதலைப் புலிகளுக்கு எதிரான பொய்ப்பிரசாரத்தை 1987ஆம் ஆண்டிலேயே இந்தியா தொடங்கி விட்டது. பெண்களையும், குழந்தைகளையும் மனிதக் கேடயமாக வைத்துக்கொண்டு அவர்களுக்குப் பின்னால் நின்று இந்திய இராணுவத்தைத் தாக்குகிறார்கள் என்பது இதில் ஒன்றாகும்.

''றோ'' வின் இந்தப் பிரசாரத்திற்கு அனுசரணையாக சிலம்புச் செல்வர் ம.பொ.சி துக்ளக் ஆசிரியர் சோ, தீபம் ஆசிரியர் ,நா. பார்த்தசாரதி, இவர்களோடு முற்போக்கு எழுத்தாளராகக் கருதப்படும் ஜெயகாந்தன் முதலான பலரும் இந்திய வானொலியிலும் இந்திய தொலைக்காட்சியிலும் பிரசாரம் செய்தனர்.

இவர்களோடு சேர்ந்து கொண்டு அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமும் பெண்களையும், குழந்தைகளையும் முன்னால் நிறுத்தி விடுதலைப் புலிகள் போராடுவது கோழைத்தனம் என்று குறிப்பிட்டார்.

தூரதர்சன் மூலம் அமிர்தலிங்கம் செய்த இந்தப் பொய்ப்பிரசாரத்திற்கு பதில் கொடுத்த கலைஞர் மு. கருணாநிதி ''அந்தக் குழந்தைகளுக்கு இருக்கின்ற தமிழ் உணர்ச்சி தானும் அமிர்தலிங்கத்திற்கு இல்லையே என்பது தான் எனது கவலை'' என்றார்.

யாழ்ப்பாண யுத்தம் ஆரம்பமானபோது இலங்கையில் தங்கியிருந்த இந்திய இராணுவ உயர் அதிகாரியான மேஜர் ஜெனரல் ஹர்கிராட் சிங் உடனடியாகவே புதுடில்லிக்கு அழைக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து பதவியில் அமர்த்தப்பட்ட யாழ் குடா நாட்டு இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் குல்வந்த் சிங் 1987 நவம்பர் மாதம் யு. என். ஐ. நிருபருக்கு கொடுத்த பேட்டியில் பின்வருமாறு குறிப்பிட்டார்: போரில் புலிகள் நிரூபித்து விட்டார்கள் எனக் குறிப்பிட்டார்.

றோவின் பொய்ப்பிரசாரம், இந்திய இராணுவ அதிகாரிகளின் பதில்களாலேயே பயனற்றுப் போயிற்று.

## மாத்தயா பற்றிய வதந்தி

இதைத் தொடர்ந்து இந்திய உளவு ஸ்தாபனமான றோ அடுத்த கட்டமாக இன்னொரு புரளியைக் கிளப்பினார்கள். அதாவது சாவகச்சேரி சந்தை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது தளபதி மாத்தயா அவர்கள் பலத்த காயப்பட்டு இறந்து விட்டார் என்பதே அந்தப் பிரசாரம் ஆகும். இந்தப் பிரசாரத்தின் நோக்கம் போராளிகளின் மனதில் தளர்ச்சியை உண்டாக்குவதற்காகவே மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளையில் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட யுத்தகைதிகளின் கழுத்தில் ரயர் மாட்டப்பட்டு யாழ்ப்பாணம் நாகவிகாரைக் காணியில் உயிரோடு எரிக்கப்பட்டனர் என்ற வதந்தியையும் பரப்பினார்கள்.

இந்த வதந்தியைப் பரப்பியதன நோக்கம் இந்திய இராணுவத்தினரை வீறு கொள்ளச் செய்து மூர்க்கத்தனமான அழிவு வேலைகளைச் செய்விக்கவே இவ்வாறு வதந்திகளைப் பரப்பினார்கள்

இந்த வதந்திகள் பரப்பப்பட்டு ஒரு சில நாட்களில் தளபதி மாத்தையா அவர்கள் சாவகச்சேரியில் வைத்து நல்லெண்ண அடிப்படையில் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட இராணுவ சிப்பாய்களை ஒப்படைத்து பரப்பப்பட்ட சகல வதந்திகளுக்கும் ஆப்பு வைத்தார்.

## தலைவரின் மகள்

கடந்த இரண்டு வருட காலத்தில் இன்னொரு வதந்தி தலைவர் பிரபாவின் மகள் துவாரகா பற்றியும் றோ அதிகாரிகளால் பரப்பப்பட்டது. இந்தச் செய்தி இந்தியா பூராவும் பரப்பப்பட்டது.

## தலைவர் பற்றிய வதந்தி:

இந்திய றோ அதிகாரிகளாலும் அவர்களது அடிவருடிக் கும்பல்களாலும் பரப்பப்பட்ட வதந்திகளில் மிக மோசமானதும் அபாண்டமானதும் தலைவர் பிரபாகரன் இறந்து விட்டார் என்ற வதந்தியாகும்.

இந்த வதந்தியை முதலில்இந்திய வானொலிதான் ஒருநாள் மாலை பி.ப. 5.30 மணியளவில் வெற்றிமாலை நிகழ்ச்சியில் குறிப்பிட்டிருந்தது. அதைத் தொடர்ந்து இந்திய வானொலி செய்திகளிலும் இந்தச் செய்தி அடிக்கடி ஒலிபரப்பப்பட்டது.

முன்னாள் மாகாண சபையின் முதல் அமைச்சர் பெருமாள் தமக்கு நம்பத் தகுந்த வட்டாரங்களிலிருந்து கிடைத்த செய்திகளின்படி தலைவர் பிரபாவின் உடல் வவுனியா மாவட்டத்தில் ஆனந்தப் புளியங்குளம் என்ற இடத்திலே இருப்பதாகவும் இதனால் காட்டுக்குள் விடுதலைப் புலிகள் இரு கோஷ்டிகளாகப் பிரிந்து தமக்குள் மோதிக் கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக பத்திரிகையாளர் மாநாட்டில் கொழும்பில் நிருபர்கள் முன்னால் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்து முதலியிடம் கேள்வி எழுப்பிய போது தமக்குக் கிடைத்த இரகசிய பொலிசாரின் அறிக்கையின் படி தலைவர் பிரபா இப்போது உயிருடன் இல்லையென்று குறிப்பிட்டிருந்தார்.

இந்தச் செய்தியை ஏன் பரப்பினார்கள்? றோ விடுதலைப் புலிகள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த விரும்பியது. எப்படி எல்லா இயக்கங்களுக்குள்ளும் புகுந்து அந்த இயக்கங்களை சிதறடித்தது போல விடுதலைப்புலிகள் இயக்கத்திலும் றோ நுழைய முடியவில்லை.

ஆகவே இப்படி ஒரு செய்தியை பரப்பி போராளிகளை மோதவைக்கலாம் என்ற நப்பாசையில்தான் இதனைச் செய்தது. அத்தோடு விடுதலைப் புலிகளுக்கு பின்னால் மக்கள் சக்தி திரண்டு நிற்பதையும் மக்கள் மனதில் குழப்பத்தை ஏற்படுத்தி விடுதலைப் போராட்டம் தொடர்பாக மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையீனம் ஒன்றை உருவாக்கவே இந்தச் செய்தியைப் பரப்பினார்கள். ஆனால் விடுதலைப்புலிகள் வீடியோபடங்கள்மூலம் தலைவரது படங்களையும் அவர் தமது மரணம் பற்றி பத்திரிகைகளில் வெளியான செய்தியைப்படிப்பதையும் பார்த்த பொது மக்கள் எதிரிகள் பரப்பிய வதந்தியையிட்டு ஆத்திரமுற்றதோடு தெளிவும் பெற்றனர்.


## சகலதும் தெளிவு:

அண்மையில் 1990 ஏப்ரல் முதலாம் திகதி தலைவர் பிரபா பத்திரிகையாளர்களை யாழ்ப்பாணத்தில் சந்தித்ததைத் தொடர்ந்து இப்போது சகலதும் தெளிவுப்படுத்தப்பட்டு சகல வதந்திகளுக்கும் ஆப்பு வைக்கப்பட்டுவிட்டது- □

எதிரியின் பாசறைக்குள்
இன் முகம் காட்டி நிற்கும்
துணிவு தான் என்னே... வேங்கை
துவளுதல் எங்கு முண்டோ?



கைதிகள் ஒப்படைப்பில்
மாத்தயாவும் பிரிகேடியர் கில்லனும்.



"இந்தியாவின் பொய்ப் பிரசாரத்தின் உண்மை நிலையை நேரில் அறிய வந்த வை. கோபாலசாமி (தி. மு. க. எம் பி) கானகத்தின் மத்தியிலே புலிகளைச் சந்திக்கின்றார்."

## பத்திரிகையாளர் மகாநாட்டில் தலைவர்கள்



மாண்டதாய்ச் சொன்னவர் தாண்டினர் கடலையே
மற்றையோர் அவர்களின் வால்களைத் தொற்றினர்
மீண்டதோ வேங்கைகள், மீளவும் புதுயுகம்
கண்டதோ தாயகம், கனவிது வல்லவே.

யில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"புலிகள் புத்திசாலிகள்......
பயங்கரத் திறமையுள்ள......
பலமான எதிரிகள்......
யுத்த தந்திரோபாயமிக்கவர்கள்

என்று பதில் கொடுத்தார். யாழ்ப்பாணத்தில் இருந்த இந்திய இராணுவ அதிகாரிகள் இப்படிச் சொல்ல அந்த வேளையில் கிழக்கிலங்கையில் இந்தியப்படைகளின் ஒரு பிரிவுக்குப் பொறுப்பாகவிருந்த பிரிகேடியர் இராமசாமி லோகநாதன் பின்வருமாறு விடுதலைப்புலிகளைப் பற்றிக் கூறினார்.


**உலகத்தில் உள்ள எந்த இராணுவத்துடனும் மோதக் கூடிய ஆற்றலும் வல்லமையும்பெற்றவர்கள் தாங்கள் என்பதை இப்**

டது. இந்தச் செய்தி இந்தியா பூராவும் பரப்பப்பட்டது. இந்திய வானொலிமட்டுமன்றி வெரித்தாஸ் வானொலியும் இச் செய்தியை ஒலி பரப்பியது. பிரபல தலைவர்களையே நம்பவைக்கக் கூடிய அளவில் செய்தி பரப்பப்பட்டது.


அண்மையில் தலைவர் பிரபாகரன் அவர்களும் தானே தனது மகளது செய்தியைக் கேட்டு அது பற்றி ஆராய முனைந்ததாகவும் தலைவரின் மனம் புண்பட்டு விடும் என்பதற்காக சகபோராளிகள் அதனைக் குறிப்பிடாமல் விட்டிருக்கக் கூடும் எனத் தாம் கருதியதாகவும் பத்திரிகையாளர் மகாநாட்டில் குறிப்பிட்டார்.

**அருண் பிரசாத்**

கைதிகள் ஒப்படைப்பில் மாத்தயாவும் பிரிகேடியர் தில்லரனும்.



"புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் கனரக ஆயுதங்கள் பாவிக்கவில்லை என்று சொல்லிக் கொண்டு இந்திய இராணுவம் பாவித்த யுத்த டாங்கி ஒன்று, புலிகளின் கண்ணி வெடிக்கு இலக்காகி சிதறுண்டுள்ள காட்சி"



விடுதலைப் புலிகளிடம் 700 ஆயுதங்கள் மட்டுமே இருப்பதாக தம்மிடம் "றோ" கூறியதாக லெப். ஜெனரல் ஏ. எஸ். கல்கத் குறிப்பிட்டுவிட்டு: தாம் 2000 ஆயுதங்களை மீட்டு எடுத்ததாகவும் மேலும் சொன்னார். ஆனால் விடுதலைப்புலிகளிடம் ஆயுதங்களைப் பறிக்க முயன்ற போது எத்தனை ஆயுதங்களை இந்தியா பறிகொடுத்தது என்ற விபரத்தை எவருமே வெளியிடவில்லை. விடுதலைப் புலிகளிடம் தேசிய இராணுவம் அம்பாறை மாவட்டத்தில் பறிகொடுத்த ஆயுதங்களின் ஒரு பகுதியைத்தான் இங்கே பார்க்கிறீர்கள்.